


# கண்ணகை அம்மன்

## பத்ததியும் பாடல்களும்

தொகுப்பு

கண. ஆறுமுகம்

கண்ணகை அம்மன்

# பத்ததியும் பாடல்களும்

தொகுப்பாசிரியர்

கண.ஆறுமுகம்

# விபுலம் வெளியீடு 15

## -நூல் தரவுகள்-


| | |
|---|---|
| நூற்பெயர் | : கண்ணகை அம்மன் பத்தியும் பாடல்களும் |
| வகை | : சமய இலக்கியம் |
| தொகுப்பாசிரியர் | : கண. ஆறுமுகம் |
| பதிப்பு | : 1ம் பதிப்பு (வைகாசித் திங்கள் 2008) |
| பிரதிகள் | : 1500 |
| கணணி எழுத்தமைப்பு | : வே.பிரபாகரன் |
| அட்டை வடிவமைப்பு | : வே.பிரபாகரன் |
| அச்சுப் பதிவு | : சண் அச்சகம் இருதயபுரம் மட்டக்களப்பு |
| பக்கங்கள் | : xxxii + 131 |
| விலை | : ரூபா 225 /= |

Vipulam Publication
No:7, Gnanasooriyam Squar,
Batticaloa, Srilanka.
Phone:065 2223639

Aghram Book Centre
82, Bar Road, Batticaloa Srilanka.
Phone:0602643986

# கண்ணகை அம்மன்
## பத்ததிகளும் பாடல்களும்

### அறிமுகமாகச் சில குறிப்புக்கள்.......

பேராசிரியர் சி. மௌனகுரு
தலைவர் - நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

ஒரு சமுகத்தினை இனத்தினை அல்லது ஓர் இனக்குழுமத்தினைத் அறிந்துகொள்ள அவற்றின் பண்பாடு நடத்தை உளவியல்களைப் புரிந்து கொள்ள அச்சமூகத்தின் இனத்தின் அல்லது இனக்குழுமத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள தொன்மங்கள் (myth) உதவுகின்றன.

தொன்மம் என்பதற்கு இயற்கை அல்லது வரலாற்றுக்கூறு தொடர்பான செய்திகளை உட்கொண்டதும் இயற்கையிகந்த செயல் நிகழ்ச்சி பற்றியதுமான பொய்யான புனைந்துரை என்று வரைவிலக்கணம் தரப்படுகின்றது. பொய்யான புனைந்துரையாயினும் அதற்குள் அச்சமூகத்தின் வரலாறு இயற்கை பற்றிய அச்சமூகத்தின் நோக்கு என்பன ஆழமாகப் புதைந்து கிடக்கும். இப்புனைந்துரைகள் அரசர் பற்றியும் இருக்கும் தெய்வம் பற்றியும் இருக்கும். அரசர் பற்றி வருவனவற்றை பழமரபுக் கதைகள் (legend) என்றும் தெய்வம்பற்றியுள்ளவற்றை தொன்மங்கள் (myth) என்றும் குறிப்பிடுவர்.

இத்தொன்மங்கள் மிகப் பழமையானவை சமூகத்தின் அடிமனதில் ஆழப்பதிந்தவை. அச்சமூகத்தை உள்நின்றியக்கும் சக்திவாய்ந்தவை. உண்மையைவிடத் தொன்மம் சக்திவாய்ந்தது(myth is very powerful than truth) என்பர் தொன்மத்துக்கான உயிரைக்கூடக் கொடுப்பர். இத்தொன்மங்கள் வாய்மொழியாகவும் வழக்கிலிருக்கும்.

எழுத்து மொழியிலுமிருக்கும் தொன்மங்கள் வாய்மொழியாக இருந்து எழுத்து மொழி பெற்றனவேயாம்.

தமிழர் மத்தியிலே இராமாயணம் மகாபாரதம் புராணங்கள் போன்ற வடநாட்டுக் தொன்மங்களும் மாரியம்மன் காளியம்மன் காத்தவராயன் கண்ணகி அம்மன் போன்ற தமிழ் நாட்டுத் தொன்மங்களும் வழக்கிலுள்ளன. தமக்கெனத் தனித்துவமான பண்புகளை இத் தழிழ்த் தொன்மங்கள் கொண்டிருப்பினும் வரலாற்றோட்டத்தில் இவை வட நாட்டுத்தொன்மங்களுடன் இணைக்கப்பட்டும் பிணைக்கப்பட்டும் வளர்த்தெடுக்கப்பட்டும் வந்துள்ளன. தமிழ் நாட்டுத் தொன்மமான முருகனை கார்த்திகேயனுடன் இணைத்தமை இதற்குச் சிறந்த உதாரணமாகும். இவ்விணைப்பு சங்ககாலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டும் விட்டது.

தமிழகத்திலும் கேரளாவிலும் இலங்கைவாழ் சிங்கள தமிழ் மக்கள் மத்தியிலும் ஆழவேரூன்றியுள்ள ஒரு தொன்மமாக நாம் கண்ணகி கதையினைக் கருதலாம். இத்தொன்மத்துக்கு ஒரு நீண்ட வரலாறுண்டு. வாய் மொழியாக வழக்கிலிருந்த ஒருமுலை இழந்த பெயர் தெரியாத ஒரு பெண்ணின் கதை "ஒரு முலையறுத்த திருமாவுண்ணி" என்று சங்க இலக்கியமான நற்றிணையில் பதிவு செய்யப்பட்டு அது பின் சிலப்பதிகாரமாக அலர்ந்து. கண்ணகி வழக்குரையாக மலர்ந்த ஒரு பெரும் வரலாறு இக்கண்ணகி தொன்மத்துக்குண்டு.

சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித் தெய்யோ எனவும் வடபகுதி மக்களிடையே (முல்லைத்தீவு) அம்மாளாச்சி எனவும் கிழக்கிலங்கைத் தமிழ் மக்களிடையே கண்ணகை அம்மன் எனவும் அழைக்கப்படும் இத்தெய்வம் பற்றிய தொன்மங்கள் பற்றி பேராசிரியர் கணநாத் ஒபயசேகர செய்த (The goddes pathini) என்ற ஆய்வேஅதுவரை ஓர்ஆதாரபூர்வமான ஆழமான ஆய்வாகத் திகழ்கின்றது.

கிழக்கிலங்கையின் கண்ணகையம்மன் பற்றி வீ.சி கந்தையா, எவ். எக்ஸ். நடராஜா, சற்குணம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, மகிழைமகேசன், வெல்லவூர்க்கோபால், வினாயகமூர்த்தி, ஈழத்துப்பூராடனர், சிவசுப்பிரமணியம் போன்றோர் சிற்சில கட்டுரைகள் ஆங்காங்கு எழுதினரேனும் ஆழமான ஆய்வுகள் இன்னும் கிழக்கிலங்கைக் கண்ணகை அம்மன் பற்றிச் செய்யப்படவில்லை. ஆவ்வாய்வாளரை அல்லது ஆய்வாளர்களை கிழக்கிலங்கை எதிர் பார்த்திருக் கின்றது. இந் நிலையில் ஆய்வின் முதற்படியாக கிழக்கிலங்கையின் கண்ணகை அம்மன் பற்றிய செய்திகளும் கதைகளும் வழிபாட்டு முறைகளும் பாடல்களும் தொகுக்கப்படுதல் அவசியமான ஒரு செயலாகும்.

ii

கிழக்கிலங்கை பெண்தெய்வ வழிபாட்டினை இன்னும் ஆழமாகப்பேணிவரும் பிரதேசமாகும். மாரி, காளி திரௌபதை கண்ணகை என்பன இங்குள்ள முக்கியமாான பெண் பெரும் தெய்வங்களாகும். இந்து நாகரிகத்துறைசார் கல்லியியலாளர்கள் இவற்றைச் சிறு தெய்வங்கள் என்ற சிமிழுக்குள் அடைக்க எத்தனிப்பினும் மட்டக்களப்பு மக்களுக்கு இவையாவும் பெருந்தெய்வங்களே. தெய்வங்களுள் பெரும்தெய்வம் சிறுதெய்வம் என்ற பாகுபாட்டினை மானிடவியல் மாத்திரமின்றி ஆழமான ஆன்மீகம் கூட மறுக்கிறது இப்பெண்பெரும் தெய்வங்கள் மத்தியில் கண்ணகையம்மன் வழிபாடு வைகாசிமாதத்தில் மட்டக்களப்பில் பெரும்தேசியச் சமய விழாவாகவே கொண்டாடப்படுகின்றது. மட்டக்களப்பின் பெரும்பாலான கிராமங்களெல்லாம் இக்காலகட்டத்தில் வேற்றுருக்கொண்டு காணப்படும்.

ஆரம்பத்தில் **மூன்று** கண்ணகை அம்மன் கோயில்களே இருந்தன என்பதை ஒரு பாடல் காட்டுகின்றது. (பொற்புறா வந்தகாவியம்) பின்னால் எட்டு கண்ணகையம்மன் கோயில்கள் இருந்தன என்பதை இன்னொரு பாடல் சுட்டுகிறது.

V

*(அங்கணாமைக்கடவை கண்ணகியம்மன் காவியம்) அதன் பின்னர் **ஒன்பது** கண்ணகை அம்மன் ஆலயம் பற்றி இன்னொருபாடல் கூறுகின்றது. அதன்பின்னர் **பதின்மூன்று** கண்ணகை அம்மன் கோயில்கள் பற்றிக்கூறுகிறது. மற்றொருபாடல் (கண்ணகை அம்மன் குளுர்த்திப் பாடல்),(வழக்குரை காவியம்) **பதினைந்து** கண்ணகிஅம்மன் ஆலயங்களில் வாழும் கண்ணகியை வேண்டுவதாக இன்னொருபாடல் உள்ளது. (மழைக்காவியம்) இன்று கிழக்கிலங்கையில் **நாற்பத்தி ஏழு** கண்ணகை அம்மன் கோயில்கள் இருப்பதாக தகவல் கிடைக்கின்றது. (மட்டக்களப்பில் ஆகமமுறை சார்ந்த ஆகமமுறைசாராத வழிபாடு m.phil ஆய்வுக்கட்டுரை) ஏழிலிருந்து நாற்பத்தி ஏழு வரைஎன்பது கிழக்கிலங்கையில் கண்ணகை அம்மனுக்கிருக்கும் செல்வாக்கினைச்சுட்டி நிற்கின்றது. 19 ம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் காலம் தொடக்கம் 20 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை காலம்வரை சமணச்சி என்றும் செட்டிச்சி என்று சைவமரபில் புறக்கணிப்பிற்குள்ளான கண்ணகை அம்மன் வழிபாடு ஏன் மட்டக்களப்பில் இத்தனை செல்வாக்குற்றது. மட்டக்களப்பினது சமூக அமைப்பின் பின்னணியா அல்லது கண்ணகி சிவனுடனும் பார்வதியுடன் இணைக்கப்பட்டுச் சைவமதத்தினுள் உள்வாங்கப்பட்டமையா? இவை ஆய்விற்குரியவை எனினும் சுவாமி விபுலானந்தர் காரைதீவுக் கண்ணகை அம்மன் பாரம்பரியத்தில் இருந்தே உருவானவர் என்பது மனதிலிருத்தவேண்டிய ஓர் செய்தியாகும். இக் கண்ணகை அம்மனை வழிபடஎழுத்தில் அமைந்த இரண்டு ஆவணங்கள் மட்டக்களப்பில் உள்ளன. ஒன்று பத்ததி இன்னொன்று பாடல்கள். பத்ததியைச் சிலர் பத்தாசி என அழைப்பர். பத்தாசி என மக்கள் மத்தியில் வழங்கி வந்த இயல்பான சொல் பத்ததி என உயர் தன்மை பெற்றதோ என்பது ஆய்விற்குரியது.*

*கோயில் கிரியைசெய்யும் முறைகளை ஒழுங்காக எடுத்துரைக்கும் ஆவணமே பத்ததி ஆகும். சைவத்திருக்கோயில் கிரியைகள் ஆகம பத்ததிமுறையில் நடத்தப்படுவது அனைவரும் அறிந்ததே. இதே போல அம்மன்கோயில் கிரியைகளுக்கும் ஆகமமுறைபோன்ற பத்தாசி உண்டு. ஆகமமுறை சார்ந்த பத்ததியும் ஆகமமுறைசாராப் பத்ததியும் ஒன்றுபோலத் தோற்றமளிப்பினும். இரண்டிற்குமிடையே தனித்தனிப் பண்புகளும் தனித்துவங்களும் உள்ளன. என்பதனை நாம் மனங்கொள்ளல் வேண்டும்*

*ஆரம்பத்தில் இப்பத்தாசிகள் அல்லது பத்ததிகள் வாய்மொழியாகப் போதிக்கப்பட்டு பின்னால் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம்.அம்மன் பத்ததிகள் ஆலய அமைப்பு, கும்பங்கள், நிவேதனப்பொருட்கள், அடையாளப்பொருட்கள், வாத்தியக்கருவிகள், வேண்டுதல் நிறைவேற்றும் முறைகள், கன்னிமார்பூசை, தெய்வமாடுதல், பூசைமுறைகள் என்பவற்றை விரிவாக எடுத்துக் கூறுவன. இவற்றைச் செய்பவர்கள் கப்புகன், கட்டாடி, பூசகர், குருக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்*

iii

*கண்ணகை அம்மன் பத்ததி ஏனைய அம்மன் பத்ததிகளிலிருந்து வேறுபட்டது .கூனற் பலகை விதிமுறை இவ்வித்தியாசங்களுள் ஒன்று கண்ணகை அம்மனின் வரலாறு உரைத்த விதிமுறைகள் கூறுவது இது. கண்ணகி அம்மன் பத்ததி கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டு விதிமுறைகளைக் கூறுகின்றது.*

*கண்ணகை அம்மன் பத்ததியில்*

1) *கூனற் பத்ததி*
2) *குளக்கட்டுப் பத்ததி*
3) *கொம்புப் பத்ததி*
4) *கன்னிமார் பத்ததி*
5) *வேடப்பத்ததி* *எனப்பல பத்ததிகள் வழக்கிலிருந்ததாகவும் அறிகிறோம்.*

கதவுதிறத்தல்,படிகடத்தல்,விளக்குஏற்றல்,மடைவைத்தல், சிங்காசனம்வகுத்தல், சிங்காசனம்ஏற்றல்,ஓமம்வளர்த்தல் எனப்பெருமளவு அடிப்படையில் இக் கண்ணகையம்மன் பத்ததிகளுக்கிடையே ஒற்றுமைகள் காணப்படினும் இடத்துக்கிடம் வேறுபட்டுக் காணப்படும் பொருளாதார அடித்தளம் இயற்கைச்சூழல் காரணமாகச் சிற்சில கிரியை முறைகளைச்சேர்த்தும் மாற்றியும் செய்ய முயன்றபோது வெவ்வேறுபத்ததிகள் தோன்றியிருக்கலாம். குறிப்பிட்ட கோயிலிற் பின்பற்றப்படும் பத்ததியினை அக்கோயில் சார் சமூகத்துடனும் இடத்துடனும் சேர்த்துப்பார்க்கையில் இது பற்றி மேலும் தெளிவு பெறலாம்.கண்ணகை அம்மனுக்குரிய வைகாசிப்பூரணை நாள் எதுவெனக் குறிக்கையிலும்; மடைப்பெட்டி விடயத்திலும், கலியாணச்சடங்கு நடத்தும் முறையிலும், நாட்களிலும் வேறுபாடுகள் இருப்பதனை இப்பத்ததிகள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்துப் படிப்போர் அறிந்து கொள்வர்.

பத்தாசிகள் எனப்படும் இப்பத்ததிகளை ஆகமமுறைப் பத்திகளுடன் ஒப்பிட்டு நோக்கும் ஒரு பண்பும் பலரிடம் காணப்படுகிறது. கீழ் வரும் ஒப்பீடு இதனைக்காட்டும்.

| <u>ஆகமமுறை</u> | | <u>பத்தாசி அல்லது பத்ததிமுறை</u> |
|---|---|---|
| ஆவாகனம் | ........ | தம்பனம் |
| ஆபரணபூசை | ....... | கொலுஅடுக்குச் சாத்தல் |
| ஓமம் வளர்த்தல் | ...... | அக்கினிபூசை |
| பரிவாரதெய்வம் | ........ | காவல்காரர் |
| வாஸ்துசாந்தி | ......... | மண்டபம்காவல் |
| ஆசாரியஅபிடேகம்..... | | படிகடத்தல். |

ஆகமமுறையுடன் ஒப்பிட்டு பத்ததிகளிடமும் அம்முறை உண்டு என்று பெருமைதேடுவதைவிட பத்ததிகளைத் தனித்துவமுடையதாக நோக்கும் முறை பத்ததிகளை மேலும் புரிந்து கொள்ள எமக்கு உதவக்கூடும்.பத்ததியில் அமைந்த இக்கிரியை நெறிகளை நடத்துபவர் கட்டாடியார் எனப்படுகின்றார்.

கப்புகன், (காரைதீவு) பூசாரியார், குருக்கள் எனவும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

1) தாய்வழி உரிமையாகவும்
(மாமனுக்குப் பிறகு மருமகன்)
2) சகோதரன் வழியாகவும்
(தமையனுக்குப்பின் தம்பி)
3) உரித்துடையோர் முறையிலும்
4) பயிற்றுவிக்கப் படுவோர் முறையிலும்.

மேற்சொன்ன பூசை நடத்துனர்கள் தெரிவுசெய்யப்படுவர். மேற்குறிப்பிட்டபடி இறங்கு நிரைப்படி ஒன்றில்லாவிடில் அடுத்தது கருத்தில் எடுக்கப்படுகிறது.

கட்டாடியின் தோற்றத்திற்கெனச் சில விதிமுறைகள் உண்டு. அவர் உத்தரியம் அணிந்து தலைப்பாகை கட்டி ஏகாவடம்பூண்டு இருக்கவேண்டும். இக்கிரியை நெறிகளைப் பூரணமாகத் திறம்படச் செய்கின்ற பூசகர் கொண்ட கோயில்களுமுண்டு. இவற்றை அரைகுறையாக அறிந்து பூசை செய்கிற அரைகுறைப் பூசகர்களுமுண்டு

சமஸ்கிருத மயமாக்கம் மிக வேமாகப் பரவி அம்மன் கோவில்கள் யாவும் இராஜராஜேஸ்வரி கோயில்களாகவும் கோயில் நிருவாகம் எல்லாம் தேவஸ்தானமாகவும் கண்ணகை அம்மன் சடங்குகளெல்லாம் கண்ணகி உற்சவம் என்றும் மாறிவரும் இக்கால கட்டத்தில் பூசகர்களின் செயற்பாடுகளும் தோற்றமும் கூட சமஸ்கிருதமயமாகி வருவதனை இன்று கிழக்கிலங்கையில் அவதானிக்கக் கூடியதாவுள்ளது.

## iv

இப் பின்னணியில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கண்ணகையம்மன் பத்ததிகள் யாவும் தொகுக்கப்படுதல் அவசியமாகும். இங்கு கன்னன்குடா கண்ணகை அம்மன் ஆலயத்தில் வழக்கிலுள்ள கூனற் பத்ததி அச்சில் முதன்முறையாகப் பிரசுரமாகிறது.

பத்ததி அகவலோடு ஆரம்பமாதல் மரபு. குறிப்பிட்ட தெய்வம் பற்றி கூறி அதன் வரலாறு கூறி அத்தெய்வத்திற்குரிய கிரியை முறை கூறி

இந்த விதியாலியற்றினார் பூசை
இந்திரன்போல இருந்து வாழ்வாரே.

என்று அகவல்முடியும். பின்னால் கிரியை முறைகளைப் பத்ததி விதிப்படி எடுத்து விளக்கும்.இப்பத்ததியினுள் அகவல், குளுர்த்தி, வரலாறு, என்பவற்றுடன் பஞ்சகவியம் கூட்ட, கதவு திறக்க, படி கடக்க, விளக்குக்கு எண்ணெய் வார்க்க, திரியேற்ற, மடைகட்ட, முழுக்குப் பண்ண, சிங்காசனம் வகுக்க, சிங்காசனம் ஏற்ற, அகோரமெழுப்ப, ஓமம் வளர்க்க, பால் வார்க்க, அமிர்தம் கொடுக்க, இன்னின்னவாறு செய்யவேண்டும் இதனிதற்கு இன்ன இன்ன மந்திரம் சொல்லவேண்டும் என்று கூறிச்செல்கின்றது. இதில்வரும் மன்றாட்டு முக்கியமான ஒன்றாகும். ஆரம்பத்தில் மன்றாட்டமே பூசைமுறையாக இருந்திருக்கவேண்டும். பின்னாளில் அதுவே கிரியைமுறைகள் புகுத்தப்பட்டு விதியுடைய பத்ததியாக மாறியிருக்கவேண்டும் இப்பத்ததியில் கண்ணகை அம்மன் காளியுடனும் பார்வதியுடனும் ஏனையதெய்வங்களுடனும் பெரும் தெய்வக் குடும்பத்துள் கொண்டுவரப் படுவதைக் காண்கிறோம். இவ்வரலாற்று வளர்ச்சியை அறிந்துகொள்ள இப்பத்ததி நமக்கு உதவுகின்றது.

V

கண்ணகை அம்மனுக்குரிய கிரியைகளோடு மக்களை கண்ணகை அம்மன் வழிபாட்டில் இணைத்துக்கொள்ள கண்ணகி பற்றிய பாடல்கள் உதவுகின்றன. கண்ணகை அம்மன் கோயிற்சடங்கு நாட்களில் கண்ணகி வழக்குரை படிக்கப்படுவது வழமை கண்ணகையம்மன் கோயிலைப் பொறுத்தவரை ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது நாட்கள் சடங்குகள் நடைபெறும். அது ஊர்வசதியையும் பாரம்பரியத்தையும் பொறுத்தது. பெரும்பாலான ஊர்களில் ஐந்துநாட் சடங்கே நடைபெறும்.

முதலாம் சடங்கு தொடக்கம் இறுதி நாள் வரை கண்ணகி வழக்குரை பாடப்படும். கதவு திறத்தல் அன்றே இது ஆரம்பமாகும். கலியாணக்கால் சடங்கு நடக்கும் அன்று கலியாணக் கதை படிப்பு நடக்கும். பச்சைக்கட்டுச் சடங்கு அன்று அடைக்கல கதை பாடப்படும். வழக்குரை பாடுவது சடங்கின் ஒருபகுதி. சடங்கு நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இதனைச் சுருக்கியும் விரித்தும் பாடுவர்.

சடங்கின் இறுதிநாள் குளுர்த்தி நடைபெறும். அம்மனின் கோபம் தணிவிக்க செய்யப்படும் சடங்கே குளுர்த்தி. குளுர்த்திப்பாடல் எளிமையும் இனிமையும் ஓசை ஒத்திசைவும் கொண்ட இனியபாடல்கள். உடுக்கொலியும் சிலம்பின் பின்னணியும் அதற்கு ஒரு தனியழகுதரும். குளுர்த்திப்பாடலின் முற்பகுதி கண்ணகை அம்மன் வரலாறு கூறுவதாகவும். பிற்பகுதி கோபம் ஆறக் குளிர்ந்தருளுமாறு வேண்டுவதாகவும் அமைந்திருக்கும்.

கண்ணகை அம்மன் அகவல் ஒவ்வொரு நாளும் பூசைமுடிந்ததும் கட்டாடியாரால் பாடப்படும். இந்த அகவலைக் கட்டாடியார் மாத்திரமே பாடுவார். வேறு எவரும் பாடுவதில்லை பாடலுக்குப் பின்னணியாக எந்தவாதியமும் பயன்படுத்தப் படுவதில்லை. அகவல் தவிர உடுக்குக் காவியம் என்ற ஒன்றும் சிலகோயில்களில் பூசைக்குப் பிறகு பாடப்படும். இவை தவிர கண்ணகை அம்மன பற்றிய பாடல்கள் பல பல்வேறு ஊர்ப்புலவர்களால் பல்வேறு காலங்களில் இயற்றப்பட்டுள்ளன.

vi

இத் தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ள கண்ணகை அம்மன் பாடல்களை இரு பிரிவுக்குள் அடக்கலாம்

*1) கண்ணகை அம்மன் பற்றிய பொதுவான பாடல்கள் ஒரு பிரிவு. இவற்றுள் குளுர்த்தி, கலியாணக்கால் வெட்டுதல், ஊர்சுற்றுக் காவியம், வழக்குரை காவியம், கண்ணகை அம்மன அகவல், பிரார்த்தனை போன்றவை அடங்கும்.*

*2) தனிப்பட்ட கண்ணகை அம்மன் கோயில்களுக்குரிய பாடல்கள் இன்னொரு பிரிவு இவற்றுள் பொற்புறா வந்தகாவியம் அங்கணாமைக்கடவை கண்ணகி அம்மன் காவியம், பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக் காவியம், கன்னன்குடா கண்ணகி அம்மன் காவியம் போன்றவை அடங்கும்.*

*இப்பாடல்கள் மூன்று வகையில் முக்கியமானவை.*
*1)இப்பாடல்கள் மூலம் கிழக்கிலங்கைக்கும் கண்ணகை அம்மனுக்குமுள்ள உறவுகள் பற்றிய கிழக்கிலங்கை மக்களிடையே வழங்கிய தொன்மங்களை அறியமுடிகின்றது.*

*2)சிலப்பதிகாரம் கூறும் கதையைவிட கிழக்கிலங்கை மக்களிடம் வழங்கப்படும் கண்ணகை அம்மன் கதை பற்றி வளர்ந்துவந்த தொன்மக் கதைகளை அறியமுடிகிறது.*

*3)கண்ணகை அம்மன் இந்துமதத் தெய்வக் கூட்டங்களுடன் இணைக்கப்படுவது தெரியவருகிறது. அத்தோடு கண்ணகை அம்மன் சக்தியின் வடிவமாகவும் ஏனையசக்தி வடிவங்களான பார்வதி காளி துர்க்கை அவதாரமாகவும் காணப்படுவதனை அறியமுடிகின்றது.*

*<u>1)கிழக்கிலங்கை மக்களுக்கும் கண்ணகை அம்மனுக்குமுள்ள உறவுகள்</u>*

*பொற்புறா வந்த காவியத்தில் பல தொன்மங்கள் உரைக்கப்படுகின்றன. நான் முன்னரே குறிப்பிட்டபடி தொன்மங்கள் கற்பனைக் கதைகளாயினும்அவை வரலாற்றுக்*

கூறு தொடர்பான செய்திகளையும் தருவன ஆகும்.பொற்புறா வந்த காவியத்தில் கலியுக மூவாயிரம் முந்நூறில் வன்னியர்கள் ஆண்ட நாளில் இரண்டு சிற்றரசர்கள் இலங்கையை ஆண்டனர் என்றும், நாகமங்கலையென்ற அம்மன் பொற்புறாவாக இலங்கை வந்தாள் எனவும், அந்தப் பொற்புறாவைப் பிடிக்க மன்னன் ஏவலரை ஏவினான் எனவும், அவர்களால் அதனைப்பிடிக்க முடியாதுபோனபோது ஏழுகன்னியரை அனுப்பினால்தான் அவர்கள்கையில் தான் அகப்படுவதாக மன்னன் கனவில் நாகமங்கலையம்மன் உரைத்தாள் எனவும் ஏழுகன்னியரையும் அலங்கரித்து மன்னன் வாவிக்கரையனுப்ப அவர்கள் அங்கு நின்றபோது ஒருகன்னியின் கரத்தில் பொற்புறாவின் ஓர் இறகு வந்து வீழ்ந்ததெனவும் அதனை மன்னனிடம் அவர்கள் கொடுக்க அவன் நாகமங்கலை அம்மனுக்குக் கோயில் அமைப்பித்தான் எனவும் பின் இலங்கை நகர் முழுவதும் கண்ணகை அம்மன் சிலை கொண்டு செல்லப்பட்டு தம்பிலுவிலுக்கு கொண்டு வரப்பட்டதென்றும். தம்பிலுவிலில் மழுவரசன்வகுத்துவாரில் வந்த மங்கலப்போடி என்பவன் பூசகராக நியமிக்கப்பட்டான். என்றும் பின் இறக்காம நகரில் கங்குடாவெளியெனும் இடத்தில் அம்மன் கோயில் கொண்டாளெனவும் அம்மனின் ஆக்ஞைப்படி மடை வைப்பும் பூசைகளும் நடைபெற்றன. என்றும் பின்னர் பட்டிமேடுக்கு அவள் சென்றாள் எனவுமான பல விடயங்கள் கூறப்படுகின்றன.

கிழக்கிலங்கையில் கண்ணகை அம்மன் நிலைபெற்றுப் பரவியதையும் அதன் ஆரம்பத்தையும் இக்காவியம் கூறுகிறது. கஜபாகு மன்னன் மூலம் இலங்கை வந்த பத்தினி வழிபாடு இலங்கையின் பல பாகங்களுக்கும் பரவியது என்பதும் வரலாற்றுச் செய்தி பொற்புறா வந்த காவியம் கூறும் தொன்மத்தில் பல கற்பனைக் கதைகள்

காணப்படுகிறதாயினும் வரலாற்றுக் கூறுகள் பல இருப்பதும் அவதானித்தற்குரியது. ஆய்வாளருக்குரிய அரிய செய்திகள் இக்காவியத்தில் உள்ளன என்பதுதான் நான் இங்கு கூறவிழைவது

2) சிலப்பதிகாரக் கதையிலிருந்து விலகும் இடங்கள்

கண்ணகி வழக்குரையில் உரைக்கப்பட்ட பல தொன்மக்கதைகள் கண்ணகை அம்மன் வழக்குரை காவியத்தில் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.வழக்குரை காவியத்திலிருந்து கண்ணகி வழக்குரை பெருநூல் எழுந்ததா? அல்லது கண்ணகி வழக்குரை பெருங்காவியத்தின் சுருக்க வடிவம்தான் கண்ணகி வழக்குரை காவியமா? என்பன ஆய்வாளர் கவனத்திற்குக் கொணர்கிறேன்.

சிவனும் உமையும் கைலையில் இருக்கையில் பாண்டியமன்னனுக்கும் நெற்றிக்கண் இருப்பதாக உமை கூற, அதை அழிக்க அருகிலிருந்த நாகமங்கலை எனும் அணங்கை அவர்களனுப்ப அவள் மாங்கனி வடிவில் மாறன் (பாண்டியன்) அரண்மனைக்குவர, அவன் நெற்றிக்கண் மறைந்தது எனவும், மாங்கனியை அவன் ஒருபொற்பேழையில் வைக்க மறுநாள் அது பிள்ளையாக மாறியிருந்ததென்றும், அப்பிள்ளையால் பாண்டிய நாடு கெட்டிடுமென கணிதர் கூற அவன் அக்குழந்தையைப் பொன்னாற் செய்த பெட்டகத்தினுள் வைத்து வைகை ஆற்றில் விட்டான் என்றும், ஆற்றில் மிதந்து கடலுக்குள் வந்த அப்பேழையை மாசாத்துவான் எனும் பெருவணிகன் கண்டு அக் குழந்தையை எடுத்து கண்ணகி எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான் எனவும், அவளுக்குத் திருமணம் செய்வதற்கு நாகமணி பதித்த சிலம்பு அவசியம் எனக்கண்ட மாசாத்துவான் மீகாமனிடம் கூற அவன் வெடியரசனை வென்று நாக நாடுசென்று நாகமணி கொணர்ந்து கொடுக்க அதனை வைத்து சிலம்பு செய்து கண்ணகைக்கு அணிவித்தார் எனவும், சிலப்பதிகாரத்தில் வாராத பல

செய்திகள் வழக்குரை காவியத்தில் கூறப்படுகின்றன. இத் தொன்மங்கள் பழையனவா? பின்னால் சேர்க்கப் பட்டவையா? என்பது ஆய்விற்குரியது பழையவையாயின் இளங்கோவடிகள் ஏன் சிலப்பதிகாரத்தில் இதனைத் தவிர்த்தார் என்பதும் ஆய்விற்குரியது.

மாதவியே ஊர்வசி என்பதும், கோவலன் வாசித்த யாழ் நாரதர் என்பதும், மாதவி பெற்ற தலைக்கோல் இந்திரன் மகன் சயந்தன் என்பதும், சாபத்தால் இவர்கள் பூமியில் பிறந்து கண்ணகை வாழ்வுடன் இணைந்தனர் என்பதுமான தொன்மங்களும் இவ்வழக்குரை காவியத்தில் இடம்பெறுகின்றன. கண்ணகி சேரநாடு சென்று தெய்வீகமுற்ற கதை இங்கு உரைக்கப்படாமை கவனிப்பிற்குரியது. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டம் இளங்கோவடிகளால் பாடப்படவில்லை என்ற கதையும் இங்கு கவனித்தற்குரியது.இடையர்சேரியையும் ஏழை மக்களையும் கண்ணகை அம்மனையும் இறுகப்பிணைக்கும் வரிகள் பாடல்களில் இழையோடுகின்றன. எல்லா இடமும் எரிபரவ வைத்த கண்ணகை திருகி எறிந்த முலைப்புண்ணில் வெண்ணெய் அள்ளித் சேரிப்பெண்கள் தப்ப மனதாறி அச்சேரிமக்கள் அம்மானை ஆடி அரும்பூசனை செய்ய மனம் மகிழ்ந்தாள் எனவும் இப்பாடல்கள் கூறுகின்றன. இவ்வகையில் மன்னர்கள் உயர்ந்தவர்கள் தெய்வமாக அன்றி மக்கள் தெய்வமாக கண்ணகை அம்மன் கட்டமைக்கப்படுகிறது.

பிராமணரும் பசுக்களும் பெண்டிரும் அழியக்கூடாது என இளங்கோவடிகள் எழுதிவைக்க இப்பாடல்கள் பாடிய புலவர்களோ

எச்சேரி வெந்தாலும் இடைச்சேரி வேகாமல்
பச்சேரி வெந்தாலும் பறைச்சேரி வேகாமல்

இருக்கப் பாடுகிறார்கள்.

அல்லற்பட்டு அழுத அடக்கப்பட்ட மக்களுக்கு கண்ணகை அம்மனை ஆறுதல் தரும் தெய்வமாக்குகிறார்கள்.

கண்ணகி கண்ணகை அம்மனாக கண்ணகி அம்மாளாச்சியாக மாறிய கதையினை இப்பாடல்களைக் கட்டுடைத்து அறியலாம். மட்டக்களப்பில் அமைக்கப்பட்ட மூன்று கண்ணகை அம்மன் தலங்கள் 47 ஆக மாறியமைக்கான காரணங்களுள் ஒன்று இங்கே காணப்படுகின்றது.

*3)<u>கண்ணகை அம்மன் இந்துத் தெய்வக்கூட்டத்துடனும் சக்திவடிவமாகவும் பார்வதியுடனும் இணைக்கப்பட்டமை</u>*

நாகமங்கலை அணங்குதான் கண்ணகை என்பதும் அவ்வணங்கு கைலையில் சிவனுடனும் பார்வதியுடனும் அருகில் இருந்தவள் என்பதும் சிவனால் தெரிவுசெய்யப்பட்ட ஒருத்தி என்பதும் சைவசமயத்திற்குள் கண்ணகியை இணைக்கும் ஒருமுயற்சி ஆகும்.

கண்ணகை அம்மன் அகவலில் கண்ணகைக்கு

எண்ணரிய பச்சை நிறத்தி
வாக்குவீரி வயிரவி
கூளி கணங்களுடனாடுகின்ற காளி
நளிநிறுமாணி நடனமிடும் பேச்சி
ஆதி அனாமி அபிராமி அம்பிகை.

எனப் போற்றப்படுகிறாள்.

இங்கு பார்வதி, காளி, அபிராமி, முதலாம் இந்துத் தெய் வங்களுடன் கண்ணகை அம்மனை இணைக்கும் போக்கு தென்படுகிறது.

இளங்கோவடிகள் சமணர் என்பதும் கண்ணகியைச் சமணச்சி என்பதுமான ஒரு கருத்தும் உண்டு.இதனாலேயே ஆறுமுகநாவலர் போன்றோர் கண்ணகி வழிபாட்டை சைவ வழிபாட்டுக்குள் சேர்க்கவில்லை.

கஜபாகு கொணர்ந்த பத்தினியும் இந்துமதம் சார்ந்தவளாயில்லை. ஆனால் கிழக்கிலங்கைக்கு வந்த கண்ணகையம்மனை கிழக்கிலங்கை இந்துப் பண்பாட்டினுள் இணைந்து விடுவதனைக் காணுகிறோம்.

*கண்ணகி வழக்குரையும் கண்ணகை அம்மன் பாடல்களும் நாட்டார் இலக்கியமன்று அவை உயர் இலக்கியமரபின. உயர் இலக்கிய மரபுக்கும் சமஸ்கிருதமயமாக்கத்திற்குமான உறவுகள் ஏலவே எனையோரால் கூறப்பட்டுள்ளன. கண்ணகை அம்மன் சேரி மக்கள் தெய்வ நிலையினின்றும் உயர் மக்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டபோது இத்தகைய சமஸ்கிருதமயமாக்கங்கள் நடைபெற்றிருக்கக்கூடும். கண்ணகை அம்மன் கோயில்கள் மூன்றாக இருந்து மிக அதிகமாக வளர்ந்தமைக் குரித்தான காரணங்களுள் ஒன்றாக இதனையும் கொள்ளலாம்.*

## vii

*கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள கண்ணகை அம்மன் வழிபாட்டின் பன்முகக் கூறுகள் இதனை நிரூபிக்கும். கிழக்கிலங்கையில் 3 நிலைகளில் கண்ணகை அம்மன் வழிபாடுகள் நடைபெறுகின்றன.*

*1) பத்தினி வழிபாடு*

*பாலம்பட்டாறு போன்ற இடம் வரையுள்ள கண்ணகை அம்மன் வழிபாடும் வேடர் மத்தியிலுள்ள பத்தினிஅம்மன் வழிபாடும்.*

***2) கண்ணகை அம்மன் வழிபாடு***

*மட்டக்களப்பில் கிராமிய மக்களிடம் வழக்கிலுள்ள வழக்குரையுடனும் குளுர்த்தியுடனும் இணைந்த கண்ணகை வழிபாடு*

***3) சமஸ்கிருதமயமாக்கத்திற்குள்ளகி ஆகம நெறிக்குட்பட்ட கண்ணகை அம்மன் வழிபாடு***

*காரைதீவு கண்ணகை அம்மன் கோயிலும் இன்று மாறிவரும் சில கோயில்களும்*

சமணத் தெய்வமான கண்ணகி மக்கள் தெய்வமாக மாறியது ஒரு வளர்ச்சி நிலை என்றால் வரலாற்றுப்போக்கில் மக்கள் தெய்வமான கண்ணகி உயர் தன்மை பெற்று ஆகமமுறைக்குள் வரும் தெய்வமாக மாறுவது இன்னொரு நிலை எனலாம்.கண்ணகை அம்மன் பத்ததிகளையும் பிராமணபூசை நடக்கும் இன்றைய கண்ணகை அம்மன் கோயில் வழிபாட்டு முறைகளையும் ஒப்பிட்டு ஆராயும்போது இவைபற்றித் தீவிரமான தெளிவுகள் கிடைக்க வாய்புண்டு.

viii

கிழக்கிலங்கையின் வரலாற்றையும் சமூகத்தையும் கல்வெட்டுக்களிலும் புதைபொருள் ஆவணங்களிலும் தேடுவது ஒருபுறமாக மறுபுறம் இங்குவழங்கும் நாட்டார் மரபுகளிலும் கோயில் வழிபாடுகளிலும் தெய்வப்பிரிவுகளிலும் கலைகளிலும் (முக்கியமாக கூத்து வசந்தன் மகிடி பறைமேளம்) தேடவேண்டும். இவற்றுள் மட்டக்களப்பில் உள்ள கோயில் பிரிவுகள் முக்கியமானவையாகும். மட்டக்களப்பின் கோயில்களை தேசத்துக்கோயில்கள் ஊர்க்கோயில்கள் என இரண்டு பிவுகளாகப் பிரிக்கலாம். அரசர் அல்லது தலைவர் நிவந்தங்கள் பெற்றதும் பல சமூகங்கள் இணைந்து நடத்துவதுமாக தேசத்துக்கோயில்கள் அமைய ஊரில் வாழும் தனி ஒரு சமூகமே நடத்துவதாக ஊர்க்கோயில்கள் அமையும். தேசத்துக்கோயில்களுக்கும் சமூகஅமைப்புக்கும் வரலாற்றிற்குமிடையே தொடர்புகள் உண்டு. ஊரில் வழமைகளுக்கும் ஊர்க்கோயில்களுக்குமிடையே தொடர்புகளுண்டு.

கிழக்கிலங்கையின் கோயில்களை மையமாக வைத்து அக்கோயில் நிருவாக வழிபாட்டு அமைப்புக்களை எத்தகையதொரு சமூகம் தோற்றுவித்துள்ளது என்பது பற்றிய ஆராய்வும் அவசியம். கிழக்கிலங்கையின் கண்ணகை அம்மன் கோயில்கள் ஊர்க்கோயில்கள் என்ற அமைப்பினுள் அடங்குமாயினும் சில கண்ணகை அம்மன் கோயில்கள் பல ஊர்களும் சேர்ந்து சடங்கு இயற்றும் பண்பு கொண்டவையாயுள்ளன. இவை தேசத்துக்கோயில்களாக மாறும் இயல்புடையன. கண்ணகை அம்மன் வழிபாட்டிலும் ஆலய அமைப்புமுறைகளிலும் சமஸ்கிருதமயமாக்கம் மெல்லப் பரவி வருகின்றது. இன்னொரு அம்சம் கண்ணகி வழிபாடு பல படித்திறங்களில் நடைபெறுவது இன்னொரு அம்சமாகும்.

மட்டக்களப்புச் சமூகத்தின் அரசியல் சமூக பண்பாட்டு உருவாக்கத்தினைக் கண்ணகை அம்மன் கோயில் வழிபாடு அவ்வழிபாடு வளர்ந்தமுறைமை அவ்வழிபாட்டுக்காகப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் என்பவற்றைப் புதிய ஆய்வு நெறிகளுக்கமைய கற்பதன் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

ix

கிழக்கிலங்கையினது இலக்கியப் பாரம்பரியத்தை வாய்மெழி இலக்கியப் பாரம்பரியத்துள் அடக்கி விடுவது பொதுவான ஒருமரபாக இருந்து வருகிறது. ஈழத்து இலக்கிய வரலாறு எழுதும் பலர் பழைய செந்நெறி இலக்கியங்களைப்பற்றி குறிப்பிடுமிடத்து கிழக்கிலங்கையின் இலக்கியங்கள் அதிக இடம்பெறுவதில்லை. கிழக்கிலங்கையின் இலக்கிய மரபு வாய்மொழி இலக்கியமரபே என்ற பாரம்பரிய கருத்தோட்டத்தின் செல்வாக்கிற்குட்பட்டு இவர்கள் இருப்பதுடன்

கிழக்கிலங்கையில் தோன்றிய செந்நெறி இலக்கியங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்காமையும் ஒரு காரணம் எனலாம்.

கிழக்கிலங்கைக்கென ஒரு நீண்ட இலக்கிய மரபு உண்டென்பதையும் அது யாழ்ப்பாண இலக்கிய மரபுடன் ஒரே வேளை இணைந்தும் வேறாகவும் வளர்ந்து வந்துள்ளது என்பதையும் கிழக்கிலங்கை இலக்கியங்ளை நுணுகி ஆராய்வோர் அறிவர். கிழக்கிலங்கை இலக்கிய மரபை வாய்மொழி இலக்கிய மரபு, செந்நெறி இலக்கிய மரபு வாய்மொழிக்கும் செந்நெறிக்கும் இடைப்பட்டதொரு பொதுமரபு என மூவகைக்குள் அடக்கலாம்.

வாய்மொழியாகப் பாடல்களை இட்டுக் கட்டிப்பாடும் மரபு இன்றும் கிழக்கிலங்கையில் வழக்கிலுண்டு. கிழக்கிலங்கையில் " கவி " எனப்படும் பாடல் வகை இதனுள் அடங்கும். இது தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் வழங்கி வரும் ஒரு மரபாகும்.

கண்ணகி வழக்குரை, பாரத அம்மானை, கம்சன் அம்மானை, இசுவா அம்மானை, இராமர் அம்மானை, போன்ற நூல்கள் கிழக்கிலங்கையில் ஒரு செந்நெறி இலக்கியப்பாரம்பரியம் இருந்தமைக்கான சான்றுகளாகும். கண்ணகை அம்மன் பற்றி பாடல்களிலும் ஒருசெந்நெறித்தன்மை இருப்பதனை அவதானிக்கமுடியும்.

கிழக்கிலங்கையில் ஆடப்படும் கூத்து நூல்கள் ஊர்க்கோயிற் சடங்குகளில் பாடப்படும் காவியம், வசந்தன் பாடல், சிந்து தாலாட்டு முதலான பாடல்கள், மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம், என்பன செந்நெறிக்கும் வாய்மொழி நெறிக்கும் இடைப்பட்ட நூல்கள் எனலாம். இவற்றை orature என அழைப்பர் அதாவது oral க்கும் வாய்மொழிக்கும் literature க்கும் (செந்நெறிக்கும்) இடைப்பட்ட orature (பொதுநெறி).

இப்போது நெறியின் அம்சம் யாதெனில் அது கல்வி கேள்விகளிற் புலமை பெற்ற கற்றோரையும் ஈர்க்கும் கல்வி கேள்விகளிற் புலமையற்றவரான சாதாரண மக்களையும் ஈர்க்கும். இலக்கியத்தினை சனமயப்படுத்தும் இப்பண்புடைய இலக்கிய மரபே கிழக்கிலங்கையின் பிரதான இலக்கிய மரபு போலத் தெரிகின்றது.

இப்பின்னணியிலேயே கண்ணகை அம்மன் பற்றிய பாடல்களையும் நாம்நோக்க வேண்டும். மகாபாரத இலக்கியம் இராமாயண இலக்கியம் போல கண்ணகை அம்மன் இலக்கியம் என ஒன்றை நாம் கிழக்கிலங்கைப் பகுதிகளிளே காணமுடியும். கண்ணகி வழக்குரை குளுர்த்திப்பாடல்கள் மழைக்காவியம் என்பவற்றுடன் கண்ணகை அம்மன் பற்றிய காவியம் சிந்து அகவல் பிரார்த்தனை போன்றவற்றையும் கண்ணகை அம்மன் பத்ததிகளையும் இணைத்து கண்ணகை அம்மன் இலக்கியம் என ஒன்றைப் பற்றி நாம் சிந்திக்கலாம்.

கண்ணகை அம்மன் பற்றி கிழக்கிலங்கையில் வழங்கும் வாய்மொழிக் கதைகளையும் கண்ணகை அம்மன் கோயில்கள் சம்மந்தமான கதைகளையும் திரட்டுவதுடன் தமிழ்நாட்டு கோயில் கண்ணகை கதை மரபுகளுடன் இவற்றை இணைத்து ஆராயலாம். தென்கிழக்காசிய நாடுகளிலும் இவ்வழிபாடு பரவியுள்ளமுறை பற்றியும் நோக்கலாம். அத்தகைய ஓர் ஆய்வு முயற்சியைத் தூண்டுவதாகவும் இத் தொகுப்பு அமைந்துள்ளது.

X

கண்ணகை அம்மன் பாடல்களில் காணப்படும் ஓசை நயமும் ஒத்திசை நயமும் சொல் நயமும் கவிதை அழகும் தனியாக ஆராயப்பட வேண்டியவை. மக்களுக்கு கண்ணகை அம்மன் கதைகளை எடுத்துக் கூறுவதே இப்பாடல்களின் பிரதான

நோக்கமாயமையினும் கண்ணகை அம்மன் கோயில்கள் சில வற்றில் உடுக்கடி சிலம்போசை பறைமுழக்கம் என்பனவற்றிற்கு அமைய மாந்தர் தெய்வமுற்று ஆடி வழிபாடு நடத்தும் முறைகள் இருப்பதனாலும் இப்பாடல்கள் ஓசையையும் ஒத்திசையையும் பெற்றனவாக உருவாக்கப்பட்டுள்ளன.

வீசுகர மேகநிற வேதநுத லாள் கருணை
மேவுமத வாரண விநாயக விநோதா

என்று குளுர்த்திப்பாடல் ஆரம்பமாவதுடனே ஓசையும் ஒத்திசையும் ஓடிவந்து பாடல்களில் உட்கார்ந்து கொள்ளுகின்றன. இராமாயணம் எழுதிய கம்பர் 96 விருத்த ஓசை வகைகளைக் கையாண்டார் என்பர்.இங்குபெயர் தெரியாத புலவர்கள் பல்வேறு வகையான ஓசை வகைகளை கையாண்டிருப்பதனை இப்பாடல்களைப் படிப்போர் அறிவர் காப்புக்கு ஓர் ஓசை எனின் கண்ணகையின் தோற்றத்திற்கு இன்னுமோர் ஓசை. கண்ணகை அம்மன் கோபத்துடன் மதுரை வீதிகளில் வருவதற்கு ஓர் ஓசை எனின் அவளைக் குளிரப்பண்ண மற்றுமோர் ஓசை. வழிபட இன்னுமோர் ஓசை எனப் பல்வேறு ஓசை நயங்களை கண்ணகை அம்மன் குளிர்த்திப் பாடல்களிலே காணலாம்.

பல்வேறு ஓசை ஒத்திசை நயங்கள் கண்ணகை அம்மன் பாடல்களைத்தொட்ட இடங்களிலெல்லாம் மணக்கின்றன. அருணகிரிநாதரின் திருப்புகழ் ஓசை நயத்தினை ஒத்தவையாக இவை அமைந்திருக்கின்றன.

பாடல்களின் சொல் நயங்களும் எம்மை வசீகரிக்கின்றன. உதாரணத்திற்கு கண்ணகியை ஓரிடத்தில் அறிமுகப்படுத்தும் ஆசிரியர் "கந்தம் செறிந்த கனங்குழலாள்" என்ற செற்களைக் கையாளுகிறார். கந்தம்-வாசனை. வாசனை நிறைந்த குழல். குழல் என்பது தலைமயிர். சிறியதலைமயிர் அன்று அது கனம்குழல் அடர்த்தியும் நிறமும் கொண்ட

*தலைமுடி அது. கந்தம் செறிந்த கனம்குழல் என்ற செற்தொடர் பெரியதொரு படிமத்தை எம்முன் நிறுத்துகிறது. அழகாபாரம் கலைந்து தொங்க கண்ணகை கைச்சிலம்பு ஏந்திச் செல்லும் ஓவியத்திற்கான கற்பனை இங்குதான் உருவாகி இருக்க வேண்டும். இன்னொரு இடத்தில்*

*வாளை எடுத்து வளமுலையைத் தானரிந்து*
*தோளாடையாகத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

*என வருகின்றது.*

*இங்கு கண்ணகை அம்மன் வாளால் தன் முலைஅரிந்து இரத்தம் வழிய வெற்று மேலுடன்அவள் நிற்கும் காட்சியினை தோளாடையாக என்ற சொல் உணர்த்தி நிற்கின்றது. தோள் ஆடையாக இருந்தாலென்ன தோல் ஆடையாக இருந்தாலென்ன கண்ணகியின் தோற்றத்தினைச் சொற்களுக்குள் சிறைப்பிடிக்கிறார் கவிஞர். இவ் வண்ணம் இப்பாடல்களின் சொல்நயம் இரசித்தற்குரியது.*

## xi

*கண்ணகை அம்மன் பத்ததிகளுள் கன்னன்குடா கண்ணகை அம்மன் கோயிலிற் பின்பற்றப்படும் பத்ததியே இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஏட்டுப்பிரதியில் இருந்து இதனை உ.வீரக்குட்டி என்பவர் எழுதியுள்ளார். எழுதப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை. அத்தோடு மகாமாரித் தேவி திவ்விய கரணியிருந்த பாடல்களும் ஏற்கனவே தொகுக்கப்பட்ட கண்ணகி அம்மன் வழக்குரை காவியம், கண்ணகை அம்மன் குளுர்த்திப்பாடல் என்றபாடல்களும் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு கன்னன்குடாப்புலவர்கள் கண்ணகை அம்மன் பற்றிய பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒருபுலவர் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட*

காவியம் பாடிய புலவர் கலைமாமணி மா.சிதம்பரப்பிள்ளை இன்னொருவர் கன்னன்குடா கண்ணகை அம்மன் மழைக்காவியம் பாடிய க.நோஞ்சிப்போடி அண்ணாவியார். மற்றொருபுலவர் கன்னன்குடா கண்ணகை அம்மன் காவியம் பாடிய உ.கணபதிப்பிள்ளை வைத்தியர்.இவர்களுள் நோஞ்சிப்போடி அண்ணவியாரையும் வைத்தியர் உ.கணபதிப்பிள்ளையையும் நான் அறிவேன். இருவரும் கன்னன்குடா கூத்து வளர்ச்சியில் பிரதான இடம்பெறுபவாகள் வைத்தியர் உ.கணபதிப்பிள்ளை வைத்திய வாகடங்களில் பாண்டித்தியம் பெற்றிருப்பதுடன் கூத்து நூல்கள் இயற்றுதலிலும் வல்லவர். எனது கலாநிதிப்பட்ட ஆய்வின்போது கன்னன்குடா கூத்துப்பற்றியும் படுவான்கரை வாழ் தமிழ்மக்களின் வாழ்வியல் பற்றியும் அரிய தகவல்களை இவரிடமிருந்து நான் 1995 களில் பெற்றுக்கொண்டேன்.

திண்ணைப்படிப்பாலும் சுயதேடலாலும் கேள்விஞானத்தாலும் தம்புலமையினை விருத்தி செய்த பெரும் அறிவாளிகள் இவர்கள். உள்ளூர் அறிவுத்திறன் என்பதனை இவர்களைப்போன்றோரிடம் நாம் காணலாம். கன்னன்குடா படுவான்கரையின் அழகிய பழம் தமிழ்க்கிராமங்களுள் ஒன்று. அன்மைக்காலம் வரை இது வெளியுலகத்துடன் இறுக்கமாக இணைக்கப்படாமையால்தான் தன் பண்பாட்டுத் தனித்துவங்களை அதிக அளவில் சோர்த்து வைத்த கிராமமாக அது இருந்து வந்துள்ளது.

இங்கு கண்ணகை அம்மன் சடங்கு ஆரம்பமாகும் வைகாசிமாதம் ஒருபெரும் மாதமாக அமைகின்றது. ஊர் முழுமையாக இச்சடங்கினுள் தன்னை ஒப்புக்கொடுத்து விடும். சடங்கு நடக்கும் நாட்கள்முழவதும் கோயில் முன்றலில் விடிய விடியக் கூத்துக்கள் நடைபெறும். கலையும் சடங்கும் இணைந்தனவாக அக்காலங்கள் கழியும். இன்று மிக அருகி வரும் தென்மோடிக்கூத்து மரபினை .

இன்றுவரை கட்டிக்காத்து வரும் எனது மிக மதிப்பிற்குரிய கிராமம்தான் கன்னன்குடா.

இக் கன்னன்குடாவின் புத்திரன்தான் இந்நூலின் பதிப்பாசிரியர் கண. ஆறுமுகம். நான் முன்னரே குறிப்பிட்ட கன்னன்குடா வைத்தியரும், புலவரும், அறிஞருமான கணபதிப்பிள்ளையவர்களின் புத்திரன். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் வண்ணக்கருள் ஒருவர். மட்டுநகரின் வரலாற்றையும் பண்பாட்டையும் உலகறியச் செய்ய வேண்டும் என்பதில் முன்னின்றுழைக்கும் வயது சென்ற இளைஞர்களுள் ஒருவர். விபுலம் வெளியீட்டகத்தின் தலைவர். அகரம் புத்தக சாலையின் அதிபர்.

ஆறுமுகத்தை நான் அவரது பத்துவயதில் இருந்து அறிவேன். உடன் பிறவாத் தம்பியான அவரது உறவும் செயற்பாடுகளும் எப்போதும் எமக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருபவை.

அவரது இத்தொகுப்பு இவ்விடயத்தில் அக்கறை கொண்டோருக்கு ஓர் உந்து சக்தியாக அமையவேண்டும்.

மட்டக்களப்பில் இதுவரை வெளிவராத மந்திர ஏடுகள் வாகடஏடுகள் கோயிற் பத்ததிகள் என்பன எழுத்தில் கொணரப்பட வேண்டும். இவற்றை வைத்திருக்கும் பலர் தருவதில்லை. பத்ததிகள் மந்திரங்கள் என்பன மறை பொருளானவை. அவை வெளியே தெரியக்கூடாது என்பதுதான் பலரதும் கொள்கை. தன் பிற்சந்ததிக்குக்கூடக் கொடுக்காமல் மறைத்து வைத்தமையால் ஓலைப்பெட்டிக்குள் இருந்து உக்கிப்போன வைத்திய வாகட ஏடுகள் மட்டக்களப்பில் மிக அனந்தம்.

மறைபொருள் என்பதற்கு இன்று பெரிய அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. மறை என அழைக்கப்பட்ட வேதநூல்கள் பதிப்பில் வந்து விட்டன.

இருக்கு, யசுர், சாம வேதங்கள் அண்மையில் முழுமையாகப் பெரிய அளவில் தமிழில் கூட வெளியாகி விட்டன. பிராமணோத்தவரும், சமஸ்கிருத விற்பனர்களுமே அறியமுடியும் என்ற நிலையிலிருந்து இன்று சாதாரண மனிதரும் படித்தறியும் நிலைக்கு மறைகள் எனக் கூறப்பட்ட வேதங்களே வந்துவிட்டன. நம்முன்னும் பெரும்பணி காத்துக் கிடக்கின்றது. பத்ததிகளும் மந்திர ஏடுகளும், வாகட ஏடுகளும் பலரும் படிக்கும்படி எழுத்துருப் பெறவேண்டும். அதுசம்பந்தமான தொடர் ஆய்வுகளுக்கு இது மேலும் உதவக்கூடும். வாழ்க்கை ஓட்டத்தில் பல சவால்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கிக்கொண்டும் அவற்றைத் துணிவோடு எதிர் கொண்டும் பொது நலசேவையிற் தொடர்ந்து பணியாற்றும் தம்பி ஆறுமுகம் இம் முயற்சிகளில் மென்மேலும் ஈடுபட அவருக்கு உற்சாகமளித்தல் சமூகத்தின் கடமையாகும்.

## வெளியீட்டுரை

மட்டக்களப்புத் தமிழகம் பாரம்பரியமாக மரவுவழிப்பட்ட பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். இம்மக்களது சமூகக்கட்டமைப்பும் வாழ்க்கை முறையும் மிகமிகத் தனித்துவமானவை.

இப்பிரதேசத்தினுடைய வரலாற்றுடன் இந்துப்பண்பாடும் இரண்டறக் கலந்தேயுள்ளது. நம் மக்களது புராதன வழிபாட்டில் பத்தினித் தெய்வமென அழைக்கப்படும் கண்ணகியம்மனின் வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றது. கண்ணகியைப் பொதுவாக சிறுதெய்வத்துள்ளே இனங்காணினும் மட்டக்களப்பைப் பொறுத்தவரை அவள் பெரும் தெய்வமாகவே கருதப்படுகின்றாள். தமிழ்த் தெய்வமான கண்ணகிக்கு மட்டக்களப்பு மக்கள் ஊர்கள்தோறும் கோவிலெடுத்து வழிபடும் சிறப்பினை வேறு எங்கும் நம்மால் காணமுடியாது. சோழநாட்டில் உதித்து பாண்டிய நாட்டில் அனல்பரப்பி சேரநாட்டில் குளிர்ச்சியுற்று முத்தமிழ் நாடெங்கும் அன்றுகோவில் கொண்ட கற்பின் செல்வியின் பெருமையை ஆரியமயச் செல்வாக்கு அருகிவிடச் செய்தபோதும் மீன்பாடும் தேன் நாடு அவள் பெருமைக்கு மென்மேலும் சிறப்பளித்தேவருகின்றது.

கண்ணகியம்மன்மேல் பாடப்படும் ஊர்சுற்று காவியம் வழக்குரை, காவியம் மழைக் காவியம், குயில் பாட்டு மற்றும் வசந்தன் பாடல்கள் அனைத்தும் பக்தி இலக்கியங்களாகவே கொள்ளப்படத் தக்கவை. இந் நூலில் மட்டக்களப்பில் எழுந்துள்ள பாடல்களுடன் வற்றாப்பளை கண்ணகைமேல்

*பாடப்பட்ட பாடல்களும் பழம்பெருமைமிக்க அங்கணாமைக் கடவை பத்தினியம்மன்மேல் பாடப்பட்ட பாடல்களும் இடம்பெற்றுள்ளமை பெருமைசேர்ப்பதாக அமையும். இப்பாடல்களைத் தொகுக்க திரு. கண. ஆறுமுகம் அவர்கள் மேற்கொண்ட முயற்சி மிகமிகப் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். மிக நீண்ட காலமாக விபுலம் நிறுவனத்தின் தலைவராகவிருந்து பல நூல்களைப்பதிப்பித்த அவர் இப்பாடல்களை ஒன்றுதிரட்டி நூலுருப்பெறச் செய்தமை தமிழுக்கு அவர் செய்த பெரும் பணியாகவே அமையும் இந்நூலினை விபுலத்தின் 15வது வெளியீடாக வெளிக்கொணர்வதில் நாம் பெருமை கொள்கிறோம். அவரின் பணி தொடர வாழ்த்துவோம்.*

*விபுலம்*
*மட்டக்களப்பு*

***- வெல்லவூர்க்கோபால் -***
*(செயலாளர்)*

## *நுழைவாயில்.......*

*கண்ணகியம்மன் பத்ததியும் பாடல்களும் எனும் இந் நூல் இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். மட்டக்களப்பின் பாரம்பரிய இந்துப் பண்பாட்டுத் தளத்துள் கண்ணகியம்மன் வழிபாட்டின் தாக்கம் மிகவும் உயர்வானது. இப்பிரதேசத்திலும் ஏனைய சில இடங்களிலும் பாடப்படும் கண்ணகியம்மன் பாடல்கள் பல பக்தி இலக்கியமாகவே கொள்ளப்படத்தக்கவை. இவற்றைத் தொகுத்து வெளியிடவேண்டுமென்ற என் நீண்டகால ஆதங்கம் இன்று நிறைவேறுவது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இது எனது முதல் முயற்சியாகவே அமையும். நம்மிடையே காணப்படும் கண்ணகியம்மன் பாடல்கள் அனைத்தும் இந்நூலில் இடம்பெற்றுள்ளதாக கருதிவிடமுடியாது. இதில் இடம் பெறாத பாடல்களை கைவசம் வைத்திருப்போர் அவற்றினை தந்துதவுவார்களாயின் இவற்றை நூலுருவாக்க நாம் முயற்சிப்போம்.*

*இந்நூலை வெளிக்கொணர்வதில் பக்கபலமாக இருந்தவர்களை நாம் என்றுமே மறந்துவிடமுடியாது. தொடக்க காலம் முதலே விபுலம் வெளியீட்டு நிறுவனத்தின் ஆலோசகராக செற்பட்டுவரும் எனது மதிப்பிற்குரிய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் இந்நூலுக்கு சிறந்ததோர் அறிமுகமாகக் குறிப்புகள் எழுதியுள்ளமை மேலும் பெருமை சேர்ப்பதாக அமையும் அவருக்கு என் நன்றிகள் என்றுமுண்டு. அதேபோல் எனது நண்பரும் உறவினருமான கவிஞர் வெல்லவூர்க்கோபால் அவர்கள் மிகக் குறுகிய காலத்துள்*

இப் பாடல்களை சீரமைத்தும் பிழைகளைத் திருத்தியும் உதவியதோடு வெளியீட்டுரையினையும் எழுதினார்கள். அவருக்கும் எனது நன்றி. இப்பாடல்கள் அனைத்தையும் குறிஞ்சாமுனையைச் சேர்ந்த தம்பி வே. பிரபாகரன் கணணியில் அச்சுப்பதிவு செய்து தந்தார். அவரையும் நன்றியுடன் நினைவுகூர்வது என் கடப்பாடாகும். இப்பால்களைச்சேகரிப்பதில் எனக்கு உறுதுணை புரிந்தவர்கள் பலர். கன்னன்குடா அமரர் உ. வீரக்குட்டி குடும்பத்தினர் இதில் இடம்பெற்றுள்ள பத்ததியினைத் தந்து உதவினார்கள். அதேபோல் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சமாதான நீதவான் மா.சதாசிவம் அவர்கள், பாண்டாரியாவெளியைச் சேர்ந்த பூசகர் ம.மேகநாதன் அவர்கள் மற்றும் கன்னன்குடாவைச் சேர்ந்தவர்களான சமாதான நீதவான் வீ.முருகுப்பிள்ளை அவர்கள், மா.செந்தூரன் அவர்கள், பொ.புருசோத்தமன் அவர்கள், த.குணேஸ் அவர்கள் போன்றோர் நல்கிய பங்களிப்பினை என்றுமே என்னால் மறக்கமுடியாது. அத்துடன் மிகக் குறுகிய காலத்துள் இந்நூலினை அழகாக அச்சிட்டுத் தந்த மட்டக்களப்பு இருதயபுரம் சண் அச்சகத்தினருக்கும் என் இதயம் கனிந்த நன்றியினை உரித்தாகக் கடமைப்பட்டுள்ளேன்.

கணை ஆறுமுகம்

*பொருடக்கம்...*

*1) குளுர்த்திப்பாடல்.......*

*2) கலியாணக்கால் சுற்றுக் காவியம்.......*

*3) வழக்குரை காவியம்.........*

*4) அம்மன் பிரார்த்தனை.......*

*5) அம்மன் அகவல்........*

*6) பொற்புறாவந்த காவியம்........*

*7) காவியம் (அங்கணாமைக் -கடவை)........*

*8) தோத்திரம் (வற்றாப்பளை)..........*

*9) காவியம் (வற்றாப்பளை)........*

*10) காவியம் (பட்டி நகர்).......*

*11) காவியம் (தாண்டவன் வெளி)..........*

*12) காவியம் (தம்பிலுவில்).........*

*13) மழைக்காவியம் (பட்டி நகர்)..........*

*14) மழைக்ககாவியம் (கன்னன் குடா)..........*

*15) மழைக்காவியம்............*

*16) கள்வர் பிடிபட்ட காவியம் (கன்னன்குடா ஆலயத்தில்)..........*

*17) காவியம் (கன்னன்குடா)..........*

*18) பத்ததிகள்..............*

ஓம்

# கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல்

## திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

வீசுகர மேகநிற வேதநுத லாள்கருணை
மேவுமத வாரண விநாயக விநோதா
சேசுருதி மேருவினிற் பாரதமிழ் கோடுகொடு
சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வலிக்கோர்
கொஞ்சுமத லைக்களப குஞ்சர முகத்தோய்
பேசுதமி ழின்கதைக ளேபாடு தற்குஉறு
பிழைகள் வாராமலருள் பேழை வயிறோனே.

### வேறு

சீர்பொருந்து மைங்கரனே திருமாலின் மருகோனே
கார்பொருந்தும் ஆனைமுகக் கணபதியே கற்பகமே
பார்பொருந்துங் கண்ணகையார் பழிவாங்கிக் குளிர்ந்த கதை
ஊர்செழிக்கப் பாடுகிறேன் ஒருபிழையும் வாராமல்.

ஒருபிழையுஞ் செய்யாத உலகுபுகழ்க் கோவலரைப்
பெருமழுவாற் கொல்லுவித்த பிழைமாறன் றனையெரித்த
கருதரிய ஆயர்மனைக் கனல்தணியச் சாபமிட்டு
இருமுலையுங் குளிர்ந்த கதை யானுரைக்கக் காப்பாமே.

## நூல்

காரணி யுங்கொடை வாழ் வணிகர்
காதல் மிகுந்த தோர் கோவலனார்
சீரணி யுந்திரு மாமணி நங்கை
செல்வி குலக்கொடி தோன்றி னாளே.

மண்ணுயிர் மானாகர் தன் மகளார்
மாசாத்து வற்கு மரு மகளார்
பொன்னுள் ளதுமா தவிக்குத் தோற்றுப்
போகைக் கிசைந்தார் கணவ னோடே.

கொஞ்சிய செஞ்சொற் கிளிப்பிள்ளை தன்னைக்
கொண்டுசென் றுற்றவர் கையிற் கொடுத்து
வஞ்சக மின்றி வளரு மென்று
வந்தாளே கோவலர் முன்பு செல்ல.

தீதறு காதம் பல கடந்து
சிறந்த வஞ்சியோ டங் கிருந்து
மாசறு வல்வினை தீர வென்று
மனையறி வோமெனப் போயி னாரே.

வைகைக் கரையி லினி திருந்து
மாது வணிகர் நடந்த வாறே
தையல் வருந்தக் கவுந்தியர் தாமும்
தார்வணி கர்க்கொரு தீங்கில்லை யென்றார்.

அன்னங் குருவி புறா வினங்கள்
அவை துணையாக இருந்த வாறே
பொன்னின் மணிச்சிவி கைதன்னி லேறிப்
போர்ந்து இடையர் தெருப் புகுந்து.

முதிரும் பழவினை மூழ லுமே
மொய்குழ லாள் தம்மை யங்கிருத்தி
மதுரை புகுந்து சிறிது நாளில்
வாணிபஞ் செய்வோ மெனக் கருதி.

கண்ணகை காற்பொற் சிலம்பது கொண்டு
கருத்துடன் நல்லோர் கடையிற் புகுந்து
எண்ணமொன் றறியாத கோவல னாரும்
ஏறாவிலை யேற்றம் சொன்ன வாறே

விற்கும் சிலம்பு விலைபெரி தென்று
வேளாளர் கொள்ளமல் மீண்டும் போனார்
தர்க்கம் பெரியதோர் தட்டா னார்க்குத்
தன்கைச் சிலம் பொன்றைக் காட்டினாரே.

நிற்க இவ்வாசலில் நிற்க வென்று
நீணில வேந்தர்க் கெடுத் துரைத்தாரே
ஒற்றைச் சிலம்பொடு கள்வ னாரைக்
கொண்டுவாரு மென்று வினவிய பின்.

மற்றொன் றறியாத மன்னன் சினந்து
வணிகனைக் கொல்வோ மென நினைந்து
குற்றமொன் றில்லாத கோவலர் தம்மைக்
கொடுமழு வாலே பிளப் பித்தவாறே.

காதலன் பட்ட கடுந் துயரம்
கனவினிற் கண்டு கருங் குழலாள்
மாதவ மில்லாத் தவம் புரிந்து
மதுரை யழிப்போ மென நினைந்து.

வேயெனத் தோழி மாதரியும்
    மெல்லி நல்லாள் தம்மை அங்கிருத்தி
தூய மொழியாளே நீசொன்ன மாற்றம்
    தொல்லுல கோர்க்கிது வேதனை யென்றார்.

மாறுரை கேட்டு மனங் கலங்கி
    வணிகனைக் கொன்ற களந்தனில் வந்து
கூறு வேறான உடலைப் பொருத்திக்
    கொம்பனை யாளுயிர் மீட்டுக் கொண்டாள்.

பாண்டியன் செய்த பழி பாவத்தால்
    பார்மே லெழுந்த பழித்த மதுரை
மூண்ட வடவனல் தன்னை மூட்டி
    முழங்க எரித்தாளே மொய் குழலாள்.

ஆயர் குலக்கொடிப் பாவையர் வந்து
    ஆயிழை தன்னை யடி பணிந்து
தூயறு நெய்தன்னை வாங்கி வந்து
    சுடர் முலை கொங்கையி லப்பினாரே.

ஆறிய சிந்தை யரிவையர் தன்பால்
    ஆனதோர் சீத்தலைச் சாத்தரும் வந்து
நாறிய பூங்குழற் கோதை மாதே
    நங்காய் நீ வருந்தா திங்கருள்க.

ஐயையோ உந்த னடி பணிந்து
    ஆதுலர் சேரி குளிர வென்று
வைகாசித் திங்கள் வருவோ மென்று
    வரிசைக் கிசைந்து விடைகொடுத் தாளே.

தானுமத் தோழி மாதரியும்
  தன்னி லொன்றாகிய தார் கோதையாரும்.
வானோ ரெதிர்கொள்ள வையக முய்ய
  மங்கை மகிழ்ந்துல கேறினாளே.

ஆறி நடந்தா ளாயிழையாள்
  ஆன பெரும்பதி வாயி லூடே
தேறி நடந்தாள் திருமாமணி நங்கை
  செல்வி திருப்பதி வாயி லூடே.

கந்தஞ் செறிந்த கனங் குழலாள்
  கணவனுடன் பிரி யாதவாறே
இந்த மனையிடர் தீர வென்று
  ஏந்திழை யம்மானை யாடினாளே.

பூந்தடங் கன்னியர் தாம்புடை சூழ
  பொன்னனை யார் தம்மை அங்கிருத்தி
கூந்தல் மடமயிற் சாயல் நல்லாள்
  கோதை நின் றம்மானை யாடினாளே.

போரணி வேல்விழிப் பொன்னனை யாள்
  புவன மருவும் புரி குழலாள்
ஆரணம் வாழ்த்த அருண்மறை யோத
  ஆயிழை யம்மானை யாடி னாளே.

சித்தங் கலங்கிய தென்னவன் கூடலைத்
  தீக்கொண்டு சுட்டுச் சிறப்பை யழித்து
பத்தினி யென்று பலரும் போற்றப்
  பாவைநின் றம்மானை யாடினாளே.

விற்புருவ வேல்விழிச் சாயல் நல்லாள்
  மேதினி யெங்கும் குளிர்ந்து வாழக்
கற்புடை யாளென்று சொற் படைத்த
  காரிகை யம்மானை யாடினாளே.

கந்தஞ் செறிந்த குழ லசையக்
  குவலயம் எங்கும் குளிர்ந்து வாழ
அந்தர வானத் தரம்பையர் போற்ற
  ஆயிழை யம்மானை யாடினாளே.

நாமாறன் கூடலில் நாவலர் வாழ்த்த
  நற்றமி ழுண்டுரை கண்ட வேந்தன்
கோமாறன் தன்னைக் கொலைவிளைத் திட்ட
  கோதைநின் றம்மானை யாடினாளே.

ஆலிலை போலு மணி வயிற்றாள்
  அங்கயற் கண்ணுடை யாயிழையாள்
சாலி விளைய மழை பொழியத்
  தார் கோதை யம்மானை யாடினாளே.

பாங்கு புகட்டி மாது நல்லாள்
  பாரேழும் போற்றும் பரிவுடையாள்
பூமங் கமலத்திரு மாமணி நங்கை
  பொன்னின் மனை புகுந் தாடினாளே.

கன்னியர் கற்பு மிக விளங்கக்
  கற்றவர் தங்கிளை வாழவென்று
சென்னி வளவன்றன் மாநகரிற்
  சேயிழை யம்மானை யாடினாளே.

கைமானை யேந்திய காரிகையார்
　　கண்டு மகிழ்ந்து வாழ்க வென்று
அம்மானை யேந்திய அங்கயற் கண்ணி
　　அம்பொற் சிலம்பொலி யென் றலைமேலே.

## வேறு

ஒருமா பத்தினி வந்தாள்
　　உலகேழுந் தழைத்திட வந்தாள் வந்தாள்
திருமா மணிநங்கை வந்தாள் - எங்கள்
　　தேசந் தளைத்திட வந்தாள் வந்தாள்.

இப்பா ரிடந்தன்னில் வந்தாள்
　　இடைச்சேரி வாழ்விக்க வந்தாள் வந்தாள்
ஒப்பான பாலகர்க் கான அன்பாய்
　　ஒரு மாபத்தினி வந்தாள் வந்தாள்.

சிந்தர் குலந்தனைத் தீர்த்த அந்தச்
　　சிவகாமி அபிராமி வந்தாள் வந்தாள்
வந்தாள் கண்ணகை வந்தாள்
　　மழைமாரி பொழிந்திட வந்தாள் வந்தாள்.

வீறான பத்தினி வந்தாள்
　　விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்
மாறான பாண்டியன் மாள வென்று
　　வளமான கொங்கை யரிந்தாள் வந்தாள்.

மேலான வேல்விழி வந்தாள்
　　விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்
பாலாறு மென் மொழி வந்தாள்
　　பரிவான கண்ணகை வந்தாள் வந்தாள்.

கொற்றவன் முன்னால் பிளந்து போட்ட
  கோவலர் அங்கத்தைக் கூடக் கூட்டி
மற்றவன் றன்னால் வசனம் கேட்ட
  மாது நல்லாளிவள் வந்தாள் வந்தாள்.

ஆணிப் பொன்னாலே சமைத்த சிலம்பை
  அங்கே யவரும் அடித்தே யுடைத்து
மாணிக்கங் காட்டி வழக்கு வென்ற
  மாது நல்லாளிவள் வந்தாள் வந்தாள்.

மாது பராபரி யகிலாண்ட வல்லி
  மங்கை திரிபுர மங்கை மாது
ஆதுலர் தங்கிளை வாழ வென்று
  ஆதிரை நாள்வந் துதித்தாள் வந்தாள்.

காவலன் செய்த கடும்பிழை கண்டு
  கனலைக் கொழுத்தி மதுரை எரித்து
கோவல ரோடு விமான மேறிய
  கொம்பனை யாளிவள் வந்தாள் வந்தாள்.

ஏற்றம் மிகுந்ததோர் கோவலர் தம்மை
  இரு பிளவாக மழுவாற் பிளந்து
மாற்றம் மிகுந்ததோர் பாண்டியன் றன்னை
  வழக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்.

கானாரு மாலைக் குழல் சரியக்
  காடுஞ் சுரமும் கடந்து போந்து
மீனவன் செல்வம் அழித்த கோபம்
  வெஞ்சமர் வேல்விழி யாளே யாறாய்.

கற்றவர் தங்கிளை வாழ வென்று
காசினி எங்கும் தளைக்க வென்று
கொற்றவன் செல்வ மழித்த கோபங்
கோல மழகிய மாதே யாறாய்.

கொஞ்சு பரிபுரத் தாளினை நோகக்
கோவலர் பின்னே மதுரையில் வந்து
பஞ்சவன் செல்வம் அழித்த கோபம்
பாலாரு மென்மொழி யாளே யாறாய்.

வாழுந் துடியிடை நோக நடந்து
வஞ்சியர் தாமும் மதுரையில் வந்து.
கூடலன் செல்வ மழித்த கோபம்
கோல மழகிய மாதே யாறாய்.

விழிக ளிரண்டும் அனலாய்ச் சொரிய
வேகமுடனே மது ரையில் வந்து
வழுதி மதுரை யெரித்த கோபம்
வெஞ்சமர் வேல்விழி யாளே யாறாய்.

ஆமல்ல வென்று மறிந்து பாராமல்
அப்போது செட்டியை வெட்டு வித்த
சோமகுல மன்னன் றனைக்கொன்ற கோபம்
தோகை மயிலனை யாளே யாறாய்.

சிந்தை தளர்ந்து வணிகேசன் பட்ட
களங்கண் டுழத்திச் சினத்தை யடக்கி
சந்திர குலமன்னன் றனைக்கொன்ற கோபம்
சாயல் மயிலனை யாளே யாறாய்.

வேறு

காளி புடைசூழுங் காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ்வணிகர் தங்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்.

இளம்வேம்பின் கிழே இருந்து(தே) வருந்தாமல்
வளமை பெரிதுடைய மாதே குளிர்ந்தருள்வாய்.

மீகாமனுக்கு மிகுந்த வரங் கொடுத்து
நாகமணி வாங்க நயந்தாய் குளிர்ந்தருள்வாய்.

சொற்பெரிய மானாகர் துய்யகுலத் தேயுதித்த
சற்பமணித் தாளணிந்த தாயே குளிர்ந்தருள்வாய்.

எண்ணிய முன்எண்ணும் இயல்வணிகர் கோவலர்க்கு
பின்னே வழிநடந்த பேதாய் குளிர்ந்தருள்வாய்.

மாதவிக்குப் பொன்தோற்று வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் பின்போன கன்னி குளிர்ந்தருள்வாய்.

காவிரிப்பூம் பட்டினத்தைக் கைவிட்டகன் றதன்பின்
பூவிரியுஞ் சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்.

சாற்றரிய தக்கக் கவுந்தியனார் தன்னுடனே
பூத்த மலர்ச்சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்.

ஓடத்தி லேறிஉயர் காவேரி கடந்து
தேடியே தென்மதுரை சென்றாய் குளிர்ந்தருள்வாய்.

கொக்கினமும் புள்ளுங் குரலோசையுங் கேட்டுத்
தக்க வழிநடந்த தாயே குளிர்ந்தருள்வாய்.

தென்னம் பழஞ்சொரியத் தேமாங் கனியுதிர
வன்னி வழிநடந்த மாதே குளிர்ந்தருள்வாய்.

கொற்கைப் பதிதனக்குக் கோவலனார் பின்தொடர்ந்து
துர்க்கைப் பதிகடந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்.

மடைமீதிற் கயல்பாயும் வாழ்மதுரை மாநகரில்
இடையர் மனைபுகுந்த ஏந்திழையாய் குளிர்ந்தருள்வாய்.

கட்டிக் கிடந்ததொரு காற்சிலம்பைத் தானெடுத்துச்
செட்டுக்குக் கோவலர்பின் சென்றாய் குளிர்ந்தருள்வாய்.

மற்பொலியுந் தோளான் வணிகர்தம்மைக் கொன்ற
செய்தி
சொப்பனத்தில் கண்டெழுந்த தோகாய் குளிர்ந்த
ருள்வாய்.

தேறிக் கனாவைத் திருந்தவிடைச் சிக்குரைத்து
சீறி மதுரையிலே சென்றாய் குளிர்ந்தருள்வாய்.

தன்கணவன் பட்ட சதிக்களத்தைக் கண்டேகி
அன்புடன்வந் தாருயிரை மீட்டாய் குளிர்ந்தருள்வாய்.

தட்டானாற் கொன்ற தலைவனா ரைக்கண்டு
பட்டீரே என்றழுத பாவாய் குளிர்ந்தருள்வாய்.

கூறு மொழியெல்லாம் கோவலனார் தான்கேட்டு
ஏறும் விமானத்தே என்றாய் குளிர்ந்தருள்வாய்.

வன்னி வளராமல் மனத்துள்ளே தானடக்கி
தென்னவனைப் பூசலிடச் சென்றாய் குளிர்ந்தருள்வாய்.

வாசலது கடந்து மாளிகையின் உட்புகுந்து
பூசலிடப் பாண்டியனைப் போந்தாய் குளிர்ந்தருள்வாய்.

*தீதறியாக் கோவலரைத் தென்னவன்தான் வெட்டுவித்த*
*ஏது குறையாக என்றாய் குளிர்ந்தருள்வாய்.*

*நல்லோர்கள் தங்கள்முன்னே நாக மணிகாட்டி*
*கொல்லாமல் பாண்டியனைக் கொன்றாய் குளிர்ந்*
*தருள்வாய்*

*வாளை எடுத்து வளமுலையைத் தானரிந்து*
*தோளாடையாகத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

*ஓடியே ஏழு கதவடைத்துப் பாண்டியனும்*
*வாடியே ஏங்கி மனஞ்சலித்து நிற்பளவில்.*

*பூழியன் மார்பு பொறிகலங்கத் தான்எறிந்தாள்*
*ஏழு கதவுடைத்து மார்புருகப் பட்டதுவே.*

*பட்டேன் பழியெனவே பாண்டியனுந் தான்விழுந்தான்*
*விட்டேகிப் பார்வேந்தன் மேலோகம் சேர்ந்தனரே*

*வென்றாளே வாழ்மதுரை மீனவனைத் தான்வதைத்து*
*கொன்றாளே கண்ணகையாள் கோவலனைக்*
*கொன்றதற்கு*

*தட்டான் பொடியாகத் தார்வேந்தன் நீறாகச்*
*சுட்டழித்துப் போட்டதொரு தோகாய் குளிர்ந்தருள்வாய்.*

*எல்லைபடும் பழிக்கு எண்ணவொண்ணாப் பழிவாங்கிச்*
*சொல்லரிய மாமதுரை சுட்டாய் குளிர்ந்தருள்வாய்.*

*மதுராபுரித் தெய்வம் வாய்மாற்றஞ் சொல்லியபின்*
*சதுராக வேகந் தணிந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

*மதிகேடு செய்தஇயல் மாறன்றனை வதைத்து*
*பொதுவரிடந் தனிலே போந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

அரிந்த முலையோடும் வளர்ந்த தனத்தோடும்
வருந்தி வழிநடந்த மங்கையரைக் கண்டோடி

விரைந்து மனைபுகுந்து வெண்ணெய்தனை
அள்ளிவந்து
அரிந்த முலைதனிலே அங்கவரும் அப்பினரே

அப்பி அடிபணிந்து ஆச்சியரைத் தான்நோக்கிச்
செப்பரிய கண்ணகைத் தேவியர்க் கேதுரைப்பார்.

ஆயர் குலப்பாவாய் அன்னமே தார்கோதாய்
தூய வனல்சேரி சுடாதே குளிர்ந்தருள்வாய்.

எச்சேரி வேகினும் இடைச்சேரி வேகாமல்
பச்சேரி வேகினும் பறைச்சேரி வேகாமல்.

அச்சம்தனை அகற்றி ஆண்டடிமை கொள்ளுமம்மா.
தண்மை மிகவாகி தாரணியோர் மிகமகிழ்ந்து

நன்மையுடன் வளர்ந்து நானிலமும் தான்மதிக்க
என்முலை குளிர்ந்தால்போல் என்றும் குளிர்ந்
தருள்வாய்

என்றுதான் சொல்லி இடைச்சியருக் கீதுரைத்து
நின்றுதான் அம்மை நேசமுடனே மகிழ்ந்து

அக்கினியை நோக்கி அனல்மீளச் சாபமிட்டு
மிக்க இடைச்சியர்க்கு வேண்டும் வரங்கொடுத்து

அடவாய் மனமகிழ்ந்து ஆயர்மனை தானிருந்து
வடவாய் அனல்தணித்த மாதே குளிர்ந்தருள்வாய்.

நட்பான மானாகர் நல்ல குலத்தேயுதித்து
கற்பாற் புகழ்படைத்த கன்னி குளிர்ந்தருள்வாய்.

*எண்ணாது செய்த இயல்மாறன் றனையழித்து*
*நண்ணாய் விமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

*கூடலது கடந்து கோவலரைத் தான்கூட்டி*
*ஆடல் விமானத் தமர்ந்தாய் குளிர்ந்தருள்வாய்.*

*தென்னவனைக் கொன்று திசைநோக்கித் தான்நடந்து*
*பொன்னுலகம் வீற்றிருக்கப் போனாய் குளிர்ந்தருள்வாய்.*

*தேவர்க ளெல்லாம் திருவானத் தேயேற*
*கோவலரை நீங்காத கொம்பே குளிர்ந்தருள்வாய்.*

*சீரா யுலகம் செழித்தே தழைத்தோங்க*
*வாராய் புறாவினமே வளர்மதியைக் கைதொழுவோம்.*

*வேதாவும் மாலும் விடையோனும் விண்ணுமுய்ய*
*ஓதாய் புறாவினமே ஓம்நமசி வாயவென்று*

*சாலப் பிணியகலத் தாரணியோர் ஈடேற*
*கோலப் புறாவே கொடுவாராய் வெற்றிலையை.*

*இன்றோடே நோய் பிணிகள் எல்லாம் அகன்றோட*
*மின்னனையோர் ஈடேற மிக்கநீதி உண்டாக*

*கற்பதித்த தூண்போல கலங்காப் பதியணையார்*
*நெற்பதித்த தூண்போல நீடூழி வாழ்வாரே*

*நற்பால் குலத்தில்வந்து ஞாலமெங்கும் முண்டாகி*
*ஆல்போற் றழைத்து அறுகதுபோல் வேரூன்றி.*

*முங்கில்போல் கூட்டம் முகியாமல் வாழ்ந்திருப்பீர்*
*ஓங்கிய செல்வத் துலகோர் மிகவாழ்க.*

வேதமும் ஐந்தெழுத்தும் வெண்ணீறும் உண்டாக
மாதமும் மாரி மழைபொழிய எந்நாளும்.

சென்நெல் மிகவோங்கத் தேசத்தோர் ஈடேற
கன்னல் மொழிமடவார் கற்புநெறி உண்டாக.

மன்று தழைக்க மனுவெல்லாம் ஈடேற
கன்று தழைக்கக் கறவையினம் பால்பொழிய
செங்கோல் தழைக்கத் தேசத்தோர் ஈடேற
மங்காத செல்வம் வளநாடுந் தான்வாழ்க
அங்கயக் கண்ணம்மை அடிக்கமலந் தான்வாழி
தண்டமிழ் சேர்வாணர் தழைத்தோங்கியே வாழ்க
கண்டணைய சொல்மொழியார் கற்புநெறி உண்டாக
பொன்னுலகும் தேவர்களும் பொற்கையி லையும் வாழ்க
மன்னவனும் செங்கோலும் மாமறையுந் தான்வாழி
பாமாது வாழ்க பராசக்தி யார்வாழ்க
பூமாது வாழ்க புவிமாதுந் தான்வாழ்க
நாமாது வாழ்க நாமகளுந் தான்வாழ்க
சீர்வாழி தெய்வந் திருவுந்தி யோனும்வாழி.
ஏர்வாழி நல்ல ஏந்திழையா ரும்வாழி.
அம்மைக் கடிபணியும் ஆயர்குலந் தான்வாழி.
எம்மை உகந்தருளும் லெட்சுமியா ரும்வாழி
தக்கசெல்வ முண்டாகத் தவம்பெற்றுத் தாரணியில்
பாங்காய் நடுவுரைத்த பத்தினியா ரும்வாழி.
நாடினோர் வாழி நயந்தோர் மிகவாழி
பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி.
ஏடு பிடித்து எழுதினோ ரும்வாழி.
கேட்டோரும் கேட்டுக் கிளையும் பிணிநீங்கி.
மாட்டாங்கு வாராமல் மாநிலமும் தான்வாழி
இக்கதையை வாசித்த யானும் பிணிநீங்கி
காணாரும் மாலைக் கனங்குழலாள் கண்ணகைதன்

*தன்னாலியன்றளவு தாரணியில் யானுரைத்தேன்*
*எந்நாளும் போற்றி இனிதூழி வாழ்வாரே.*
*இன்றே புகழ் படைத்த இந்தப் பெருங்கதையை*
*வேண்டியிருப்போர்கள் மென்மேலும் வாழியவே.*

# கண்ணகை அம்மன்

## கலியாணக்கால் சுற்றுக் காவியம்

1) சீர்கொண்ட பாரத மருப்பொன்றி னாலே
சிகரகிரி தனிலெழுது சித்திரமா முகிலே
பார்கொண்ட மாதுமயில் மாலின்மரு கோனே
பதினாலு புவனமும் பணியுமைங் கரனே
ஏர்கொண்ட வணிகேசர் மாசாத்தார் கோவலர்க்
கினிதாகவே மணம் முடித்த கதைபாடக்
கார்கொண்ட வீரமுக் கண்ணனே! விகடதட
கரிமுக வனேவந்து காத்தருள் செய்வாயே.

2) செவ்வாழை தாவுவயல் சூழ்செந்தி யானே!
திருவானை கேழ்வனே! உருமாறு முகனே!
மைவார் தடங்குறவர் வாழ்சேரி தனிலன்று
வளர்கின்ற வேங்கை மரமாகிநின் றவனே
மெய்யான வணிகேசர் மாசாத்தார் கோவலர்க்
கியல்பாக வேமண முடித்தகதை பாட
ஐயா! திருக்கையிலை யம்பதிஅமர்ந்து வளர்
மாயன் மருகோனே வந்தடியேன் முன்னுதவாய்.

3) முன்னுலக முண்டவர் தமக்கரிய முகிலே
முத்துக்குள் வித்தான முதுமறைப் பொருளே
மன்னுகடல் நஞ்சை அமுதாக உண்டவனே
மாறாடி நற்சுடலை ஆடி நின்றவனே
தன்னிகரில் லாதவணி கேசர்கோ வலனார்
தமதுகலி யாணமது தானுரைத் திடவே
தென்னவன்முன் னேநரி பரிக்குதவு சிவனே
சீராயர் கேழ்வனே ஆராயு மமுதே.

4) ஆராலு மளவிடற் கரிதான பொருளே
அருமைசெறி மானாகர் மகளான திருவே
காராளர் குலமீது வந்துதித் தவனே
கண்ணகைத் தாயான கமல பத்தினியே
பேரான மாசாத்தார் கோவலர் தமக்கும்
பெருமைசெறி கண்ணகைக் கும்மணம் முடிக்க
காரானை முகவனே! மாலின்மரு கோனே
கணபதியே முன்வந்து காத்தருள் செய்வாயே.

5) காத்துமே ரெட்சித்து நீகிருபை செய்து
கருதரிய அரவின்மணி வரவழையு மென்ன
பார்த்துமே வர்ணகுல திலகன் மீகாமன்
பையரவின் மணிகொண்டு செல்லுமென வேதா
வேற்றுமை யில்லாமலே பத்தரை மாத்தின்
மிகுபசும் பொன்னுக்கு நாகமணி பரிசாய்
நேர்த்திய தாகவே கோவலர் தமக்கும்
நேரான கண்ணகைக் கும்மண முடித்தார்.

6) மணமது முடிக்கவே முரசமொ டெக்காளம்
வாகான தம்பட்டம், மத்தளம் உடுக்கை
குணமான நாகசின் னம்சங்கு வாத்தியம்
குமுறவே திமிதிமி யெனநடன மாட
பணஅரவின் மனிதரிசி விடுசிலம் போசை
பாவையர்கள் தான்குரவை யானஒலி செய்ய
குணமான கண்ணகைக் குமண முடித்தார்
கோதையர்கள் தானின்று கூறிவாழ்த் தினரே.

7) ஆறாறு சமயங்க ளாயுதித் தாயே
அரனா ரிடப்பாகம் அமர்ந்திருந் தாயே
வீறான மாங்கனி யதாயுதித் தாயே
வெற்றிபுரி மீனவன் விழிமறைத் தாயே
கூறான கோவலன் தனையுகந் தாயே
கூடல்மது ராபுரியை நீயெரித் தாயே
பேரான மண்முனையில் வாழவந் தாயே
பெற்பினுயர் கந்தமல ரனையபெண் ணரசே.

8) கந்தமத யானைமுக வீரரு ளாலும்
கதிரைநகர் முருகருடை கருணையத னாலும்
தந்தமுலை யுமைமாது தன்கருணை யாலும்
தான்தோன்றும் அப்பரது தன்கிருபை யாலும்
சிந்தமிர்த வெண்டா மரைதனில் மேவிவளர்
செல்வி உனதுள்ளம் குளிர்ந்தபடி யாலும்
வந்தாறு மூலைநகர் கண்ணகை தன்னருளாலும்
மலரடியை ஒருநாளும் மனதில் மறவேனே.

9) அயராம லாயிரத் தெண்களஞ்சிப் பொன்னை
அரிவை மாதவிதனக் கென்றேவணி கேசனோத
மயலான மாசாத் துவர்மகன் கோவலரை
வையகமதிக்க வொருநாள் மறித்தது கண்டு
இயல்பான இவ்வுலகில் என்னை நகையாரோ
என்தலைவ னோஇவன் தலைப்படுவ தென்றோ
மயலான மாதவிக் கணிபணி யளிக்கின்ற
வல்லபுகழ் கண்ணகையை மனதில் மறவேனே.

10) மறவாத கார்முத்து விளைவிக்க மழைமெத்த
வரவிட்ட கண்ணகை மலர்த்தாள்ச் சிலம்பை
புறமாறன் வழுதிநகர் சென்று கோவலனார்
பொற்சிலம் பதைவிற்ற போதுகொலை
செய்தே
திறமான முலைதிருகி மதுரையை எரித்தே
சேரியில் வரக்கண்டு நாரியர் பணிந்தே
அறமான கொங்கைதனில் வெண்ணெயை
யப்பியவர் வந்து
ஐங்கணா மைக்கடவை தங்கு கண்ணகையே.

11) தங்கமுறு பொற்பணி சதங்கையோடு தண்டை
தரளமணி மாலையுடன் நூரகமணி நுபுரம்
இங்குபணி யுள்ளபல பொற்பதக் கஞ்சவளி
யாவையு மெடுத்தினிமை யாய்மனம்
மகிழ்ந்தே
பொங்குபுகழ் கவிரிப்பூம் பட்டணத் திலுயர்
பூவைமா தவிதனக் கேபொரு ளளித்து
மங்கைகா மாட்சியென வல்லம ீனாட்சியென
வந்தவர் நிதம்பத மளித்த கண்ணகையே.

12) இதம்பட யிரண்டருகும் வேதமிசை யோத
இசைந்தமிர்த குங்குமம் குமுகுமென வீச
சதங்கையொடு தண்டைகள் லம்பமுடி மீதே
சஞ்சல சலஞ்ச லெனும்கொடி ததும்பப்
பதங்களொடு ரெத்தினம் தொந்தோமென
விசைப்ப
பதஞ்சலி பராக்கிரமம் பதத்தின்மிசை கொஞ்ச
சிதம்பர சிதம்பர வெனக்கொடிய தீவினைகள்
செங்கதிர்முன் னிருள்களெனச் சிந்தியோ
டிடுமே.

13) செங்கைதனில் மழுவேந்தும் சிவனாரு மிங்கே
திருமாலுடன் தேவர் முனிவர்களு மிங்கே
அங்கதனில் வெண்கோ டொடித்த சிவனாரும்
அறுமுகக் கடவுள் கணநாதர்களு மிங்கே
மங்கையுமை நாமாது பூமாது மிங்கே
மற்றுமுள்ள நவகோண சக்திகளு மிங்கே
கங்கைஇடை சூழ்மதுரை எரிசெய்த பத்தினிக்
கண்ணகையு முறைகின்ற கைலாய மிதுவே

14) இதமான கைலைமலை ஈசுரரு மிங்கே
இந்திர ருடன்தேவர் இருஷிகளு மிங்கே
பதமான பத்திபுரி சித்தர்களு மிங்கே
பதிவான கின்னரர் கிம்புருடர்களு மிங்கே
சதமான நால்வேத சாஸ்த்திரமு மிங்கே
தானமுறு வானவர்க ளானவரு மிங்கே
முதலான தில்லையம் பதியில் நடமாடும்
மூவாயிரத் தருறை முத்திநக ரிதுவே.

15) மூவா யிரத்தொரு வனானசிவ னிங்கே
முப்பத்து முக்கோடி தேவர்களு மிங்கே
பாவாணர் தன்சிறை விடுத்த சிவனிங்கே
பஞ்சவர்கள் வந்தடி பணிந்த சிவனிங்கே
நாவாணர் தன்கலி தவிர்த்த சிவனிங்கே
நான்முகனை ரெட்சித்த நாரணனு மிங்கே
தேவாதி தேவனார் மாடேறு மீசனார்
சிவனாரு முறைகின்ற சிவதலமு மிதுவே.

16) சிவலோக மானசிவ னாரிடத் துறையும்நீ
செங்கண்மால் தங்கையென வந்தசெக சோதிநீ
தவலோக மானசிவ சக்தியென வந்தநீ
தாரணியில் மானிடர்கள் சஞ்சல மகற்றிநீ
புவலோக மானதிரி புவனையென வந்தநீ
போற்றுமடி யார்தமக் கேற்றபுண் ணியமும்நீ
பலநோய் களானவினை தீர்த்து ரெட்சிக்கும்
பரிவான பட்டிநக ரிளைய பத்தினியே.

17) பட்டிநநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளுர்
செட்டிபா ளையம் புதுக்குடி யிருப்பு
செல்வமுறு மகிழடித் தீவுமு தலைக்குடா
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலைநகர்
அங்கங்கு நின்றகலி யாணியாய் யுறையும்
மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே.

18) மாறாத வல்பிணிகள் தீர மங்களமே
மழைசென்நெல் விளைபூமி வாழ்க மங்களமே
ஆறாத செல்வமொடு கல்வி மங்களமே
அந்தண ருடன்நல்ல அரசர் மங்களமே
நூறான கோடிமறை நூல்கள் மங்களமே
நோக்கரிய கற்புநெறி நுகர மங்களமே
சீரான கண்ணகைச் செல்வி மங்களமே
சிவனாருடன் தேவர் தேவி மங்களமே.

## கண்ணகை அம்மன் வழக்குரை காவியம்

1) திருமருவு கயிலாய மலையின்மிசை நிலவுபுனை
சிவனுமுமை யவளுமொரு சிம்மா சனத்தில்
மருவுபொழு துமையவ ளெழுந்தடி பணிந்து
வள்ளலே மதிமரபில் வந்ததமிழ் மாறன்
வெருவுதலி லாமலே வருநுதலில் விழிகண்டு
வெட்கினே னதுநீக்க விடையருளு மென்ன
தருமருவு மிதழிபுனை தாமசே கரனுந்
தையலுன் மனநினைவு தான்முயலுமென்றார்.

2) முயலுமென விடைகொடா தவசிடையிருந்தே
முயல்வடுவில் மதியனைய முகமலர் சிறந்து
அயலில்வரு நாகமங் கலையெனு மணங்கை
அன்பினுட னேதிருக் கண்ணருள் சுரந்து
புயலைமுன் நாள்விலங் கிட்டதிறல் வழுதிதன்
பொன்னுலகு நெற்றியிற் கண்ணை மறையென்ன
மயலற வுரைத்திலகு சட்டைகனல் கொடுவந்து
மணிமுடி தரித்தரசர் மதுரையெரி யென்றார்.

3) என்றபணி விடைகொண்டு கையிலயங் கிரியில்
இறங்கியே விண்தெய்வ லோகத் திருந்து
தண்டரளத் திருமார்பன் முத்துமா ளிகையிலொரு
சரடுகொண் டிளைகண்ணூ லேணியி லிறங்கி
துன்றுமீ னக்கொடிக ளிடவழுதி நிதமுநிகழ்
சூதமா வின்கனிய தாயுதித் தமையால்
இன்றுஆய் வோமெனக் கருதியவ ராய
இதமான நுதலின்விழி தனை மறைத்தவளே.

4) தவமனைய நுதலின்விழி மறையவுங் குலவழுதி
தன்கையிற் கனிதனைக் கொடுநடந் தேதான்
தவமணி போனிலகு மாளிகையிலொரு பொற்பேழை
தனியறையில் மூடிவைத் தைந்துநாள் விட்டே
பவனமற வேமற்ற நாளிற் றிறந்து
பார்த்தபொழு தேமதலை யழுகுரலைக் கேட்டு
கவலையோடு கணிதரை யழைத்ததென்ன மாயமிது
கட்டுரையு மென்ன அவர் கட்டுரைத் தனரே.

5) கட்டழகுத் திருமதலை தன்னாலுன் அரசளியும்
கன்னியும் நீயுமலர் கழல்மதுரை நகரும்
கெட்டிடு மெனக்கணிதர் சென்னதை யறிந்து
கிரணமணிப் பசும் பொன்னாற் சமைத்த
பொட்டக மதுள்வைத் தடைத்ததுமே வைகையெனும்
பேராற்றி லேவிட நீரோட்டம் வழியாய்
மட்டற மிதந்துவந்தலை கடலிலே தோன்றி
மானாகர் மகளாக வந்த கண்ணகையே.

6) மானாகர் மகளாக வளர்கின்ற நாளில்
வலியவைந்து தலைநாக மணிபுனைவ னென்று
மேனாளி லுள்ளபடி யறிந்து மானாகரும்
வேல்வள வனைத்தொழுது விண்ணப்ப மிட்டு
தேனாரென் மகளுக்கு நாகமணி யுள்ளிட்டுச்
சிலம்பிலா தேவதுவை செய்யொணா தெனவே
கானாறு தாதமீகிப் புயவழுதி கோனுமீ
காமனைய ழைத்தினிது கனவரிசை செய்தாய்.

7) செய்துசில கப்பல்கள் கொடுத்தவர் விடுத்தார்
செத்தவர் பிழைக்கவர முத்தமி யளித்தாள்
எய்தும்பொழு தெதிர்வெடி யரசனை வென்று
ஈடழி யாமலே நாகமலை சென்று
பையரவி னைத்தொழுது நாகமணி தன்னைப்
பாலித்து வேண்டியர ராலித்து மீண்டும்
துய்யபுகழ் வளவன்முன் வைத்திட மகிழ்ந்து
தொல்வரிசை மீகாமனுக் கருளி விட்டார்.

8) விட்டுநல் வணிகர்குல மானாகர் மகளுக்கு
மிகுநாக மணிகொண்டு மகிழ்வோடு நல்கி
எட்டோ டிரண்டரைக் குள்ளபசும் பொன்னின்
சிலம்புக்கு நாகமணி யுள்ளீடு மிட்டு
திட்டமுட னேபொருள் வழங்குமா சாத்தார்
சிறுவனாங் கோவலர்க் கேமண முடிக்க
மட்டுலவு செந்திருவுந் திருமாலும் போல
வையகம் துய்யவே வாழ்த்திருந் தாரே.

9) வாழ்பொழுது சோழன்முன் நாடகம் நடிக்கும்
மாதவிதன் னால்மனது கோவலர் மயங்கி
நாளோரி ரவுக்கா யிரத்தென் களஞ்சிப்பொன்
நல்கியுள்ள கைப்பொருள்கள் யாவையு மிழந்து
வாளரவின் மணிபொதி சிலம்பாகி னும்விற்க
வாங்குவார் ரிலையென்று மதுரை நகர்சென்று
நீள்தெருவில் விலைகூறி வருகோ வலன்றன்னை
நேர்கண்ட தட்டானும் நின்றேது சொல்வான்.

10) சொல்லரிய கடல்வழுதி யல்லாதி தற்குவிலை
தொல்லுலகி லுள்ளவரி லெவர்தருவ ரென்று
நல்லமணி வாசலள வாகவா விதைவிற்று
நான்தருவ னென்றுகொடு போனகம் மாளன்
சொல்லைமுன் நாள்விலங் கிட்டதிறல் வழுதிதன்
தேவிபுனை பரிபுரத் திருடனிவ னென்று
சொல்லியிது தானுன் சிலம்பென்று தட்டானும்
கும்பிட்டு நிற்கவே கொற்றவ னுரைப்பான்.

11) கொற்றவனு நம்முடைய சிலம்போவீ தில்லையோ
குலமனைவி கையிற் கொடுத்தறியு மென்ன
திட்டமோ டுரைக்கவவர் செம்பொற் சிலம்பதனைத்
தேவிநிகர் பாண்டிமா தேவிகை வாங்கி
மற்றெனது பரிபுரமு மல்லவிது நாகமணி
மண்ணிலுள் ளோர்புனைய வந்ததிலை யென்னக்
கொற்றமிகு மன்னனுக் கிதைவந்து சேடியர்கள்
சொல்லவே கம்மியனு மல்லவே யென்றான்.

12) அல்லவே செய்ததொழி லடியேனு மறியனோ
அண்ணலே பெண்மதியி னாலிவ ருரைத்தார்
கொல்லும்நீர் கள்வனிவ னென்று தட்டானுங்
கும்பிட் டடிவிழக் கொற்றவன் மயங்கி
வல்லசிர மேகநா தனையழைத் திங்கு
வதையுமென மதயானை வதையாத தாலே
கல்நெஞ்சன் மழுவி னாலே பிளப்பித்த
காரணங் கனவினிடை கண்ட கண்ணகையே.

13) கண்ணருவி களபமுலை மேல்வழிந் தோடக்
கடிமனை யகன்றுமறு தெருவினிடை வந்து
தண்மருவு வேங்கைநிழல் தனிலிரு பிளப்பான
தன்கண வனைக்கண்டு கண்களி லறைந்து
மண்ணினிடை வீழ்ந்தெனது கணவர் கோவெனவே
மரணமுற வேவந்த வகையறிய வேதான்
விண்ணுலகு தனைநோக்கிப் பொன்னூசி வாங்கி
மீளவு மெடுத்துயிரை மீட்டபத் தினியே

14) மீட்டுயிரை வரலாறு சொல்லுமென வேதான்
வினவவே கோவலர் விரித்தினி துரைப்பார்
கேட்டுருவி நூலைநிழ லிறகிடவு மென்று
கிரணமணி யார்சிலம் பொருகையில் வாங்கி
நீட்டுதெரு விற்குழை வலக்கையி லேந்தி
நெற்றியிற் கண்ணிடை நெருப்புமழை தூவ
பாட்டளி மதம்பெருகு வேம்பணி புயத்தான்
பார்த்திப னிருந்ததிசை பார்த்து வந்தனளே.

15) வந்துதிரு வாசலில் நின்றவ ளுரைக்க
வழுதியு மெழுந்தெதிர் வாசல்தனில் வரவே
கொந்தகை மதுகுலைய நின்றமயில் கண்டவனைக்
கொலைகார னோகொடுங் கோலரசன் நீயோ
என்தலைவ னைப்பிளப் பித்தவனும் நீயோ
இந்தச் சிலம்புக் கிணைச்சிலம் பெங்கே
தந்துபா ருன்தேவி தனதோ வீதெனதோ
சபையிலுள் ளோர்களிதைத் தானுரையு மென்றாள்

16) தானுரையு மென்றுகையில் நூபுர மெடுத்துத்
தரைதனி லடித்திடத் தகர்ந்தது நெருப்பாய்
போனபொறி போல நாகமணி தெறித்திடப்
புரவல நடுங்கிமனை போய்க்கத வடைத்தான்
தன்னருகில் நின்ற தட்டானையு மெரித்துத்
தடமுலை தன்னைத் திருகி யெறியவதுசென்று
மன்னவ னடைத்தகத வேழையு முடைத்து
வேந்தன் மணிமார்புருக வீழ்ந் துயிரிழந்தான்.

17) வீழ்ந்துயி ரிழக்கமது ரேசனை யழைத்து
மெல்லியர்தன் மனதிலுறு வேகமமை யாமல்
காந்து கனலிட்டுமது ரைப்பதி யெரித்துக்
கன்னிவரும் போதிடைக் கன்னியர்கள் கண்டு
வேதனை தணிக்க வென்றேதிருக் கொங்கைதனில்
வெண்ணெய்தனை யப்பியவர் கண்ணுற மகிழ்ந்து
போதுற்ற சீத்தலைச் சாத்தனார் வந்து
பூவையே நின்கோபம் மாறி விடுமென்றார்.

18) ஆறிநின் றேதெய்வ லோகமதை நோக்கினாள்
அப்போ தெழுபெண்க ளன்பா யிறங்கி
மாறுலவு கைக்குழைய வர்க்கினி தளித்துத்
மாதருடனே கூடி மஞ்சள் நீராட்டி
தாறுமலர் பாக்கிலைய வர்க்கினி தளித்துத்
தையல்நின் றம்மானை தானாடி யேதான்
மாதிரு வுள்ளங் குளிர்ந்தினி திருந்தாள்
வையகத் துள்ளவர்கள் வாழ்கவென் றேதான்.

19) வாழ்கவென் றேயபய வரமது கேட்க
வழுதிகாணிற் செங்கழுநீர் மலருட னிருப்பத்
தாழ்கின்ற சீத்தலைச் சாத்தனார் வந்து
தம்மாலே யிவ்வுலக மீடேற வேணும்
நாளும்நீர் புவியில்வரும் நாளோது மென்ன
நண்ணுதல் வைகாசித்திங்கள் நான்வருவே
னென்று
நீளவே யோர்கலையை மண்ணிலே நிறுத்தி
நேரிளையும் வானுலக மேறி நின்றாளே.

20) நேரிளைதன் னோர்கலையில் நான்கு கலையாகி
நிலவுபோ லேயுலகில் நிறைபூசை கொண்டு
பாரிலுள் ளோர்களின் நோய்பிணி தவிர்த்துப்
பண்புசெறி தம்பிலுவி லூர்தனி லிருந்து
அரசறியு மங்கணா மைக்கடவை காரைநகர்
வீரமுனை பட்டிநகர் களுவாஞ்சி மகிளூர்
பேரான கல்முனைகல் லாறெழுந் தருளிப்
பெருமையுடன் வரமளித் தினிது காத்தவளே.

21) அக்கரவ ணிந்தவர னாரிட மிருந்துநீ
அம்மையென வன்பருக் கருளது கொடுத்தநீ
சக்கரக ரத்தவன் தங்கையென வந்தநீ
தந்திமுக நாதனொடு தம்பியருள் தாயும்நீ
தக்கவினை நோய்பிணிகள் தானகல வைத்தநீ
தாய்தந்தை யானநீ சற்குரு தெய்வம்நீ
மைக்கருங் குழல்பெற்ற மதுரைநகர் வஞ்சியே
மலையரசன் மகளனைய மாதுகண் ணகையே.

22) கந்தமிகு காவிரிப்பூம் பட்டணத்தி லுயர்
கருதுபுகழ் மானாகர் மகளனைய திருவே
வந்துமீ னவனுயிர் வதைத்துமது ரைப்பதியில்
வல்லெரி யெழுப்பியே வளரிடைய சேரி
வெந்துமெரி யாமலே நல்வர மளித்து
மேதினி தனக்குவர மானது கொடுத்து
சந்தோச மாகவே கிருபைதந் தருள்மேவு
சக்தியே நாகமங் கலையான திருவே.

23) தாய்பெற்ற மகள்துர்க்கை யேமன மிரங்கித்
தயவினுடன் பாலமிர்த மானது கொடுத்துத்
தூயதொரு நற்பிள்ளை யெனவளர்க் கிலையோ
தோகையே நாகமங் கலையெனு மணங்கே
நேயமுட னேயடியேன் மனமது மகிழ
நெஞ்சில் மனக்கவலை தீரவரு ளம்மா
ஆயரிடைச் சேரியில டைக்கலம் புகுந்த
ஆயன் சகோதரி ஆதி கண்ணகையே.

24) நகரமுத லானசிவ சோதியர னாரிடத்
தரியபொற் கரகம துடுக்கைநற் குழையும்
வகரமுயர் பொற்பிரப் பங்கோலமி குந்த
பலவரமு மேபெற்ற பாக்கியதவ மயிலே
நகரமுட னெமதுகிளை மக்கள்மனை சுற்றம்
நன்மையொடு வாழவருள் பண்ணும் நீரம்மா
அகரமை யுங்கிலியும் ஔவுஞ்சௌ வுமான
ஆதிவள ராதியே அன்னைகண் ணகையே.

25) பொருள்வைத்த வணிகர்க்கு மகவுற்ற குயிலே
புகழ்பெற்ற மதுரைக்கு மெரியிட்ட திருவே
தருவைத்த புகழ்சற்ப மலரிட்ட மயிலே
தயவுற்ற வுனைநித்தம் மலரிட்டு மடியேன்
திருவொத்த முகிலொத்த பதநித்தம் பணிவேன்
திகழ்பெற்ற பலபிணி நோயகற் றிடுவாய்
கருவுற்ற முகிலொத்த தனவெற்பு மயிலே
காசினி துதிக்கவரு கண்ணகைத் தாயே.

# கண்ணகை அம்மன் பிரார்த்தனை

*சீர்வளரும் பூவிலுறை செல்வியே தெள்ளமுதே*
*ஏர்வளரும் பூலோகத் தீஸ்வரியே என்னமுதே*
*கார்வளரும் காவிலுறை கன்னியே காரிகையே*
*பார்வளரும் பைந்தமிழ்சேர் பைங்கிளியே பார்பதியே*
*தத்துபரி மீனவனை வெல்லவென்று மேதினியில்*
*மாதுமையாள் தானே வரவிடுத்த தையலே*
*தேன்பொதிந்த மாவின் கனியாகி மாறன்*
*விழிமறைத்து மேவுங்குழவியதாய் மெய்ப்பேழைக்*
*குள்ளிருந்து*
*காவேரி யாறுதனிற் கண்டெடுத்து மானாகர்*
*ஆவலுடன் வளர்த்த ஆரணங்கே ஆயிளையே*
*மாசாத்தார் தன்மகவை வதுவை முடிப்பதற்குத்*
*தேசாந் தரமாகச் சென்றுமீ காமனும்போய்*
*நாகமணி கொணர்ந்து நற்சிலம்பி னுள்ளீடாய்*
*ஆகமுடன் பாதத்தி லன்றணிந்து கோவலர்க்கு*
*நன்மணஞ் செய்து நயந்துசில நாள்சென்று*
*மாதவியார் ஆடல்கண்டு மன்னுபுகழ்க் கோவலரும்*
*ஆவலுட னேமயங்கி ஆயிளைக்குப் பொன்தோற்றுக்*
*கையில் சிலம்பெடுத்துகனமாறன் மதுரையிலே*
*வந்திடவே*
*மீறுபுகழ்த் தட்டானும் மீனவன்தன் மாளிகையில்*
*விலைபேசி நானும் விற்றுத் தருவனென்று*
*ஆசைபல சொல்லி அழைத்துப்போய் மாறனிடம்*
*சிலம்புத் திருடனிவன் செங்கை பிடித்துவந்தேன்*
*வலிய கொலைபுரிந்து வாங்குஞ் சிலம்பையெனத்*
*தார்வணிகன் றன்னைத் தகாதகள்வ னென்றெண்ணி*
*வெட்டிவிட வேயறிந்த மெல்லியலே திட்டமுடன்*
*ஒருகை குழைபிடித்து ஒருகை சிலம்பேந்தி*
*மதுரை நகர்தேடி வந்தமகா பத்தினியே*
*வேங்கை மரத்தடியில் வெட்டிவைத்த கோவலரைப்*
*பொன்னூ சியாலே புரைந்து உயிர்மீட்டு*

*மார்போ டணைத்து மகிழ்ந்துபல வும்பேசித்*
*தாங்கரிய பொன்னின் சரடுருவிப் போட்டுவந்து*
*பழிகார மாறனிடம் பழிகேட்ட பைங்கொடியே*
*மாறன் படியதனில் மணிச்சிலம்பு தானடித்து*
*மீறுமணி தெறித்து வெண்தண லாய்ச்சிந்தி*
*தட்டானுடன் மதுரை தானெரித்த தையலரே*
*முட்டநின்ற கற்கத வேழுடைத்துக் கனபாண்டியன்மடிய*
*வட்டமுலை தானெறிந்த மங்கையே யஞ்சுகமே*
*அன்றிடைய சேரிவந்து ஐயை தனைக்காண*
*வெந்தனமேல் வெண்ணெயள்ளி யப்ப மனதாறிக்*
*கண்டு மகிழ்ந்து காரிகையார் சேரிதனில்*
*மேவுமெரி வாராமல் மிக்கவரங் கொடுத்து*
*மாவுலகில் வந்தமரு மங்கையே யஞ்சுகமே*
*பூவுலகிற் கொம்பெடுத்துப் பூமலரெல் லாஞ்சொரிந்து*
*ஆவலுட னேமுறித்து ஆற்பரித்து அரிவையர்கள்*
*அம்மானை யாடி அரும்பூ சைகள்புரியக்*
*கோபந் தணிந்த கோமள பத்தினியே*
*மேவரிய பூசைதன்னை மேதினியோர் தான்கொடுக்க*
*மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே யஞ்சுகமே*
*உன்கோப மாற்ற உலகளித்த பூசைதனை*
*மேவுகன்னி யர்க்களித்த மெல்லியலே தாயாரே*
*பாலமிர்த நற்பூசை பலர்பார்க்க வேகளித்துக்*
*காதலுட னேமகிழ்ந்த காரிகையே தாயாரே*
*செப்புநெருப் புக்கன்னி சேயிளைக் கன்னியர்க்கும்*
*ஆகாச பத்தினிமார் ஐம்பத் தொருவருக்கும்*
*மோகக் குழலியர்கள் மூவா யிரம்பேர்க்கும்*
*தோதக பத்தினிமார் தொள்ள யிரம்பேர்க்கும்*
*அட்டசத்தி யானவர்கள் எட்டுப்பேர் தங்களுக்கும்*
*செந்தா மரைக்கன்னி செப்பிலுறை கன்னியர்க்கும்*
*விந்தை செறியும் விறும பத்தினிக்கும்*
*நாககன்னி யோடு லோககன்னி நாயகிக்கும்*
*அம்மானைக் கன்னியுடன் ஆனவுயர் கன்னியர்க்கும்*
*கன்னிமா ரெல்லோர்க்குங் காணரிய மங்கலர்க்கும்*

விறுமன் வயிரவர்க்கும் மெய்ப்பூத மொன்பதுக்கும்
கிங்கிலியர் மார்த்தாண்டர் கின்னரரி யக்கருக்கும்
காளியுடன் மாரி காமாட்சி பேச்சியர்க்கும்
வராகியா னந்தி லகிரி சவுந்தரிக்கும்
ஏவல்முன் னோடி பின்னோடி யானவர்க்கும்
மேவரிய பூசைதன்னை மேதினியி லேகொடுத்து
மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே யஞ்சுகமே
மதுரைப் பதியிருந்த மந்திரபதி யம்மனுக்குப்
பரிவான நற்பூசை பாலமிர்தம் நற்பொங்கல்
தானே யுனக்கென்று சாற்றிடவே தையலரும்
மந்திர பதிதானும் மலரடியைத் தான்பணிந்து
விந்தைசெறி யும்கயிலை மேவியே நீர்போகில்
வந்திடுவோம் நாங்களுந்தன் மலரடியை விட்டகலோம்
என்றவர்கள் செல்ல இரங்கியே கண்ணகையார்
வருஷ மொருக்கால் வைகாசித் திங்களிலே
வருவோ மெனவே வரங்கொடுத்த கண்ணகையே
அன்னையென வேயுலகை ஆதரித்த அம்பிகையே
முன்னமே பாற் கடலில் பள்ளிகொள்ளும்
பச்சை வர்ணன் தங்கையே தீர்க்கமுடன்
சேடன் மணிச்சிலம்பு சென்றுகந்த நங்கையரே
பதினாறு கோணத்துப் பத்தினியே பார்வதியே
உந்தன் கிருபைதங்கு உத்தமியே மங்கலையே
நாற்பத்து முக்கோண நாயகியே நாகமணி
தீர்க்க முடனணிந்த சேயிளையே மானாகர்
பாக்கியமென் றேவ ளர்த்த பைங்கொடியே
கோவலர்க்கு ஆக்கமுட னேமணஞ்சேர் அம்பிகையே
அண்டர் தொழுஞ்சோதியே மண்டலஞ்சேர் ஆதியே
மாரிபது மாதங்கி வாலை திரிபுரையே
காளிகெவு மாரிசிங் காரி கையே
வேல்முருகன் தாயே விநாயகனை யீன்றவளே
மகிடாசூ ரன்சிரசில் வாதுநடங் கொண்டவளே
கயிலைகிரி மேவிவளர் காரணியே பூரணியே
அயிலோக நாயகியே ஆதிசிவன் நாரணியே

கண்ணீரிற் பிறந்த கனகபத் தினியே
சென்னியிற் பிறந்த செல்வபத் தினியே
திருவுடன் சேர்ந்த சிவபத் தினியே
மருமண முடைய மகாபத் தினியே
பராசர மாமுனி பயின்றபத் தினியே
மாவின் கனியாய் வளர்ந்தபத் தினியே
மானாகர் தன்னிடம் வளர்ந்தபத் தினியே
இடையர் சேரியி லிருந்தபத் தினியே
வணிகர் மனைவியாய் வாழ்ந்தபத் தினியே
கோவலர் கையிற் குலமணிச் சிலம்பை
வீதியில் வில்லென்று விடுத்தபத் தினியே
மதுரையில் மீனவன் வணிகரை வதைக்கப்
பழியது கேட்ட பாவைகண் ணகையே
பாண்டியன் படியில் மணிச்சிலம் புடைத்து
அன்றவன் மதுரை அழித்தகண் ணகையே
மந்திர பதிக்கு வரமுடன் பூசை
தந்தோ மென்ற சக்திகண் ணகையே
அடியேன் கவலை அணைத்தையு மாற்றி
வடிவா யிரங்கும் மாதுகண் ணகையே
மாவிலுறை மாதே காவிலுறை தேனே
தாவுபுகழ்த் தாயே நாலுமறை நீயே
அன்னையே தந்தையே அம்மையே செம்மையே
ஆதியே சோதியே அண்டமே பிண்டமே
அத்தமே சித்தமே முத்தியே வித்தையே
அங்கையே செங்கையே மங்கையே நங்கையே
அன்பினுடன் என்கவலை என்பிணிக ளென்துயர்கள்
அனைத்தையு மகற்றி யடியேற்கருள் புரிவாய்
சகலகலை யம்மையே சற்கோண நாயகியே
உந்தனது பாதம்அனு தினமு நான்பணிவேன்
என்னையா ளம்பிகையே யாதிகண் ணகையே

# கண்ணகை அம்மன் அகவல்

*தெய்வக் கொழுந்தே சிவகாம சுந்தரியே*
*ஐவர்க்கும் நின்றாடு மாரணங் கே*
*மெய்யுற் றிடப்பாகம் பச்சை மேனி யுருவாய்*
*வலப்பாகங் கொண்டி ருக்கும் வல்லி*
*தாதுலனைக் கொன்று சுருதிபுன லுண்ட*
*சண்டப்ர சண்டி சகலகுல வல்லி*
*முண்டர்க்கு மூண்டி முகவீர பத்தினி*
*பத்தி தொடுக்கும் பரமசிவஞ் சோதி*
*முத்திக்கு வித்தான மூலமே*
*சித்தங் கலங்காமற் காரடி*
*சரதலங்க ளெட்டுங் கலங்காமல்*
*தொண்ணூற்றெண் ணாயிரங் கோடிதொழில் காட்டிக்*
*கண்ணுற்ற மாகநின்ற காரணியே*
*எண்ணரிய பச்சை நிறத்தி*
*பவளத் துவர் வாய்ச்சி*
*வாக்கு வீரி வயிரவி யுன்னை*
*ஆதரிப் பார்க்கு இரங்கி நின்ற*
*தெள்ளிய செந்தேனே சிவ மானே*
*கூளி கணங்களுட னாடுகின்ற காளி*
*நளின நிறுமாணி நடனமிடும் பேச்சி*
*ஆதி அனாதி அபிராமி அம்பிகையே*
*நம்பின வர்க்கருளும் நாயகியே*
*சோதி மணிவிளக்கைத் துய்ய திருநடன*
*மாடவல்ல தேவிதனை யன்பாய் மனதிலூன்றி*
*ஆதி சிவனா ரருகே வரவழைத்து*
*மேதி னியோர் தான் மகிழ*
*வேண்டும் வரங் கொடுத்து*
*முக்கண் ணுடைய முதல்மாறன் வாசலிலே*
*தேமாங் கனியாகிச் சிக்கனவே தான்நிற்க*

கோமாறன் தேவி கொடியிடைச்சி மந்திரபதி
வாசவனைப் போற்றிசெய்து மன்னவன் தாழ்பணிந்து
வீசுபுகழ்ப் பாண்டியற்கு விண்ணப்பஞ் செய்திடவே
தேனாறுகின்ற சேயிளைமின் னார்தனக்குக்
கானா றொழுகுங் கனமாவின் தன்கனியை
அரசனு மாய அதன்பால்கண் ணிற்படவே
மன்னன் விழிமறைந்து போக மதிமயங்கிச்
சிறந்த தேவியார் திடுக்கிட் டேங்கி
அளவிலாக் கனியை அடக்கமாய் வைக்கப்
பழுதிலாக் கனியும் பாலகியா யிருப்ப
மீனவன் தேவி மிகமனம் மகிழ்ந்து
நான்மறை கற்ற நல்லவே தியரை
முகூர்த்தங் கேட்க முனிவரு முரைப்பார்
மிகுந்தநன் மதுரை வெந்துநீ றாகிப்
பழியும் வருகும் பத்தினி யாலே
அழியும் மதுரையென் றந்தண னுரைக்கப்
பேழை சமைத்துப் பிள்ளையை வைத்துத்
தாளவுள் கங்கையிற் றள்ளி விடவே
திரைகடல் மீது குதித்து எழுந்து
திரையில் மிதந்து சென்றுகா வேரிப்
பட்டணங் குறுகிப் பத்தினி பேழை
செட்டியார் குலத்திற் சிறந்தமா நாகர்
கடலிற் கண்டு களிப்புட னெடுத்துத்
திறந்து பார்த்துத் திருமனங் குளிர்ந்து
சீரிய செல்வி திருமயில் தன்னைக்
கண்ட வுடனே கண்களி கூர்ந்து
வண்டுறை மார்பன் மாமயில் தனக்குப்
பஞ்சணை மெத்தை பரிவுட னீந்து
மிஞ்சுபா லமிர்தம் மெல்லியர்க் கீந்து
ஏந்தி யெடுத்து ஈசுபரி தன்னைப்
போற்றி வளர்த்தார் பொன்னின் தொட்டிலிலே
வாலைப் பருவ மடந்தைய ராகிய
ஏலங்குழ விக்கு ஏற்ற வயதினில்
மணமது முடிக்க மாசாத்தா ரீன்ற

தனபதி கோவலர் தனக்குத் தானே
வேதியர் தம்மை மிகவே யழைத்து
ஓதிய முகூர்த்த மென்றவ ருரைக்க
அட்டலெட் சுமிக்கு அமிர்த யோகமும்
கட்டழ குடைய கற்புடை யார்க்குத்
திங்கட் கிழமை திருக்கலி யாணம்
மங்கள முரைத்த மாதுநல் லார்க்குப்
பூதலம் மதிக்கும் புகழ்வணி கேசன்
மாதவ முடைய வரிசைமீ காமன்
தன்னை யழைத்துத் தனக்கு இப்போது
வன்னநா கமணி வாங்கிவா வென்ன
வாரிமே லேக வரமுங் கொடுத்துச்
சீரிய செல்வி திருமயில் தனக்கு
வருண குலத்து வன்மைமீ காமனுங்
குருமணி வாங்கிக் கொண்டுதான் வந்து
கண்ணீரிற் பிறந்த கனகபத் தினிக்குஞ்
சென்னியிற் பிறந்த சிவபத் தினிக்குந்
திருவிசை சேர்ந்த செல்வபத் தினிக்கும்
மருமண முடைய மகாபத் தினிக்கும்
செந்தா மரையிற் சிறந்தபத் தினிக்கும்
பராசர மாமுனி பயின்றபத் தினிக்கும்
மாவின் கனியாய் வளர்ந்தபத் தினிக்குந்
தேவர்கள் மெய்க்கத் திருக்கலி யாணம்
மெத்த மகிழ்ந்து வெகுமானம் நல்கி
நித்தமும் புவியில் நீடூழி வாழவெனக்
கட்டழ குடையகா வேரிப்பூம் பட்டணத்தில்
மட்டில்லா வணிகன் மாசாத்தா ரீன்ற
கோவலர் தனக்குக் குலக்கொடி மாதைத்
தேவர்கள் மெய்க்கத் திருமணம் முடிக்கப்
பந்த லிடவே பதினாறு காலில்
சிந்தை மகிழ்ந்து சேடியர் கூடி
மாணிக்க லிட்டவயிரக்கால் நாட்டி
ஆனிப் பொன்னாலே அரசிலை தூக்கி
வெள்ளை யாடையால் மேற்கட்டி கட்டிப்

பள்ளி யறையும் பரிவுடன் வகுத்து
இஞ்சி மாதுளை இலுமிச்சை நாரத்தை
மஞ்சல் செண்பகம் மல்லிகை நிறைத்து
வாழை கரும்பு கமுகிலை நிறுத்திப்
பாளை விரித்துப் பந்தலிற் கட்டிப்
பட்டாலே பலப்பல பாவாடை விரித்து
மட்டிட வொன்றா வயிர விளக்கு
மாணிக்க விளக்கு வகையுடன் நிறுத்தி
ஆணிப்பொன் விளக்கு அருகே நிறுத்தி
இந்திர லோக மெனவலங் கரித்துச்
சந்திர சூரியர் தன்னொளி வாங்கி
வேதியர் தங்களை மிகவே யழைத்து
ஓதிய ஓம பீடமும் வகுத்து
அல்லியர சாணிக்குப் பொன்னாற் பீடம்
நல்லதோர் நாகம் நலம்பெற விருத்தி
நாளும் முகூர்த்தமும் நலம்பெறப் பார்த்து
ஏழு முழத்தில் எடுத்தார் அரசாணி
கொட்டு முழக்கக் குரவை யுடனே
நாட்டினார் காலை நான்மறை யோரும்
ஆதி பராபரி அங்கயற் கண்ணி
மாது தனக்கு மந்திர மோதி
ஐந்து கும்பம் அரசாணிக் காலில்
செஞ்சிலம் புடைய தேவியை வாழ்த்தி
ஆயிரம் பச்சை அருகே நிறுத்திக்
காயத் திரியால் கண்ணீறு கழித்துக்
கற்பூர விளக்குக் கனக்க நிறுத்திப்
பொற்புற நிறைகுடம் போத நிறைத்துத்
தீப தூபம் சிறப்புடன் செய்து
பூவையர் தனக்குப் பொன்னின் பீடம்
சிங்கா சனங்கள் செம்பொன் னாலே
கங்காள ரூபி கயிலைநா யகிக்கு
வெள்ளை விரித்து மேற்கட்டி கட்டித்
தெள்ளிய பாட்டால் சேறாடி வகுத்துக்
கூரை முடியுங் குலவிய பாவாடை

கார்கமழ் பூங்குழல் கண்ணகைக் கிருக்கச்
சிங்கா சனத்திற் சிறந்தகூன் பலகை
வஙகார தெற்பை வகையுடன் நிறுத்திப்
பத்தினி யார்க்குப் பந்தலு மிட்டுக்
குற்றமில் லாமற் குறைவற முடித்தார்
மானாகர் கண்டு மனமிக மகிழ்ந்து
தேனார் மொழியார் செல்வியார்க் குரைக்க
வண்ணமா நாகர் மகிழ்வுறு தேவி
எண்ணம தாகிய ஏந்திளை தனிலொரு
வண்ண மகள்தனை வரவே யழைத்துக்
கண்ணகை தனக்குக் கலியாண மென்று
நாளும் முகூர்த்தமும் நலம்பெறப் பார்த்து
வாள்வழி யார்க்கு மணக்கோலஞ் செய்யெனக்
கூறிய பொழுதே கொம்பனை யாளுந்
தேறிய புழுகால் செழுங்குழல் வகிர்ந்து
நெல்லி சாத்தி நேரிளை யார்க்கு
அல்லியங் கோதையர்க் கழகுறப் புனைந்து
வாசம் மிகுந்த வளர்செஞ்சந் தனமும்
வீசம்வா டையதனால் மேனி திமிர்ந்து
பன்னீ ரதனால் பாவையர் முழுகி
மின்னார் தனக்கு வெள்ளை யதனால்
மேனி துடைத்து மேனிக்கொட் டியார்க்கு
ஆணிப்பொன் பட்டு அரிவையர்க் கணிந்து
கோலக் குழலைக் கோதி முடித்து
மாலைய ணிந்தார் மல்லிகை முல்லை
பாவை சிதறிய பாவையர்க் கணிந்து
வாளும் வயிரப் பதக்க மணிந்து
சங்கிலி சவடி சரப்பள தாலி
மங்கையர் தனக்கு மாணிக்கச் சுட்டி யணிந்து
தண்டு தாங்கிய தாயிரத் துடனே
கொண்டைக்குப் பூவாழி பீலி காலாளி
பீடுபெற பெருகுந் தோளி வளையல்
மேவிட றவிக்கை மெல்லியர்க் கீந்து
குஙகுமக் கொஙகைக்குக் கோல மெழுதி

மங்கையர் தனக்கு வதுவை முடிக்க
அக்கினிச் சிலம்புக் கபிஷேகம் பண்ணிச்
சிக்கெனப் பூட்டித் தேவிதன் தாளில்
கண்ணகி கூந்தலுக் காரகில்த் தூாம்
வன்ன மகளார் வாங்கிக் கொடுத்துப்
பாவையர் நாடகம் பரதம் படிக்கப்
பூவையர் குரவை போற்றி முழக்கக்
கொம்பு தாரை குறித்து முழக்கிப்
பம்பை தியிலை பலவாத் தியங்கள்
வீர கொம்பு விருது குறித்துப்
பாரில் விருது பலதும் முழங்க
ஆதி ஆதி மறையோர் கூற
வேத வழியே மெல்லிநல் லாளுங்
கோவலர் தனக்குக் கொம்பனை யாரைத்
தேவர்கள் மெய்க்கத் திருமணம் முடித்துச்
செம்பொன் னாலே சிங்கா சனம்மேல்
கும்பம் நிறைத்துக் கூன் பலகை
தெற்பை நிறைத்துத் திருவை யிருத்திச்
சொற்பயில் தூப தீபங் கொடுத்துக்
கற்பூர விளக்குக் கனக்க நிறுத்தி
வன்ன மகளார் மருகினில் நிற்கக்
கண்ணகை யார்க்கும் கண்ணூறு கழிக்க
அன்ன நடைமாதர் அருகினில் வந்து
மேலாப் பெடுக்க மெல்லிநல் லார்கள்
அம்மானை பாடி அருகே யிருப்பத்
தேவர்கள் மெய்க்கத் திருமயி லார்க்கும்
மேவலர் தனக்குங் குற்றமில் லாமல்
மங்களம் பாடி வாழி பாடித்
திங்கள் மும்மாரி தினமும் பெய்யக்
கங்கை வேணியன் கடவுளை நோக்கி
மங்கையும் வணிகரும் வாழ்த்திடும் நாளில்
அருளது புரிந்து திருவுடை யாரும்
பெருகிய புயத்து விந்தைநல் லாரும்
மானாக ருடனே மாசாத்தார் தானும்
கானாக றொழுகுங் காவேரி நாட்டில்

பூமகள் வாழப் பொங்கிட நாடு
நாமகள் வாழ நாடு தழைக்கச்
செல்வம் பெருகச் சேயிளை யாருங்
கன்மந் தொலையக் கணவனா ருடனே
பூவணை மீதே பொலிவுற விருது
மாமயி லாரும் வாழ்த்திடு நாளில்
சீரது வாழச் செல்வமுண் டாக
ஏர்வளர் கண்ணகை பார்வளர்ந் தோங்க
அருளது பெருகத் திருவது வாழ
தருநிழல் மீது சயேந்திரன் கொலுவில்
அருமறை தேவரை ஆயிரம் முனிவர்
பொங்கிய வேள்வி புரிந்திடு மளவில்
இந்திரன் மனைக்கு அகத்தியர் செல்ல
அவரை வரவேற்க ஊர்வசி யாடி
நீடிய வண்ணம் நிறைகலை யோதச்
சயேந் திரனூர் வசியைக்கா தலிக்க
ஊர்வசி கண்டு தானுங்கா தலித்ததை
அறிந்தநா ரதர்யாழ் அதற்கேற்ப வாசிக்கத்
திக்கிடை யின்றி நிதம்பந்தோன் றியதால்
இருந்த முனிவர்கள் மனநிலை மாற
அதைக்கண்ட அகத்தியர் அதிகோப மாகி
ஊர்வசியைக் கணிகை மாதவி யாகவுஞ்
சயேந்திரனைச் சோழன் குடைக்காம் பாகவும்
நாரதர் யாழ்பூ லோகஞ் செல்லவும்
அகத்தியர் சபிக்க அதைநிறை வேற்ற
ஊர்வசி யென்னுந் திருமயி லாரும்
வந்து பிறந்து மானிலந் தன்னில்
நாடகம் நடிக்கக் கூடிய சபையில்
மாதவி யாடக் கோவலர் மயங்கி
மாதவி யார்தமக் கணியும் பொன்னாகும்
எண்ணா யிரத் தெண் களஞ்சி
எண்ணவொண் ணாத்திரவிய மேந்திளைக் கீந்து
கண்ணகை காலிற் கதித்த சிலம்பை
மாறன் மதுரையில் மாறிவா வென்ன
வீறுள்ள மதுரையில் வெற்றிச் சிலம்பைக்

கூறி நடக்கக் கோவலன் றானும்
இடைய சேரியி லின்ப மதாக
அன்னநடை மாதை அடைக்கலம் வைத்துச்
சிலம்பது விற்கத் தேசிகன் றானும்
நலம்பெற மதுரை நன்னகர் தேடிக்
கொற்றவன் மதுரைக் கூடற் பதியில்
வெற்றிச் சிலம்பை விலைகூறி வருகையில்
பொன்செய்கொல் லன்கண்டு போத மறிந்து
மின்சேர் இடையாள் மெல்லிநல் லார்தன்
காலிற் சிலம்பு கள்வ னிவனென
ஆலித் தெழுந்து அரச னுடனே
மன்னவ ரேறே வழுதிகோ மாறா
தென்ன வர்க்காய்ச் சேயிளை யார்தன்
சிலம்புக் கள்வனைத் தேடிப் பிடித்து
நலங்கொள வந்தேன் நரபதி யேயென
மனுநீதி யறியா மன்னவன் றானும்
மணியரன் மாய அரசர்கோ வலரை
மழுவாற் பிளவென மன்னவ னேவ
மழுவரசன் றானும் மனது சலித்து
என்ன செய்வேன் ஈசு பரனே
மன்னவ னுரைத்த வார்த்தை மாறாமல்
சொன்ன பணிவிடை சுறுக்காய் முடியெனக்
கோவலன் தன்னைக் கொலைசெய் யென்றான்
பாவம் வருமே பரமேசு பரனே
மெத்த நடுங்கி வேர்வை யெழுப்பிச்
சித்தம் தழன்று சிவனை நோக்கிச்
கைக ளெழுமோ கள்வனை வெட்டப்
பொய்யும் வருமெனப் புரவல னுரைக்க
வெட்டிப் பிளந்தான் வேங்கைமரத் தடியில்
கட்டழ குடையகண் ணகைகோ வலரை
ஆதி பராபரி அம்மனு மப்போ
கோதை கண்ணகையும் குறிப்புட னெழும்பிச்
செல்வம் பெருகக் கல்வி வாழத்
திருவளர் கண்ணகை தெரிசனங் காண
ஆயர்தன் மனையில் தாயம தாக

இடைக்குலந் தன்னில் அடைக்கலம் வைத்துப்
போயின ரெந்தன் தூய கணவர்
பொன்னே மின்னே அன்பே தாயே
ஆச்சி யம்மே பேச்சிநான் கண்ட
அதிசயங் கண்டு சதியிது வென்று
மன்னவ ரெந்தன் வணிகர் தனக்கு
என்ன வினைகள் இனிவிளைந் ததுவோ
முந்தானை எரிய எந்தன் தாலி
அந்து விழவே சிந்தை கலங்கி
நொந்து அலறிப் புந்தி தளர்ந்தேன்
மாதே தாயே வளர்பத் தினியே
தீது வருமோ தேசிகர் தனக்குச்
சலிக்க வேண்டாந் தாயே நீரும்
மலைக்க வேண்டாம் மாதே நீயும்
எனவே ஆச்சி இசைந்து மொழிய
மனது பொறுக்க மாட்டாம லேதான்
ஒற்றைச் சிலம்பும் ஒருகையிற் குழையும்
பத்தினி கொண்டு பாதம் நடந்து
அன்னமே தாரா அழகு மயில்காள்
மன்னவ ரெந்தன் வணிகர் பெருமான்
சிலம்பது விற்கத் தென்னவன் கூடலில்
வயங்கொள் தோழான் அணிமணி மார்பன்
வந்தா ரவரை வானவ ரேவச்
சிந்தா குலமாய்த் தேடி வருகையில்
வேங்கை மரத்தடியில் வெட்டுப் பட்டுத்
தூங்கிக் கிடக்கத் தோகையர் கண்டு
அழுது தியங்கி அரனே பரனே
பழுதுவரு மோவென் பத்தா வுனக்கு
உத்தமியாகில் உயிர் மீட்டுக் கொள்ளச்
சித்த மிரங்கித் திருவருள் தாராய்
பத்தினி யாகில் பரம சிவனே
உத்தம னுயிரை உடனே தாராய்
அருமலர்க் குழலாள் வரமது கேட்க
அரனு மிரங்கி ஆதர வுடனே
பொற்சர டுசி பூவையர்க் கீய

அஞ்செழுத் தாலே அரனை நோக்கி
நெஞ்சில் நினைந்து நேசம தாகக்
கூறிரண் டாகக் குறைபட்ட வுடலை
மீறிப் பொத்தி மின்னர் கோர்க்க
எழும்பி வணிகர் ஈசனை யெண்ணத்
தழும்புகள் மாறிச் சந்திரன் போலக்
கண்ணகை யார்தன் கமல முகத்தை
மன்னவர் வணிகன் மகிழ்ந்தே பார்த்து
மாதேவி யாரோ வந்துநிற் கிறது
கோதைகண் ணகையோ குறித்துநிற் கிறது
கோவலர் தானுங் குறித்துக் கேட்பப்
பாவலர்க் கரசே பட்டபா டென்னவெனச்
சிலம்பது கொண்டு தென்னவ னூரில்
நலம்பெற விற்க நான்வரும் வழியில்
கண்ணாளன் கண்டு கள்வனென் றென்னை
மண்ணாளும் வேந்தன் மன்னவன் முன்னே
கொடுபோ யென்னைக் குறிப்புடன் விட்டுப்
பண்டு கள்வன் பழிகார னிவனெனக்
களவு சாட்டக் கம்பியன் றானும்
பழுது விளைத்தான் பார்த்தீப னென்னை
மந்திர பதிதன் மணிச்சிலம் பென்னச்
செந்திரு மார்பன் தென்னவன் றானுந்
தேவியார் தனது திருமுகம் நோக்கிப்
பூவையர்க் கரசே பொன்னின் சிலம்பு
உந்தன் சிலம்போ உள்ளபடி காணென
இந்தச் சிலம்பு எனதில்லை யரசே
என்று மொழிந்தார் ஏந்திளை யாரும்
தெரிவைபின் மொழிவாள் தென்னவ னுடனே
வழுதி கோமாறா மணிச்சிலம் பாலே
பழுது விளையும் பட்டணம் முழுதும்
மணிச்சிலம் பாலேயுன் மதுரைப் பதியைத்
துணிப்பது திண்ணம் துய்யகோ மாறா
கண்ணகை யாருடைய காலிற் சிலம்பு
தட்டானா லேயுன் தலமு மிழந்து
கெட்டிடு வாயெனக் கிளிமொழி கூறச்

*சந்திர குலத்தோன் தழறென வெகுண்டு*
*வெட்டிப் போடென விடையது அருள*
*மட்டில் லாமல் வந்து பிடித்துப்*
*பின்கட் டாகப் பிடித்துக் கொண்டுபோய்*
*மன்னவ னுரைப்படி மழுவாற் பிளக்க*
*எழுமோ கைகள் இளவர சேதான்*
*ஏங்கிச் சலித்து இருக்கும் வேளையில்*
*ஆங்கவன் றன்னை அடைவுடன் வெட்டென*
*மட்டிட வொன்னா மழுவரசனைக் கொண்டு*
*வெட்டி விட்டான் வேந்த னுரைப்படி*
*எண்ணமில் லாத ஏந்திளை யாளுடன்*
*மன்னவன் றானும் வரலா றுரைக்கச்*
*செழியன் மதுரைக்குச் தேசிக னாலே*
*பழியும் விளையும் பாண்டியன் மாள்வன்*
*கொற்றவன் மதுரைக் கூட லழிப்பேன்*
*வெற்றி வணிகன் வெட்டுண்ட தாலே*
*மாதவி யாலே வணிக னுயிரைத்*
*தீது விளைக்கச் சிவனை நோக்கிப்*
*பொன்னின் சரட்டைப் பூவையர் வாங்க*
*மண்ணில் விழுந்து வணிகன் கிடக்க*
*மன்னவன் தன்னை வதைசெய் வித்த*
*தென்னவன் மதுரை தீயிட் டெரிப்பேன்*
*ஆதி வல்லி அபிராமி தானும்*
*கோதி முடித்த கூந்தல் விரித்துத்*
*தென்னவ னுடனே தேவிவா தாடிக்*
*கண்ணகை யாருங் கடுகென விரைந்து*
*பாண்டியன் மாது பூண்ட சிலம்பைப்*
*பூமியி லடிக்கப் பொறிகள் தெறிக்க*
*ஏழு கன்னிய ரெதிரினில் தோற்றி*
*நெருப்பெழ மதுரை நீறென வாக்க*
*மந்திர பதியுடன் மற்றுள்ள பேரும்*
*பத்தினியா ருடைய பாதம் பணிந்து*
*பாதை நடத்தும் பத்திர காளி*
*நீதி நடத்தும் நெறியது கண்டு*
*வெள்ளியம் பலத்தில் வீற்றிருந் தம்மன்*

கொம்புவிளை யாட்டைக் கோதையர் கண்டபின்
கோவலர் பட்ட கொலைக்களங் குறுகிப்
பாவையர் தானும் பாங்க துடனே
கூறுகள் பட்டுக் குறைந்த வுடலை
மீறிய பூங்குழல் யின்னார் சுட்டு
அங்க மெடுத்து அலைகடல் போட்டு
மங்கையர் தானும் மற்றுள்ள பேருந்
தீர்த்த மாடிச் சிவனை நோக்கி
ஏற்றமான பூசை இயற்றிட வென்னப்
பந்தல் போட்டுப் பாங்கர சாணி
விந்தைய தாக மிகவும் வகுத்து
நாக மொருகால் நடுவே நிறுத்தித்
தூண்டா விளக்குத் தூக்கிய பிறகு
சிவகாயத் திரியால் தெற்பனை போட்டு
ஐந்து கும்பம் அடைவுடன் ஓமம்
மிஞ்சிய பட்டுச் சேலை யுடுத்து
அர்ச்சனை பண்ணி ஆயிரம் இளநீர்
நிச்சய மாக நேர்பெற வைத்துத்
தேங்காய்க் கும்பஞ் சேர நிரைத்து
மாந்தளிர் கொண்டு சாந்தனை செய்து
சிவாயநம வென்று சேவினை பண்ணி
நூற்றொரு காயத்திரி நோக்கம தாகப்
பதினொரு மந்திரம் பாவனை பண்ணிச்
சிவகா யத்திரி சேவித்த பிறகு
ஓம மந்திரம் யோக நிரைத்துக்
கும்ப மந்திரம் குறிப்புடன் பண்ணிப்
பிராண மந்திரம் பேர்பெறச் செபித்து
எட்டுச் சாபம் இயல்புடன் நீக்கி
சந்திர மந்திரம் தன்னை நினைத்து
ஆயீ நந்தியாம் அடைவுடன் பண்ணித்
தீத்த மெடுத்துச் சிவகாயத் திரியால்
நாற்றிசை தனக்கும் ஏற்றம தாக
நாவசை யாமல் நாடிச் செபித்துக்
கண்ணகை யாருக்குக் கவின்பெறு மந்திரம்
பண்ணிய யாகம் புண்ணியஞ் செய்து

மந்திர மெல்லாம் மனதில் நினைந்து
பூவுங் கரும்பும் பொலிவுற வைத்து
வெற்றிலை பாக்கு விருப்ப முடனே
அள்ளி யெடுத்து ஆயிரம் பரப்பிப்
பாங்கி னுடனே பந்தல்சோ டித்துத்
தேங்கமழ் மண்டபம் ஆங்கது தன்னைப்
பூங்கம லத்தாற் புரேட்சித்த பின்பு
அடுத்துத் தெற்பை மும்முறை போட்டுக்
கற்பனை மந்திரங் கருத்துள் நினைத்துச்
சொற்பயில் தூப தீபங் கொடுத்து
நாற்சதுரந் தெற்பை நலம்பெற வைத்து
வெள்ளை விரித்து மேற்கட்டி கட்டி
நறுமலர் தன்னை நன்றாய்ப் பரவி
தேமாங் கனியுஞ் சிறக்கப் படைத்து
அக்கினிச் சிலம்புக் கபிஷேகம் பண்ணி
வேத மந்திரம் விருப்பம தாக
நீதிப் படியே நினைப்புடன் செய்து
அம்மானை சிலம்பு அழகிய பந்து
கைமாக் கவரி கனக வளையலும்
மாலையா பரணம் வகைபெற வைத்து
மாதளம் பட்டு வகைபெற வணிந்து
செம்பொன் நிறைந்த கும்பந் தன்னில்
ஐம்பொற் றுகிலை அடைவுடன் சாத்திக்
கண்ணகை தனக்குங் கன்னியர் தனக்குங்
வண்ணமலர்க் குழலாள் மாதவி தனக்குந்
தந்திர மான தார்கோ தைக்கும்
இளந்திறை கொண்ட மாணிக்கத் தாளுக்கும்
அம்மானைக் கன்னி ஆலாத்திக் கன்னிக்கும்
ஆச்சி யார்க்கும் அளைந்துள்ள பேர்க்கும்
ஆகாச பத்தினிமா ரைம்பத் தொருவருக்குந்
தோதக பத்தினிமார் தொள்ளாயிரம் பேர்க்கும்
மோகக் குழலியர்கள் மூவாயிரம் பேர்க்கும்
அட்ட சத்தி எட்டுப் பேர்க்கும்
பஞ்ச சத்தி ஐந்து பேர்க்கும்
மங்கலன் விறுமன் வயிரவன் பூதன்

கிங்கிலியர் மார்த்தாண்டர் கின்னர ரியக்கர்
இங்கிலர் முதலாய் எண்ணா யிரவர்க்கும்
எங்கும் மடைகள் எழில்பெற வைத்து
இருபத்தொரு மூக்கு இசைந்த கரகத்தில்
திருவை நிறைத்துச் சேர நிறைத்துத்
திக்கு மிசைப்படு மங்கள முழங்க
அதிரமுன் நூற்றெட்டு மூலமந்திர மோதிச்
சீலம் பெறவே தியானம் பண்ணிச்
சருவம் பூசிச் சாற்றிய வெண்ணீறு
திருவருள் காப்புச் சிறக்க கட்டித்
தீபந் தூபம் தீர்த்தம் பரிமாறி
மூவகை மந்திரம் முதலே யோதி
வளைந்து வெள்ளை வகைபெறக் கட்டிப்
பாவனை பண்ணிப் பத்திரி போட்டு
அக்கினி பூசை அடைவுடன் பண்ணிச்
சிக்கெனச் சருவம் சிறப்புடன் வைத்து
அமிர்தம் வார்த்து அமிர்தமந்திர மோதி
அமிர்தம் பொங்கி அடங்கிய பிறகு
ஆதிமந் திரத்தால் அரிசியைப் போட்டுக்
கவசமுந் திரையால் கட்டளை பண்ணிக்
கல்லை ஒன்பது கனக்கப் படைத்துச்
சுற்றுங் கல்லை சூழ நிரைத்துச்
நெய் வேத்தியம் நிறையப் பண்ணி
ஆலாத்தி சுற்றி மேலாப் பெடுத்துத்
தூபங் காட்டிச் சுருளது வைத்து
ஐந்தெழுத் தாலே அருமறை யோதி
அக்கினி குளிர ஆதி மந்திரஞ்
சிக்கன வோதிச் சிவாயநம வென்று
பஞ்காட் சரத்தைப் பரிவுடன் நினைந்து
மிஞ்சிய வாத்தியம் வியப்புடன் தொனிப்ப
மஞ்சல் சுண்ணம் வகைவகை வைத்துப்
பாடகங் கோட்டி ஆடக மாட்டி
ஆதியி னுள்ள காவியம் பாடி
அருந்து தீபம் அம்மானை குழுத்தியும்

*பண்பெறப் பாடிப் பலமறை யோதிப்
பங்கய மலர்கொண் டரங்கென நிரைத்து
இந்திரன் முதலாய் இறைஞ்சிய பின்னர்
வந்தவர் தனக்கு வரமது அளித்துச்
சிந்தை குளிர்ந்து தெய்வலோகத் தடைந்தார்
இந்த விதியாய் இயற்றினார் பூசை
இந்திரன் போலே இருந்துவாழ் வாரே.*

# பொற்புறாவந்த காவியம்

1) சிந்துதங் கரவிந்த மலராச னக்கமலச்
சீர்பட்டி நகரிலுறை தெய்வகண் ணகைமேல்
இந்துபோல் எழில்வதன உலகநா யகியும்
எந்தைகண் ணகையம்மன் இனிதினிமை யான
கந்துகமெ னுந்தமிழில் வந்துலட் சணமான
கவிதையென வளர்மதுர காவியம் பாடப்
பந்துயர் மதமொழுகு தும்பிமா முகனழகு
பாதபங் கயமலர்கள் பாதுகாப் பாமே.

2) காருலவு மருதநில மும்நெய்தல் நிலமும்
கலபநட மிடுமுல்லை குறிஞ்சிமலை நிலமும்
சீருலவு பாலைநில முஞ்சென்நெல் கமலமுந்
திகழ்பட்டி நகரிலுறை தெய்வகண் ணகைமேல்
ஏருலவு செந்தமிழிற் பனுவலிசை பாட
எந்தனது நாவினி லிருந்தருளு மம்மா
வாருலவு பூண்முலைப் பார்பதியோர் கலையான
வாணிவெண் தாமரையில் வாழுமா தாவே.

3) வாழ்வுபெறு கலியுகமூ வாயிரமுந் நூறில்
வளமைபெற வன்னியர்க ளாண்டுவரு நாளில்
தாழ்வற விளங்குசிற் றரசர்கள் இருவருந்
தன்னிலங் காபுரித னைப்புரந் திடுநாள்
காழமுகில் தவளகர மாடமணி வாசலுறு
கமலமலர் வாவியிற் கனகமத ருந்தி
ஏழுலக முந்துதிசெய் நாகமங் கலையம்மன்
எழில்கொள்பொற் புறவாயெ ழுந்துவந் தனளே.

*4) வந்துலா வியபுயப் பங்கயல் படிந்து*
*வானுலவு சேர்தகைமை மன்னவ னறிந்து*
*இந்துலா வியசடைக் கங்காத ரன்பங்கில்*
*ஈசுபரி யோபுதுமை யீதெனவு மெண்ணி*
*தந்துலா வியபுயத் தடவீரர் வாசலில்*
*தலைவர்மா ரவர்களைத் தானழைத் தேதான்*
*புந்தியால் வாறபொற் புறாவதனை நம்முன்*
*பிடித்துவா வென்றுவிடை கொண்டுபோ யினரே.*

*5) போயவர்கள் வீரியங் காடுசார் வாவியில்*
*பொற்பிறவு வருமென்று போய்க்களறி னோரும்*
*காய்கதிரி னால்மேனி வாடவே படைவீரர்*
*கனகாலம் நிலைநின்று காணாமல் வந்தார்*
*நாயகம தானவன் னிமைதனக் குரைசெய்ய*
*நவரெத்ன வொளிதங்கு நற்பட்டெ டுத்து*
*வேயனைய தோளிகண் ணகைமன மகிழவே*
*வேண்டுதல் புரிந்தரசர் வைத்துநேர்ந் தனரே.*

*6) நேர்ந்துமவர் சிந்தையில் நினைத்தபடி பொற்பிறவு*
*நிச்சயம தாயெனது கைக்குள்வரு மாகில்*
*சாந்தமணி மாலைபொற் சாமரைதி ருப்பணி*
*தமக்கினிய தாய்நிதஞ் சாத்துவோ மென்ன*
*ஏந்தனிட மனமிசையத் துயில்கொள்ளுங் காலையில்*
*எழில்கொள்பத் தினியம்மன் எய்தியவர் முன்போய்*
*நாந்தக மிலங்கு நரகமதில் பொற்பிறவு*
*நற்புவியில் நன்மைபெற நல்விடையு ரைத்தாள்.*

7) உரைத்துமது தேசத்தி லுண்டான நற்குடியில்
ஓரேழு பேதையரை யுற்றினித ழைத்துக்
குரைந்தெழுதி நற்புனலில் ஆட்டியழ காகவே
கோலமணி மாலைவகை தூசிபுனை வித்துப்
பரைதிரு வெனும்பொற் புறவுவந் தவர்மடியில்
பட்சமுடன் தங்குமென பார்பதி மொழிந்தாள்
திரைகடலெ னச்சகல வாத்தியமு ழங்கவே
சென்றுமடி கோலுமென அவர்களை விடுத்தான்.

8) மொழிந்துசில நாள்சென்ற கன்றளவி லேயரசன்
முற்றுயிலெ னப்பரவி விற்கதிர் பரப்பச்
செழுந்தமது போல்விடிய வேபணிவி டைக்குரிய
தலைவமா ரைக்கடிது தானவன ழைத்துப்
பொழிந்துகரு ணைக்கடல ளித்தாள்ந மக்காக
பொற்பிறவி னின்பெருமை புகலவரி தாகும்
நீரேழு வாங்கிஷத் தெழில்பெருகு சிறுபேதை
ஏழுபே ரைத்தெரிந் தேயவர்வி டுத்தார்.

9) விடுத்தளவில் வாசலில் ஏகிய தலைவர்மார்
வென்றிபெறு நற்குடிவி ளங்கேழு பேரை
அடுத்தினிது மெய்யா யழைத்துக்கொண் டேகி
அணியாரும் மணிவாச லரசன்முன் நிற்ப
உடுத்தணியும் நற்பட்டும் எழிற்பூணு முதவியே
உபசார மாகமஞ் சனமாட விட்டு
விடுத்தவர்த மக்கினிய பரிமளசு கந்த
மடிகோலி யேபீதாம் பரத்துகில் அளித்தார்.

10) அளித்தவர்க் கேகருணை வைத்தரசு பெறுவார்
அழகான கன்னியர்கள் அன்னமயி லேநீர்
அளித்தெழு மலர்க்கமல வாவிதனி லேநின்று
சுற்றிமடி கோலிஅம் மனைத்தொழுது நில்லும்

ஒளித்தவர் வடக்கயிலை உருவான பிறவொன்று
வருமுந்தன் மடியிலே தோகையை யெடுத்தே
செழித்தகுல முண்டாக வயதையெ டுத்துச்
செப்பிவிடு மென்றுதிருச் செப்பருளி னாரே.

11) செப்பருள வேயதைச் சிரமீது வைத்தே
தேவரம் பையரெனச் சென்றேழு பேரும்
ஒப்பரிய லெட்சுமி வாவியங் கரைதனில்
ஓரெட்டு நாள்மடி கோலியொரு நிலையாய்
ஒப்பமுடன் நிற்கவே ஒருபேதை மடியில்
ஒயிலாக வந்தமர வுதிர்ந்தஇற கதனைத்
தப்பறவே தானெடுத் தேதலையில் வைத்துத்
தலைவரிட மேவந்து சார்ந்திருந் தனரே.

12) வந்தபொழு தேதங்க மாளிகை யெடுத்து
வடகரையை யொப்பான மதில்களு மியற்றிச்
சுந்தரமி குந்தபுலி யாசன மமைத்துத்
துலங்கிடு முயர்பட்டு மேற்கட்டி கட்டி
அந்தரி நாகமங் கலையான கண்ணகை
அதிககற் புடையபத் தினியம்மை தன்னை
மந்திர மணிக்கனக மணியாச னந்தனில்
வாசமது வானகுடி வைத்தருளி னாரே.

13) வந்தே யனேகநா ளிருந்தது பொறாமலே
வடிவொழுகு பேதையை மன்னவ னழைத்துச்
செப்பரிய தகைமைசெறி தெய்வமது கொண்டு
சென்றேகு மென்னவே கொண்டேகி யேதான்

துப்பற விலங்கைநக ரைச்சுற்றி வந்து
துய்யதம் பிலுவில்நகர் தங்கிய மாது
கப்புகன் நமக்காக துணையென்று தந்துதவு
கண்ணகையம் மாவெனக் காரிகை பணிந்தாள்.

14) காரியை தமக்கினிய கட்டுரைசெய் வாளம்மை
கண்ணர்குல மேருலவு கற்றமர புள்ளோன்
சீரணியும் மழவரச ராசன்வ குத்துவார்
செல்வனென வாழுமங் கலப்போடி தானும்
ஆரமுலை யேநமக் கானபூ சனைபுரிவன்
அங்கவனை யிங்கழைப் பேனென வுரைக்கத்
தாருலவு தையலுட னேநடந் தவர்கள்
தகைமை பெறுமிறக் காமநகர் சார்ந்தார்.

15) சார்ந்தவரி றக்காம நன்னகரி லேயதில்
தண்டாடு கமலவெரு கங்குடா வெளிமுன்
ஆர்ந்தரங் காரேறு தீதவனி லன்பாய்
அம்மனை யெழுந்தருளி யங்கவரி ருக்கச்
செப்பரிய கன்னியர்கள் தெய்வரம் பயருஞ்
சேர்ந்தபரி கலதெய்வ நவகோடி சத்திகள்
விற்காரர் மழவீரர் ஐயனார் பரிகலம்
வருமுலக நாயகியை வாழ்த்திநின் றனரே.

16) நின்றவர் தமக்கினிய பூசைபுரி யத்தேவி
நித்யகலி யாணிசிவ சத்திநினை வுற்றே
மன்றலணி வார்குழல் தன்னுடைய சிறுபேதை
மனதறிய வேபூசை புரிவதை யுரைத்து
எண்டிசைம திக்கவே பொங்கலிட் டம்மனும்
இனிதான திருமஞ்ச னத்தீர்த்த மாடி
மண்டலத்தி லுள்ளமா னிடர்துயர கற்றவே
மாநிலம திக்கமடை வையெனவு ரைத்தாள்

17) உரைத்தளவி லேமங்க லப்போடி தானறிய
உற்றபூ சைத்தொகை யுரைத்தெழுதி வைத்தே
தரைத்தலம் திக்கநற் பூசனைபு ரிந்துலக
தாயென மகிழ்ந்துசுப நாளதுதெ ரிந்து
விரைந்தெழு மலர்குழற் பூமாது சேர்பட்டி
மேடெனவி ளங்குநகர் மேவெனவு முற்றே
குரைத்தெழு சிலம்பணி பதத்திமா பத்தினி
கூடியவ ருடனே யெழுந்தருளி வந்தாள்.

18) வந்துதாய் பட்டிமா நகர்தனி லிருக்கவே
வடிவமுடன் மணிமேடை மண்டப மியற்றிக்
கந்தமரு மணியாச னத்தினி லிருத்தியே
கண்ணகைத் தாயுனது காவல்செய் திருக்கச்
சந்தமோ தக்கவிஞர் பல்லிய முழங்கவே
தாரைகா ளங்கொம்பு சங்கந்தொ னிப்பச்
சுந்தரமி குந்தபூ மாதுநா மாதுஞ்
சுபமங்க லசோப னஞ்சொல்லி னாரே.

19) சொல்லரிய கற்புடைய தோகைநீ மீனவன்
துணைவிழி மறைத்தநீ தொல்லுலகை யாளிநீ
மல்லரு மணிமார்பர் கோவலர் தமக்கினிய
மனைவிநீ யென்னுடைய மாதாவும் நீயே
நல்லநின் காவிய நடத்தவே யென்னுடைய
நாவதனி லருள்செய்து நற்றமி ழளித்தாய்
வில்லிநின் மதிமுகக் காரணச் செல்வியே
மேவுசுந் தரியான வீரவம் பிகையே.

20) அம்புவியி லக்கரையி லேமூரும் வாழும்
அன்புடைய வுன்பதி யடைந்தவர் வருந்தி
நம்பியுனை யேதொழுது நினைப்பவர் நினைந்தலைய
ஞாயமல்ல நீயவரை நாடிவரு ளம்மா

அம்பகமோ ராயிரம் உடையதிரு மாதே
அன்பாகி அறிவாகி அருளாகி யவளே
செம்பொன்மணி யாரமுலை துர்க்கையே பட்டிநகர்
சேர்கவுரி யாகிவளர் தெய்வகண் ணகையே.

21) கண்ணருள் சிறந்தெமைக் காத்தாயே யுனது
கருணைவைத் தடியார்க்கா தரவளித் தாயே
எண்ணமத கற்றியே கொடுவினையை மாற்றி
இரட்சிக்க வேணுமே மூலகமீ டேறப்
புண்ணியநி றைந்தசிவ சத்தியே முத்தியே
புவனேசு பரியே பொற்பூவ ராகியே
வண்ணமணி நாகபூ ஷணமணி பதத்தியே
மானாகர் மகளாக வாழுமா தாவே.

22) மானாகர் மகளாக வடிவதையெ டுத்தாய்
மாசாத்தார் மகனாரை மணமதுமு டித்தாய்
வானாடர் பகைதீர மகிடனை யழித்தாய்
மணவாளர் பழிதீர மன்னனை யெரித்தாய்
தானாக வந்துபல வூரினி திருந்தாய்
தாள்பணிந் தவர்களின் நோய்பிணி தவிர்த்தாய்
மானாகஞ் சூடியவர் மாதென வணங்கினோம்
மகிமைபெறு பட்டிநகர் வாழுமா தாவே.

23) தங்குமுடி மந்திரத் தவமுனிவர் கொண்டாடத்
தாரணியில் வாழ்முருகர் தாளடியும் வாழி
பொங்குசிவ சமயவே தாகமும் வாழி
புவிமீது தனதானி யம்பொலிய வாழி
கங்கைகூ ளக்கரைத் தேசமேழும் வாழி
கவிவாணர் கலைவாணர் கட்டாடி மார்வாழி
செங்கநக ரெட்டிநிறை பட்டிமா நகரிலுறை
தெய்வகண் ணகையம்மன் வாழவா ழியதே.

# அங்கணாமைக்கடவைக்
# கண்ணகை அம்மன் காவியம்

1) திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
செந்தா மரைமுகந் தாளையொப் பாளை
பொங்கு புகழா லுயர்ந்தபொற் றிருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைத்
தங்கள்பழி கொள்ளென்று பாண்டியன் முன்னே
சத்துரு தனைமுடித் துயிர்மீள வந்து
அங்கணா மைக்கடவை வாழ்கண் ணகையார்
அடித்தா மரைப்பாதம் நாளுமற வேனே.

2) உன்னை நெஞ்சாரவே நினையாத வாறோ
ஓதுமறை யோனெழுது மூழிவினை தானோ
என்னவினை யென்றறியே னெனது சென்னிக்குள்
எய்திய பிணித்துயரம் நீகளைந் தருள்வாய்
தென்னவனை யன்றுபழி கொண்டதிரு மாதே
தேசிகர் குலத்திலே வந்தெள் ளமுதே
அன்னநடை மாமயிலே தெய்வநா யகியே
அங்கணா மைக்கடவை மருவுகண் ணகையே.

3) சிவனா ரிடந்தனி லிருந்துவிளை யாடியே
சிலநாளி லொருபொழுது சிந்தையில் நினைந்து
பவமான பிணிதீரப் படிமீதில் வந்து
பாண்டியன் கூடலி னுள்ளே புகுந்து
தவமான மானாகர் மகளான கண்ணகை
தாரணி தனக்கொரு காரணம தான
நவமான அங்கணா மைக்கடவை வாழ்கின்ற
நாயகிதன் நாமமொரு நாளமற வேனே.

4) துட்டவா ரிக்கடல் சூழுலக மீதினிற்
வாழுமூ லத்தான தேவதைக் கெனவும்
இட்டமாய் நற்கனி சொரிந்திடும் பெண்பனையை
இன்றுமுத லாண்பனைய தெனநினைந் தவளே
பட்டதொரு கோவலனை யும்பிழைப் பித்தாய்
பாண்டியனை வென்றுபழி மீண்டுபுகழ் கொண்டாய்
மட்டுலவு சோலைசூழ் அங்கணாமைக்கடவை
மருவுகண் ணகையை யொருநாளு மயரேனே.

5) அங்கணா மைக்கடவை காரேறுதீ வெருவில்
ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்
பங்கைசேர் பட்டிமே டுயர்செட்டி பாளையம்
வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியுந்
திங்கள்நே ரொத்தறுதல் எங்குமீ திற்பெரிய
தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு பங்கமா தின்பெருமை
எந்தனா விற்கனவி லென்று மகலாதே.

## வற்றாப்பழைக் கண்ணகி தோத்திரம்

1) பலஞ்சேர் நல்ல பாண்டி நகர்
பற்ற எரி வைத்து
நலஞ்சேர் நல்ல இடமாகிய
நந்திக் கடற்கரை மேல்
வலஞ்சேர் நல்ல சிறியார் காண
வந்து இருந் தருளிப்
புலஞ்சேர் நல்ல வற்றாப் பழை
புகுந்தாள் பதம் பணிவோம்.

2) வேம்பின் படவா ளில் வீற்று
இருந் தருளி
யாம்பின் பணிந் தேத்தவெமை
யாள வந்த தேவி
காம்பின் றிரிந் தேகி ருவ
கண்ணாயிர முடையாள்
வேம்பின் உருவாகி மிக
வுற்றாள் பதம் பணிவோம்.

3) அங்கத்துறு பருநோ யெமை
யடையா வரமருளிப்
பங்கஞ் செய்யும் கண்ணோய் முதல்
பலவுமெமை யணுகா
செங்கண் ணுடை மங்கை யெங்கள்
திருவாகிய செல்வி
எங்கும் புகழ் தங்கவரு
வற்றாப் பழை யாளே.

4) ஆனோய் பல வன்னோய் களு
மடையா வரமருளித்
தானோய் பல தலமுந்தன்
தருளே செல விடுத்துத்

*தீநோய் செறிந் துற்றோர் வினை*
*தீர்த்துச் சுகமளித்து*
*வானோய்ந் திட வற்றாப் பழை*
*தங்கி யமர்ந் தாளே.*

*5) உவர் நீரில்மின் னொளியா யின்றும்*
*உறையு மெங்கள் தேவி*
*எவர் வேண்டினு மவர் யாவர்க்கும்*
*மினிய வர மருளிக்*
*கவர்வார் மனங் கசிந்தே யுகக்*
*கருணை மழை யுகுத்துத்*
*தவர் போற்றிடு வற்றாப் பழை*
*தங்கிய மர்ந்தாளே.*

*6) கொடிய வினை யகலா துறு*
*குண பேதமே யுடையீ*
*கடிய வினை யகலா துறு*
*கனவேதனை யடையீர்*
*நெடிய கதிரொளி போன்றுள*
*வற்றாப் பழை யாளைப்*
*படியவரு வினையா வையும்*
*பறித்தோட் டுவாள் தானே.*

*7) மகப்பே றின்றி வருத்தங் கொண்ட*
*வல்லவினை யீர்காள்*
*முகப்பே யுற்றுத் தொல்லை வினை*
*துடைக்க வந்த செல்வி*
*அகப்பே றிட்டு அலரிமல*
*ரகமே மலர்ந் தென்ன*
*மகப்பே றுமக் கீவாள் வர*
*வற்றாப்பழை யாளே.*

*8) பொங்கல் களும் பூசைகளும்*
*புகுத்திக் கரங் குவிப்ப*
*எங்கும் புகழ் தங்குமெங்கள்*
*இனிதாகிய செல்வி*
*பொங்குஞ்சுளை தங்கும் நல்ல*
*நந்திக் கடற் கரைமேல்*
*தங்குந் தல மினிதா யுறை*
*வற்றாப்பழை யாளே.*

*9) அல்லலற விருந்து நல்ல*
*செல்ல மருத மயில்*
*வல்லவினை தீர்க்க நல்ல*
*வரமே யெமக் கருள*
*நல்லதுரு நீரில் நல்ல*
*நாச்சி மாரோ டாடி*
*செல்ல மரு தகன்று வந்த*
*செல்வி யெங்கள் தேவி*

*10) நல்லதொரு நல்ல தலம்*
*வற்றாப்பழை யெனவே*
*இல்லமிது வெமக்கே யென*
*வெங்கள் பெரு மாட்டி*
*பல்ல வரும் பாவலரும்*
*பாடவரு ளீந்து*
*எல்லே யினி யிதுவே யெமக்*
*குறையூரென வுற்றாள்.*

## வற்றாப்பழைக் கண்ணகையம்மன் காவியம்

1) சீர்கொண்ட செம்முளரி யொருகைதண் டொருகைவளை
சிலையொருகை செந்நெலின் குலையொருகை
திகழ்கின்ற
போர்கொண்ட முத்தலைப் படையொருகை
யரவொருகை
புனையுமா தளமொருகை பொற்குடம தொருகை
தார்கொண்ட செங்கழுநீ ரொருகைசக் கரமொருகை
தாங்கிவளர் வெண்கோடு மோங்கிவளர் செம்மல்
வார்கொண்ட களபமுலை வல்லபை தரித்தமும்
மதயானை முகவர்தன் மலரடிகள் துணையே.

2) வெள்ளிமலை மாதுகண் ணிணையிலொரு திருமந்திர
மெஞ்ஞான சத்திவடி வாகிவெளி வந்த
வள்ளியை விளங்கவரு மாறனுயிர் பலிகொண்டு
வற்றாப் பழைவந்த மாதுகண் ணகைமேல்
தெள்ளியப தங்கொண்டு சுருதிநெறி நிலைநின்ற
செந்தமிட் பாவின்மிசை சிந்துகவி கூற
முள்ளிய வளைப்பதி விளங்கவிளை யாடிவரு
முதுமறைக் காடுறை விநாயகன் துணையே.

3) திறமிஞ்சு வலிகொண்ட தோகைமயி லுண்டு
செகமேவு விருதாடு சேவல்கொடி யுண்டு
கிரவுஞ்ச கிரியைத் துளைத்தவடி வேலுண்டு
கிரணமணி வாளுண்டு கிளர்சூல முண்டு
குறவஞ்சி குடிகொண்ட தொருபாக முண்டமரர்
குஞ்சரிக் கழகான கோலமயி லுண்டு
மறைகொஞ்சு செஞ்சிலம் படியிணைக ளுண்டவரை
வாவெண் றழைக்கினும் மகிழ்ந்தோடி வருமே.

4) காஞ்சிமா வடியிலும் பழனியங் கிரியிலும்
கமழ்திருச் செந்தூரி லும்பரங் குன்றிலும்
பூஞ்சுனை சுலாவுதென் கதிரையங் கிரியிலும்
புகழ்கோண மலையிலும் புகழ்மனை யிடத்தும்

வாஞ்சகூ ரப்பல மருப்பினும் விளையாடி
வந்தெனது நெஞ்சுகுடி கொண்டஞா னப்பெண்
ஊஞ்சல்விளை யாடிவரு முருகனுக் கல்லாது
பின்னுமொரு பேர்க்கென்னி டத்திலுற விலையே

5) வாழைபாய் பூகமடல் கீறிமுகை விண்டுமாங்
கனியுடைந் துநல் வருக்கையிற் சாயக்
கூழைவா சப்பலாவில் மந்திகள் குதிக்கக்
குடக்கனி யுடைத்துகத லிக்கனியிற் சாயத்
தாழைவெண் சோறுசொரி யப்பசுந் தேனூறு
தடமேவு மடலேறு சாலிவயல் சூழப்
பாழைகுல வுஞ்செந்நெல் முத்துதிரு கின்றநற்
பன்னுதமிழ் வற்றாப் பழைச்சி கண்ணகையே.

6) அல்லியுட னேகுமுத மழகுசெந் தாமரை
யலர்ந்தநற் பூம்பந்த லாகவதி னூடே
பல்லியமெ னச்சிறிது வண்டுகவி பாடப்
பசுங்கொம்பின் மந்திகள் கரங்கொட் டியாட
வல்லிநிக ரன்னங்கள் வெள்ளொதி மங்களப
வானரம் பையருமே வந்தழகு பார்க்க
நல்லமயி லாடல்புரி யக்கோகு லங்கூவ
நந்திக் கடற்கரை யமர்ந்தநா யகியே.

7) நாலுகோ ணட்சரத் துள்ளிருந் தாயே
நால்வேத மந்திரம் நமக்குரைத் தாயே
சாலமிகு மறுகோண வட்சரத் தாயே
சாத்திரமோ ராறுமுன் றோற்றுவித் தாயே
பாலினொலி பரிபுர பதத்தினணி தாயே
பதினெண் புராணமொடு பலகலைத் தாயே
கோலமிகு நந்திவெளி வந்திருந் தாயே
குலவுகற் புடையகண் ணகையெனுந் தாயே

8) அன்னப்பெண் ணேபெண்கட் கழகான பெண்ணே
அலங்காரப் பெண்ணேகற் பழியாத பெண்ணே
சின்னப்பெண் ணேயழகு செட்டிப்பெண் ணேயெங்கள்
தெய்வப்பெண் ணேசிந் தாமணிப் பெண்ணே
வன்னப்பெண் ணேகோவ லற்கினிய பெண்ணே
மானாகர் மகளாய் வளர்ந்ததொரு பெண்ணே
சொர்ணப்பெண் ணேகண் ணகைப்பெண்ணே யென்று
துரைராசர் தொழவந்த துய்யபெண் ணரசே.

9) வரபத்திர காளியென் றாடுமா காளி
மகமாயி யீசுபரி வல்லமைசெய் சத்தி
கரமுத் தலைச்சி சூலி கபாலி
களங்கற்ற பொன்னி விளங்குற்ற கன்னி
வரமுற்ற நரசிங்கி ஜெயவீர பத்தினி
வடுகிமா தங்கியென வந்ததிரி சூலி
உரமுற்ற புகழ்முத்து மாரியுப காரி
வராகியா னந்தியென வந்தபத் தினியே.

10) முன்றுக முடிந்தாலும் முடியாத வல்லி
மூவுலகை யும்பெற்று முடியாத வல்லி
கன்னலை வளைத்தசெங் கைக்கமல வல்லி
காமக்கோட் டத்தரசு கைக்கொண்ட வல்லி
பன்னக மணிப்பரி புரப்பாத வல்லி
பத்தினியெ னும்வல்லி பச்சைமலை வல்லி
செந்நெல்வயல் சூழ்நந்தி வெளிவந்த வல்லி
செகவல்லி மகவல்லி ஜெயவல்லி நீயே.

11) துர்க்கை பிடாரி மிடாரி கடல்நாச்சி
சோதிசிவ மங்கலி சுவாதிதிரு நீலி
முக்கண்ணி காடேறி யுச்சியுரு மத்தி
முன்னோடி பின்னோடி மோகனக் கன்னி
அக்கினிக் கன்னிபொன் னம்மானைக் கன்னி
அன்னவூஞ் சற்கன்னி ஆலாத்திக் கன்னி
திக்குத்திக் கெட்டுநவ சக்திகள்வ ணங்கவரு
சேனாபதிப் பத்தி னிக்கன்னி நீயே

12) மாணிக்கக் கன்னி மரகதக் கன்னி
வயிரக்கன் னிவயி டூரியக் கன்னி
பூணிக்க முத்துக் கன்னிநீ லக்கன்னி
பொருந்தும் பவளம் திருத்துற்ற கன்னி
ஆணிப் புருடரா கக்கன்னி கோமேதக
அழகுதக் கன்றன் மகட்கன்னி செம்பொற்
காணிக்கைக் கன்னிதே மாங்கனிக் கன்னி
நாக மணிக்கன்னி யானகண் ணகையே.

13) மானாகர் செல்வி யுனக்கே யடைக்கலம்
மாசாத்தார் மருகி யுனக்கே யடைக்கலம்
கோனாடர் செல்வி யுனக்கே யடைக்கலம்
கோவலன் பாரியு னக்கே யடைக்கலம்
தேனார் மொழிச்சி யுனக்கே யடைக்கலம்
செம்பொற் சிலம்பி யுனக்கே யடைக்கலம்
கானார் குழலி யுனக்கே யடைக்கலம்
கண்ணகைத் தாயே யுனக்கே யடைக்கலம்.

14) மாங்கனிச் செல்வியு னக்கோல மோலம்
மங்காத பத்தினியு னக்கோல மோலம்
பூங்குயிற் பேடி யுனக்கோல மோலம்
பொன்னின்பந் தாடி யுனக்கோல மோலஞ்
தேங்கமழ்க் கொம்பி யுனக்கோல மோலஞ்
செம்பொற் சிலம்பி யுனக்கோல மோலங்
காங்கேயன் றாயே யுனக்கோல மோலங்
கண்ணகைத் தாயே யுனக்கோல மோலம்

15) சீரகப் பூமாது மாலைமணி மார்பன்
சிறுதொண்ட ராயன் குருச்சேவை யுள்ளோன்
வீரதண் டைகள்குமிறி யொலிகள்கிடு கிடென
வேதமுணர் கின்றவன் பாதிமதி வேணியாள்
வேரகத் தோதுகதிர் காமனரு ளால்வந்த
வேலாயுத தன்பனுவல் விண்டசெந் தமிழைப்
பாரகத் தோர்சிறிது மிகழ்வரோ யிகழார்
பாதமல ரென்னாளும் நாவிலய ரேனே

16) அருள்மேவு சிவசமய நாதரும் வாழி
அன்புசெறி மட்டுக் களப்புநகர் வாழி
தருமேவு கயவாகு ராசனும் வாழி
தாரணி யெங்குந் தழைத்துமிக வாழி
மருவேறு மங்கையர்கள் கற்புநிதம் வாழி
மாதமும் மாரிமழை செந்நெலும் வாழி
திருமேவு தமிழ்மாலை யோதினவர் வாழி
தேவிபரா சக்திபதம் வாழவா ழியவே.

## பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் காவியம்

1) திருமருவு பூலோக மெங்கினும் வாழ்கின்ற
   செல்விகண் ணகைமீது சிந்துதமி ழோதத்
தருமருவு தந்திமுக னுங்குமர வேளுஞ்
   சடையுத னிற்புவியை வைத்தசங் கரனும்
மருமருவு வாலைசர சோதிமா லயனும்
   வடதேச முறைமதுரை மீனாட்சி யம்மனும்
மருமருவு வள்ளிதெய் வானையுட னென்னாளும்
   மலரடிக ளொருபொழுதும் மனதில்மற வேனே

2) மனதினிட மேநின்று கதிகொண் டெழுந்துவரு
   மானாகர் மகளாக வந்தசெந் திருவே
கனவிலும் நினைவிலும் மறவாம லேயுனது
   காதலுறு காவியந் தன்னையோ திடவே
அனுதினமு முனதுபத மலரிருகை கூப்பி
   ஆனந்த மாகவடி யேனுரைசெய் வசனம்
வனிதையே மாசாத்தார் மருகியே சொற்பிழைகள்
   வாராமல் முன்னின்று மனதுகந் தருளே.

3) அருளான மாதவிக் கேயருள்கொ டுத்தநீ
   அன்றுமொரு பொற்பதுமை சேரவைத் ததுவுநீ
மருளான கோவலர்க கேமாலை யிட்டநீ
   மலையரசன் மகளாக வந்தவளும் நீயே
இருளான காடுதனில் ஏழுபேர் கள்வர்
   எழுந்துவர ஆபரண மெல்லா மளித்தநீ
பொருளான பொருளும்நீ பொன்னின்மா நங்கையே
   பூலோகம் வாழ்கின்ற பூவைகண் ணகையே.

4) பூவையே புவிதனி லுள்ள மானிடர்கள்
   பூஞ்சோலை போலவொரு தேரது வியற்றத்
தாவியே தேருருள வில்லாம லேமனந்
   தளர்கின்ற வேளையது தானது வறிந்து

ஓவியம தாகவே தொண்ணூற்று மூன்றினில்
உயர்விருட் சம்மருத மரமாக நின்றாய்
ஏவியே சிகைபிடித் ததுபோல வந்த
இயல்பான கண்ணகையை மனதில்மற வேனே.

5) இயல்பான விடவரவின் நூபுரந் தன்னை
எடுத்துமே கோவலர்க் கீந்துபின் சென்று
மயில்போலும் மாதவிக் கேகடன் தீர்த்து
வாருமென் றுற்றமண வாளனை யனுப்பித்
துயிலான வெண்பட்டு மாலைகள் சரப்பளி
சொர்ணமுட னேமுத்து மூக்குத்தி மின்னக்
குயில்போல வேயெழுந் திடையசே ரியில்வந்த
கோதைகண் ணகையையொரு போதும்மற வேனே.

6) மறவாம லேயுனது புகழ்பாடி வருகின்ற
மானிடவர் தங்கள்பிணி தீரவருள் செய்வாய்
குறையாத பொருள்வரவு நிறையாக வேவருங்
குலதிலதர் வணிகர்குல மேயவத ரித்து
முறையாக முத்தமிழ்ப் பாமாலைகளில் நெடில்
முன்பாக வேசெல்வோர்க் கின்பமுட னீந்து
குறையாத பாக்கியம் மென்மேலு மருள்வாய்
குதிகொண்டு வந்திடுங் கோதைகண் ணகையே.

7) கோதையே கோவலர் சிலம்பதை யெடுத்துக்
கொடிதான மதுரைதனி லேவிற்று வரவும்
நீதமுட னேவைத்த திருவிளக் கதுவும்
நீள்கரக மதனில்நீர் பூவதுவு மிட்டு
வாதையுட னேயருகில் வைத்தஅடை யாளம்
வாடிவிடு மென்றவரு மேபோன பின்பு
காதலுட னேகண்ணை மூடியொரு நினைவால்
காணாத சொற்பனங் கண்டகண் ணகையே.

8) கண்டவுடன் கூந்தலைநீ விரித்ததுவும் பொய்யோ
காடுசெடி முள்ளிடறி வந்ததுவும் பொய்யோ
துண்டான கோவலரைக் கண்டதுநீ பொய்யோ
தோகையே பொற்சரடு விட்டதுநீ பொய்யோ
அண்டுமே சொக்கர்செயல் பெற்றதுநீ பொய்யோ
ஆளனுட னேகதைகள் பேசினது பொய்யோ
மண்டைதனில் நூலுருவி விட்டதுநீ பொய்யோ
மாறனிட பொற்கத வுடைத்தகண் ணகையே.

9) மாறனிட பொற்கத வுடைத்துவந் தாயே
வடசேரி தென்சேரி யாகவந் தாயே
தேறியே தாச்சிகை பிடித்திழுத் தாயே
செம்பொற் சிலம்பதைத் தானெடுத் தாயே
மாறியே படியதனி லடித்துடைத் தாயே
மாகாளி யாயுருக் கொண்டுநின் றாயே
வேறுமொரு நோய்பிணிய கற்றவந் தாயே
வேங்கைமர நிழலுற்ற மெல்லிகண் ணகையே.

10) கண்ணகைத் தாயேயு னக்கோல மோலம்
காங்கேயன் தாயேயு னக்கோல மோலம்
பொன்னின்பந் தாடியு னக்கோல மோலம்
பொற்சரட்டுக் காரியு னக்கோல மோலம்
அன்னையைக் கொன்றா யுனக்கோல மோலம்
ஆறதனில் வந்தாயு னக்கொல மோலம்
பின்னற் சடைச்சி யுனக்கோல மோலம்
பிஞ்ஞகன் தேவியு னக்கோல மோலம்

11) ஓலமென வேவந்த கண்ணகைத் தாயே
ஒருநொடியில் மதுரையை யெரித்துவரு நாளில்
சீலமுட னேபொய்கை தன்னிலே கன்னிமார்
சீரான திருமஞ்சள் தேறது முறித்துக்

கோலமுட னேவட சேரிதென் சேரியாய்க்
கூக்குரலிட் டேயவர்கள் வெற்றியது கொள்ள
மாலையினில் வைத்தவெரி போல்மன மகிழ்ந்து
வையகந் தொழவந்த மாதுகண் ணகையே.

12) மாதினிரு தனமதனில் வைத்துமொ ரிடைச்சி
வாரியே வெண்ணைதனை வைத்தலுத் திடவே
காதுதனில் நாராசம் விட்டதுபோ லோடிக்
கரைந்துருகி யேவரக் கண்டொரு பறைச்சி
பாதிமுந் தானையது கொண்டுமே வீசப்
பாங்காக விருவரையுங் கண்டுள மகிழ்ந்து
நீதியுட னேயுங்கள் சேரிவே காதென்று
நிச்சயம் தாய்சொன்ன பத்தினிப் பெண்ணே.

13) பத்தினி யம்மா வுனக்கோல மோலம்
பார்பதி யம்மா வுனக்கோல மோலம்
உத்தமி யம்மா வுனக்கோல மோலம்
ஓங்கார சத்தி யுனக்கோல மோலம்
முத்தமிழ்ச் செல்வியு னக்கோல மோலம்
மூவர்க்கு மூர்த்தி யுனக்கோல மோலம்
அத்தனார் பாரியு னக்கோல மோலம்
அம்பிகை யம்மாவு னக்கோல மோலம்.

14) அம்பிகை யாளேயு னக்கோல மோலம்
ஆயிரங் கண்ணியு னக்கோல மோலம்
பைம்பொற் சிலம்பியு னக்கோல மோலம்
பாண்டியனை வென்றாயு னக்கோல மோலம்
செம்பவள மாதேயு னக்கோல மோலம்
திருவெற்றி யாளேயு னக்கோல மோலம்
அம்புவியி னாளேயு னக்கோல மோலம்
ஆதிகண் ணகையேயு னக்கோல மோலம்.

15) ஆதியே பட்டிநகர் தம்பிலுவில் காரேறு
அதிகமுள வீரைமுனை கல்முனைநீ லாவணை
ஓதியே பாண்டிசெறி கல்லாறுமகி ழூரெருவில்
உற்றகழு வாஞ்சிகளு தாவளை பழுகாமம்

நீதிசெறி தேத்தாவெ னுஞ்செட்டி பாளையம்
நேராங் கிரான்குளம் புதுக்குடியி ருப்புச்
சோதிபெறு மகிழடித் தீவுமண் முனையூர்
சுற்றுமுறு முதலைக்கு டாவிலுறை பவளே

16) உற்றுமே தாண்டவன் வெளியதனி லேவந்து
உவமைபெறு கொத்துக்கு ளந்திமிலை தீவு
வெற்றிபுனை வந்தாறு மூலையீச் சந்தீவு
மேலான அங்கணா மைக்கடவை வெளியிலும்
எத்திசையி லும்வருட மிடபமது முன்வந்து
இயல்பான திங்கள்தனி லேமனமு வந்து
அத்தனருள் பெற்றுமே பூலோகந் தன்னிலே
அன்பான பாலமிர்த முண்டகண் ணகையே.

17) என்றுமே கொம்பினிட பாலமிர்த மேகொள்ள
ஒருகோடி பரிகலமு னைச்சூழ்ந்து வரவே
யென்றுமே கோதாரி யெங்களிட மணுகாமல்
இடிவிழுந் தோடவரு ளேகபரஞ் சோதி
அன்றுமே கோவலர்க் கேமனைவி யாகி
அழியாத கன்னியா யரவினில மர்ந்தாய்
பண்டுமூ வுலகையும் பெற்றவளே தாயே
பாடினேன் பிழைபொறுத் தாளுமம் பிகையே.

18) அம்பிகை வாழி அரியயன் வாழி
ஆனையுரி போர்த்தவர னாருமே வாழி
தும்பிமுக னுங்குகனு மேவாழ வாழி
சூட்சமுறு கலைமகளு மேவாழ வாழி
அம்புவியி லேயுனைப் போற்றினோர் வாழி
அன்பாக வேபடித் தோரும் வாழி
கம்பைதிரு வொற்றிநகர் பட்டிநக ரெங்குமுறை
கண்ணகைதி ருப்பதம் வாழ்கவா ழியதே.

## தாண்டவன்வெளி

## கண்ணகை அம்மன் காவியம்

1) அழகொழுகு திருவதன முறுநெடிய விழிகுலைய
அகலவிட வதனவெழில் குமிழமலர் பறிக்கப்
பழகனைய குதலைமொழி பகரவே தரளநகை
பளபளென மகிழ்வினொடு மதிமுக மிலங்கக்
கழலனைய வரவவொலி கலகலென நடைமருவு
கண்ணகைதன் மீதினிற் காவிய மியற்ற
மழகழிறு முகமுடைய விகடதட கணபதியை
மனதினி லிருத்திமல ரடிகள் தொழு வோமே.

2) ஆங்காரி அயிலுலகி லமலனுட னுறையும்
ஆதிபக வதிகௌரி அறமிக வளர்த்த
றீங்கார மாயிதிரி புரமயிட சங்காரி
சித்திநவ சத்தியி லொருத்தியென வந்த
ஓங்கார காளிதிரி சூலிவழு தியைவென்ற
உத்தமி யுலாச்சடை பத்தினியென் னம்மா
தாங்காத பரசமய மதுபெலி காரிநீ
தாண்டவன் வெளியிலுறை தையல்கண்ணகையே.

3) இமையமலை யரசன்மக ளானவளும் நீகழுவி
லெண்ணாயி ரஞ்சமண ரைவதைத் தவளும்நீ
உமையவளு மாகியர னுடனுறை பவளும்நீ
உந்தியருள் தங்கைநீ கங்கைநீ யம்மா
கமைபெருகு சோழநகர் மேவுமா னாகர்
கன்னியெனு முன்னரிய கண்ணகையும் நீயே
சமையமதி லெனையாள வருபவளும் நீயே
தாண்டவன் வெளியிலுறை சத்திகண் ணகையே

4) ஈசனொடு கனகசபை மீதுநட முற்றாய்
எண்ணரிய புவனமது யாவையு மழித்தாய்
தேசினொடு சூதகனி யாகமுன் னுதித்தாய்
தென்னவன் நுதல்விழியை யுன்னுமுன் மறைத்தாய்
காசினியில் முலைதிருகி மதுரையை யெரித்தாய்
கனலவிய விடையர்தெரு நற்றணைபின் னணிந்தாய்
தாசிதுயர் தீரமகிழ் வோடினி திருந்தாய்
தாண்டவன் வெளியிலுறை தாயேகண் ணகையே

5) உத்தமியே யுன்னையொரு நாளிலுரை செய்யினும்
உறுதுயரு முற்றநவ கோளுறை பசாசும்
மத்தமுறு குள்ள பில்லிசூ னியமும்
மானிடர்கள் வஞ்சனையும் வைப்பேறு பலவினையும்
நித்தமு மெரிந்து பொடியாய் நடுநடுங்கி
நிமிஷத்தி லோடுமது நேரமுண் டோதான்
சத்தியே யெனதுயர் மாற்றியருள் புரிவாய்
தாண்டவன் வெளியிலுறை சத்திகண் ணகையே.

6) ஊதுகுழல் சின்னமொடு தாரைதவி லெக்காளம்
ஓசையுற வானவர்கள் பூசைவிதி செய்யக்
காதலுறு நாரியர்கள் சோபனமி சிசைக்கவகை
கண்டுமகிழ் கொண்டுமிக நன்றென மகிழ்ந்தாய்
பாதமுறு கிண்கிணி கலீரென வெழுந்து
விளையாடு பாலர்களின் நன்மொழி தவிர்த்தாய்
தாதவிழ் செழுங்குமுத வாய்மலர்ந் தென்வினை
தவிர்த்திடாய் தாண்டவன் வெளியிலுறை தாயே

7) எந்தவித மான பிழைகளது செய்தாலும்
எடுத்துமொழி வாருனை யடுத்தவர் தமக்கு
வந்தவினை பேய்பில்லி சூனியம் மாற்றியே
வயங்கருள் சுதந்திரந் தனங்களு மளித்தாய்

அந்தவகை யன்றியு மளப்பினி லிசைத்தவகை
அத்தனையு மித்தகு ஜெயத்தினை விளைத்தாய்
சந்திரச தாசிவனி டத்தினில மர்ந்துவளர்
தாணடவன் வெளிமேவு சத்திகண் ணகையே

8) ஏதமுறு புதுமைக ளியற்றுகலி காலமென்
றெண்ணரிய தண்டமிழி லிசைந்தகவி கூற
வேதமறி யாதபல பேதையர் மிகுந்தனர்கள்
விண்ணுற விருப்பதனை யெண்ணமுற வேதான்
ஆதிசெய லைக்கருதி யம்மைநீ யிப்பதியில்
அடங்கியுன் னடியவர்க் காய்மன மிரங்கிச்
சாதுவொடு மக்கள்மேல் அன்புவைத் திடுவாய்
தாண்டவன் வெளியிலுறை தையல்கண் ணகையே.

9) ஐந்துருவ தாகிமல ரைந்துருவில் லாதோர்
ஆதிமுது செவிடுமை குருடுதெளி யாதோ
மைந்தர்க ளைக்கெதியாய் மகிழ்ந்துவள வாரோ
வருபிணி பசாசுவினை யருகியொழி யாதோ
நைந்துள்ள வறியோர்க ளரசுபுரி யாரோ
நல்லமழை பெய்துவயல் விளைவுசெழி யாதோ
தந்தையர்கள் துயர்தீர வரமருள வேணும்
தாண்டவன் வெளியிலுறைதையல்கண் ணகையே.

10) தேவர்தொழு திரிபுரை யானாய் நமோநமோ
திரிபுவன றிங்கார சத்தி நமோநமோ
மூவர்புகழ் முச்சத்தி யானாய் நமோநமோ
மூதறி வுணர்ந்ததிரு மங்காய் நமோநமோ
நாவதனி லோதவருள் தந்தாய் நமோநமோ
நாற்பத்து முக்கோண நாயகிந மோநமோ
பாவவினை நோயகல வந்தாய்ந மோநமோ
பாவையே திரையில்வரு பரமகண் ணகையே.

11) பரமகயி லாயசிவ தேவிசி வாயநம
பஞ்சாட்சர ரத்தினொளி யானாய்சி வாயநம
நரர்பிணிகள் வினையகல வந்தாய்சி வாயநம
நவகோடி சத்திசிவ தேவிசி வாயநம
வரம்பெறக் கம்பமதில் நின்றாய்சி வாயநம
வரையில்வரு தேவியபி ராமிசி வாயநம
திரையில்வந் தேகிருபை தந்தாய்சி வாயநம
திருமால் சகோதரி செல்விகண் ணகையே.

12) திருநாம முனையோது வோர்பிணி யகற்றியுந்
திறமான பூசைபுரி வோர்கள்துயர் தீர்த்தும்
உருவேறி உனைநினை பவர்வினைகள் நீங்கியும்
உன்கிருபை வரமருளு முலகமா தாவே
வருமாலை யுனதுபுகழ் பகருமடி யார்களின்
மனத்துய ரகற்றியே வரமருளு மம்மா
கருமால் தனக்கிளைய கன்னிபத் தினியே
கண்ணகையே தாண்டவன் வெளியிலுறை தாயே.

13) கோலமா மதகரிக் கோடொத்த கனதனக்
குலவணிகர் தன்குடிக் குகந்தகற் பரசியே
காலமழை பொய்க்கினுமுன் கருணைபொய் யாது
காலிலணி நாகமணித் தரிசுச் சிலம்பால்
ஞாலமுழு தும்புகழ் படைத்தமா பத்தினி
தவளமொடு பவளநிரை தண்டிகையி லேறி
காலிவயல் சூழவுறும் வற்றாப்ப ழையில்வாழ்
கண்ணகையை யெண்ணவினை காதமோ டிடுமே.

# தம்பிலுவில் கண்ணகை அம்மன் காவியம்

1) திருமருவு கயிலாய மலையின்மிசை நிலவுபுனை
சிவனுமுமை யவளுமொரு சிம்மா சனத்தில்
மருவுபொழு துமையவ ளெழுந்தடி பணிந்து
வள்ளலே மதிமரபில் வந்ததமிழ் மாறன்
வெருவுதலி லாமலே வருநுதலில் விழிகண்டு
வெட்கினே னதுநீக்க விடையருளு மென்ன
தருமருவு மிதழிபுனை தாமசே கரனுந்
தையலுன் மனநினைவு தான்முயலு மென்றார்.

2) முயலுமென விடைகொடா தவசிடை யிருந்தே
முயல்வடுவில் மதியனைய முகமலர் சிறந்து
அயலில்வரு நாகமங் கலையெனு மணங்கை
அன்பினுட னேதிருக் கண்ணருள் சுரந்து
புயலைமுன் நாள்விலங் கிட்டதிறல் வழுதிதன்
பொன்னுலவு நெற்றியிற் கண்ணைமறை யென்ன
மயலற வுரைத்திலகு சட்டைகனல் கொடுவந்து
மணிமுடித ரித்தரசர் மதுரையெரி யென்றார்.

3) என்றபணி விடைகொண்டு கையிலயங் கிரியில்
இறங்கியே விண்தெய்வ லோகத் திருந்து
தண்டரளத் திருமார்பன் முத்துமா ளிகையிலொரு
சரடுகொண் டிளைகண்ணு லேணியி லிறங்கி
துன்றுமீ னக்கொடிக ளிடவழுதி நிதமுநிகழ்
சூதமா லின்கனிய தாயுதித்த மையால்
என்றுமாய் வோமெனக் கருதியவ ராய
இதமான நுதலின்வழி தனைமறைத் தவளே.

4) தவமனைய நுதலின்வழி மறையவுங் குலவழுதி
தன்கையிற் கனிதனைக் கொடுநடந் தேதான்
நவமணிப்பொன் னிலகுமா ளிகையிலொரு
பொற்பேழை
நடுவறையில் மூடிவைத் தைந்துநாள் விட்டே

பவனமற வேமற்ற நாளிற் றிறந்து
பார்த்தபொழு தேமதலை யழுகுரலைக் கேட்டு
கவலையொடு கணிதரைய ழைத்தென்ன மாயமிது
கட்டுரையு மென்னஅவர் கட்டுரைத் தனரே.

5) கட்டழகுத் திருமதலை தன்னாலுன் அரசழியுங்
கன்னியும் நீயுமலர் கழல்மதுரை நகருங்
கெட்டிடு மெனக்கணிதர் சென்னதை யறிந்து
கிரண மணிப்பசும் பொன்னாற் சமைத்த
பெட்டகம துள்வைத்த டைத்துமே வைகையெனும்
பேராற்றி லேவிட நீரோட்ட வழியாய்
மட்டறமி தந்துவந் தலைகடலி லேதோன்றி
மானாகர் மகளாக வந்தகண் ணகையே.

6) மானாகர் மகளாக வளர்கின்ற நாளில்
வலியவைந் தலைநாக மணிபுனைவ னென்று
மேனாளி லுள்ளபடி யறிந்துமா நாகரும்
வேல்வளவ னைத்தொழுது விண்ணப்ப மிட்டு
தேனாரென் மகளுக்கு நாகமணி யுள்ளிட்டுச்
சிலம்பிலா தேவதுவை செய்யொணா தெனவே
கானாறு தாதமீகிப் புயவழுதி கோனுமீ
காமனைய ழைத்தினிது கனவரிசை செய்தார்.

7) செய்துசில கப்பல்கள் கொடுத்தவர் விடுத்தார்
செத்தவர் பிழைக்கவர முத்தமிய ளித்தாள்
எய்தும் பொழுதெதிர் வெடியரச னைவென்று
ஈடழி யாமலே நாகமலை சென்று
பையரவி னைத்தொழுது நாகமணி தன்னைப்
பாலித்து வேண்டியவ ராத்து மீண்டு
துய்யபுகழ் வளவன்முன் வைத்திட மகிழ்ந்து
தொல்வரிசை மீகாம னுக்கருளி விட்டார்.

8) விட்டுநல் வணிகர்குல மானாகர் மகளுக்கு
மிகுநாக மணிகொண்டு மகிழ்வோடு நல்கி
எட்டோ டிரண்டரைக் குள்ளபசும் பொன்னின்
சிலம்புக்கு நாகமணி யுள்ளீடு மிட்டு
திட்டமுட னேபொருள் வழங்குமா சாத்தார்
சிறுவனாங் கோவலர்க் கேமண முடிக்க
மட்டுலவு செந்திருவுந் திருமாலும் போலே
வையகம் துய்யவே வாழ்ந்திருந் தாரே.

9) வாழ்பொழுது சோழன்முன் நாடகம் நடிக்கும்
மாதவிதன் னால்மனது கோவலர் மயங்கி
நாளோரி ரவுக்காயி ரத்தென்க ளஞ்சிபொன்
நல்கியுள்ள கைப்பொருள்கள் யாவையு மிழந்து
வாளரவின் மணிபொதிசி லம்பாகி னும்விற்க
வாங்குவா ரிலையென்று மதுரைநகர் சென்று
நீள்தெருவில் விலைகூறி வருகோவ லன்றன்னை
நேர்கண்ட தட்டானும் நின்றேது சொல்வான்.

10) சொல்லரிய கடல்வழுதி யல்லாதி தற்குவிலை
தொல்லுலகி லுள்ளவரி லெவர்தருவ ரென்று
நல்லமணி வாசலள வாகவா விதைவிற்று
நான்தருவ னென்றுகொடு போனகம் மாளன்
செல்லைமுன் நாள்விலங் கிட்டதிறல் வழுதிதன்
தேவிபுனை பரிபுரத் திருடனிவ னென்று
சொல்லியிது தானுன்சி லம்பென்று தட்டானுங்
கும்பிட்டு நிற்கவே கொற்றவனு ரைப்பான்.

11) கொற்றவனு நம்முடைய சிலம்போவீ தில்லையே
குலமனைவி கையிற்கொ டுத்தறியு மென்ன
திட்டமொ டுரைக்கவவர் செம்பொற்சி லம்பதனைத்
தேவிநிகர் பாண்டிமா தேவிகை வாங்கி
மற்றெனது பரிபுரமு மல்லவிது நாகமணி
மண்ணிலுள் ளோர்புனைய வந்ததிலை யென்னக்
கொற்றமிகு மன்னனுக் கிதைவந்து சேடியர்கள்
சொல்லவே கம்மியனு மல்லவே யென்றான்.

12) அல்லவே செய்ததொழி லடியேனு மறியனோ
அண்ணலே பெண்மதியி னாலிவரு ரைத்தார்
கொல்லும்நீர் கள்வனிவ னென்றுதட் டானுங்
கும்பிட்ட டடிவிழக் கொற்றவன் மயங்கி
வல்லசிர மேகநா தணையழைத் திங்கு
வதையுமென மதயானை வதையாத தாலே
கல்நெஞ்சன் மழுவினா லேபிளப் பித்த
காரணங் கனவினிடை கண்டகண் ணகையே.

13) கண்ணருவி களபமுலை வேல்வழிந் தோடக்
கடிமனைய கன்றுமறு தெருவினிடை வந்து
தண்மருவு வேங்கைநிழல் தனிலிருபி ளப்பான
தன்கணவ னைக்கண்டு கண்களில றைந்து
மண்ணினிடை வீழ்ந்தெனது கணவர்கோ வெனவே
மரணமுற வேவந்த வகையறிய வேதான்
விண்ணுலகு தனைநோக்கிப் பொன்னூசி வாங்கி
மீளவுமெ டுத்துயிரை மீட்டபத் தினியே.

14) மீட்டுயிரை வரலாறு சொல்லுமென வேதான்
வினவவே கோவலர்வி ரித்தினிது ரைப்பார்
கேட்டுருவி நூலைநிழ லிறகிடவு மென்று
கிரணமணி யார்சிலம் பொருகையில் வாங்கி
நீட்டுதெரு விற்குழை வலக்கையி லேந்தி
நெற்றியிற் கண்ணிடை நெருப்புமழை தூவ
பாட்டளி மதம்பெருகு வேம்பணி புயத்தான்
பார்த்தீப னிருந்ததிசை பார்த்துவந் தனளே.

15) வந்துதிரு வாசலில் நின்றவ ளுரைக்க
வழுதியுமெ ழுந்தெதிர் வாசல்தனில் வரவே
கொந்தகை மதுகுலைய நின்றமயில் கண்டனைக்
கொலைகார னோகொடுங் கோலரசன் நீயோ
என்தலைவ னைப்பிளப் பித்தவனும் நீயொ
இந்தச் சிலம்புக் கிணைச்சிலம் பெங்கே
தந்துபா ருன்தேவி தனதோவீ தெனதோ
சபையிலுள் ளோர்களிதைத் தானுரையு மென்றாள்.

16) தானுரையு மென்றுகையில் நூபுரமெ டுத்துத்
தரைதனி லடித்திடத் தகர்ந்தது நெருப்பாய்
போனபொறி போலநா கமணிதெ றித்திடப்
புரவலந டுங்கிமனை போய்க்கதவ வடைத்தான்
தன்னருகில் நின்றதட் டானையுமெ ரித்துத்
தடமுலைதன் னைத்திருகி யெறியவது சென்று
மன்னவன டைத்தகத வேழையு முடைத்து
வேந்தன்மணி மார்புருவ வீழ்ந்துயிரி ழந்தான்.

17) வீழ்ந்துயி ரிழக்கமது ரேசனைய ழைத்து
மெல்லியர்தன் மனதிலுறு வேகமமை யாமல்
காந்துகன லிட்டுமது ரைப்பதியெ ரித்துக்
கன்னிவரும் போதிடைக் கன்னியர்கள் கண்டு
வேதனைத ணிக்கவென் றேதிருக் கொங்கைதனில்
வெண்ணெய்தனை யப்பியவர் கண்ணுறம கிழ்ந்து
போதுற்ற சீத்தலைச் சாத்தனார் வந்து
பூவையே நின்கோபம் மாறிவிடு மென்றார்.

18) ஆறிநின் றேதெய்வ லோகமதை நோக்கினாள்
அப்போ தெழுபெண்க ளன்பா யிறங்கி
மாறுலவு கைக்குழைய வர்க்கினித ளித்து
மாதருட னேகூடி மஞ்சள்நீ ராட்டி
தாறுமலர் பாக்கிலைய வர்க்கினித ளித்துத்
தையல்நின் றம்மானை தானாடி யேதான்
மாதுதிரு வுள்ளங்கு ளிர்ந்தினிதி ருந்தாள்
வையகத் துள்ளவர்கள் வாழ்வென் றேதான்.

19) வாழ்கவென் றேயபய வரமது கேட்க
வழுதிகாணிற் செங்கழுநீர் மலருடனி ருப்பத்
தாழ்கின்ற சீத்தலைச் சாத்தனார் வந்து
தம்மாலே யிவ்வுலக மீடேற வேணும்
நாளும்நீர் புவியில்வரும் நாளோது மென்ன
நண்ணுதல்வை காசித்திங்கள் நான்வருவே னென்று
நீளவே யோர்கலையை மண்ணிலேநி றுத்தி
நேரிளையும் வானுலக மேறிநின் றாளே.

20) நேரிளைதன் னோர்கலையில் நான்குகலை யாகி
நிலவுபோ லேயுலகில் நிறைபூசை கொண்டு
பாரிலுள் ளோர்களின் நோய்பிணி தவிர்த்துப்
பண்புசெறி தம்பிலுவி லூர்தனி லிருந்து
அரசறியு மங்கணா மைக்கடவை காரைநகர்
வீரமுனை பட்டிநகர் களுவாஞ்சி மகிழூர்
பேரான கல்முனைகல் லாறெழுந் தருளிப்
பெருமையுடன் வரமளித் தினிதுகாத் தவளே.

21) அக்கரவ ணிந்தவர னாரிடமி ருந்துநீ
அம்மையென வன்பருக் கருளதுகொ டுத்தநீ
சக்கரக ரத்தவன் தங்கையென வந்தநீ
தந்திமுக நாதனொடு தம்பியருள் தாயும்நீ
தக்கவினை நோய்பிணிகள் தானகல வைத்தநீ
தாய்தந்தை யானநீ சற்குரு தெய்வம்நீ
மைக்கருங் குழல்பெற்ற மதுரைநகர் வஞ்சியே
மலையரசன் மகளனைய மாதுகண் ணகையே.

22) கந்தமிகு காவரிப் பூம்பட்ட ணத்திலுயர்
கருதுபுகழ் மானாகர் மகளனைய திருவே
வந்துமீ னவனுயிர்வ தைத்துமது ரைப்பதியில்
வல்லெரியெ ழுப்பியே வளரிடைய சேரி
வெந்துமெரி யாமலே நல்வரம ளித்து
மேதினித னக்குவர மானதுகொ டுத்து
சந்தோச மாகவே கிருபைதந் தருள்மேவு
சத்தியே நாகமங் கலையான திருவே.

23) தாய்பெற்ற மகள்துர்க்கை யேமனமி ரங்கித்
தயவினுடன் பாமிர்த மானதுகொ டுத்துத்
தூயதொரு நற்பிள்ளை யெனவளர்க் கிலையோ
தோகையே நாகமங் கலையெனு மணங்கே

நேயமுட னேயடியேன் மனமது மகிழ
நெஞ்சினில்ம னக்கவலை தீரவரு ளம்மா
ஆயரிட சேரியில டைக்கலம்பு குந்த
ஆயன்ச கோதரி ஆதிகண் ணகையே.

24) நகரமுத லானசிவ சோதியர னாரிடத்
தரியபொற் கலசமது டுக்கைநற் குழையும்
வகரமுயர் பொற்பிரப் பங்கோலமி குந்த
பலவரமு மேபெற்ற பாக்கியதவ மயிலே
நகரமுட னெமதுகிளை மக்கள்மனை சுற்றம்
நன்மையொடு வாழவருள் பண்ணும்நீ ரம்மா
அகரமை யுங்கிலியும் ஔவுஞ்சௌ வுமான
ஆதிவள ராதியே அன்னைகண் ணகையே.

25) பொருள்வைத்த வணிகர்க்கு மகவுற்ற குயிலே
புகழ்பெற்ற மதுரைக்கு மெரியிட்ட திருவே
தருவைத்த புகழ்சற்ப மலரிட்ட மயிலே
தயவுற்ற வுனைநித்தம் மலரிட்டு மடியேன்
திருவொத்த முகிலொத்த பதநித்தம் பணிவேன்
திகழ்பெற்ற பலபிணி நோயகற் றிடுவாய்
கருவுற்ற முகிலொத்த தனவெற்பு மயிலே
காசினிது திக்கவரு கண்ணகைத் தாயே.

# பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக் காவியம்

1) சீர்சிறந் திடுகரட விகடதட மும்மதச்
செம்மலுட னாதிபர மேஸ்பரனு மாலும்
தார்சிறந் திடுபசிய மஞ்ஞைவா கனனும்
தங்குகெரு டத்துவச மாலும்நா ரணியும்
பார்சிறந் திடுகமல நான்முகன் தேவியும்
பட்டிநகர் மேவிவளர் பாவையு மகிழ்ந்து
கார்சிறந் திடுகவிதை பாடவருள் தந்துமழை
காதலுட னேயுதவ நாளுநினை கிற்பாம்.

2) நிலையான நவக்கிரகம் நின்றநிலை யாலோ
நீதிபுரி மன்னர்செங் கோல்வழுவி னாலோ
தொலையாத மானிடர்செய் வஞ்சனையி னாலே
தொல்லுலக மெங்குமழை யில்லையென வாட
கலையாத செந்நெல்வயல் விளைவதுவு மின்றிக்
கதிர்குடலை தலைசோர மானிடர்க ளேங்க
உலையாத உனதுஅருள் தந்துமழை பொழியவருள்
ஓங்கிவளர் பட்டிநகர் வாழுமா தாகவே.

3) மாதாவு மானகௌ மாரியொடு வாலை
புவனைதிரி புரையென்னு மாதிமுதற் சத்தி
தாதா வுனதுமன மானது மகிழ்ந்து
தாரணியோ ரீடேற மழையுதவ வேணும்
வாதாடு கொம்புமுலை மங்கையர்கள் நீராடு
வாவிதனில் மருமலர்கள் வழமைபோல் மணம் வீச
கோதாடு குயில்கூவு பட்டிநகர் மேவிவளர்
கோவலன் தேவியென வந்தகண் ணகையே.

4) கண்ணீரி னால்வந்த கனகபத் தினியே
கழனியுறு வேளாண்மை புன்செய்சே னைப்பயிர்கள்
உண்ணீர்மை குன்றிமிக வாடுதே யம்மா
ஒருநொடியில் மழைவெள்ள மோடிவரச் செய்வாய்

*மண்ணீரி னால்நுரை திவலையெழ வாறோடை*
*வாவிகுள மெங்குமே நீர்பெருக வேணும்*
*பெண்ணீர்மை தங்கிவளர் மாசற்ற செல்வியே*
*பேசரிய பட்டிநகர் வாழுமா தாயே.*

5) *மாமேவு மக்கரைப் பற்றுநகர் மானிடர்கள்*
*வயல்களது புரனாக வாடுதே யம்மா*
*தேமேவு செஞ்சாலி விளைவதுவு மில்லையோ*
*தேசமழை பெய்துநகர் செழிப்பதுவு மெப்போ*
*காமேவு மருமலர்கள் கனிவகைகள் சொரிகின்ற*
*கழனிசெறி கமலமலர் வாவிசூழ் நகரில்*
*பாமேவு பாடலிற் பிழைபொறுத் தாளுவாய்*
*பட்டிநகர் மேவிவளர் பாவை கண்ணகையே.*

6) *மாதேவல் லவனோடு கடகவிடை கும்பத்தில்*
*வருவெள்ளி சுபனாகி மருவுநாள் தன்னில்*
*போதாளுங் குருசந்திர யோகமத னாலும்*
*புகழ்மேவு கேசரி யோகமத னாலும்*
*நீதமுட னேமுகில்கள் சோனை மழையாக*
*நீங்காது பொழியவே நின்கருணை தருவாய்*
*ஆதரவு தந்துமழை பொழியவருள் செய்வாய்*
*அருள்பெருகு பட்டிநகர் வாழுமா தாவே.*

7) *பத்திசெறி யுத்தமர்கள் நித்தமுனை மறவாது*
*பாதபூச னைபுரிய மேகமதே ழுந்து*
*புத்திசெறி கடலின்நீ ரானது முகந்து*
*பூலோக மெங்குமிரு ளாகவே மூடி*
*இத்தினம் நீரில்லை நாளையொரு மழைவெள்ளம்*
*ஏழைகள் தனக்குமன மானது மகிழ்ந்து*
*சித்திபெற வேயுனது கிருபைதந் தாள்வாய்*
*திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே.*

*8) மங்கையே மானாகர் மகளாக வந்தாய்*
*மதுரைநகர் மாறனொடு தீயினுக் கீந்தாய்*
*செங்கைதனில் நற்சிலம் பேந்தியே நின்றாய்*
*செட்டிமக னோடுதென் கூடலில் நடந்தாய்*
*கொங்கைதனில் வெண்ணெய்தனை யப்பிடவு கந்தாய்*
*கோலிடையர் சேரி குளிர்ந்திடுக வென்றாய்*
*எங்கையடா என்கணவ னென்றுபழி கேட்டாய்*
*ஏருலவு பட்டிநகர் வாழுமா தாவே.*

*9) நாயகிநீ யல்லாது வேறுயார் துணைசெய்வார்*
*நாட்டில் மழையில்லாது நாங்கள்படு மின்னல்*
*தாயா யிருப்பதாற் பார்த்திருத்தல் நீதியோ*
*தரணியோர் பிழைபொறுத் தாளநினை யம்மா*
*வாயார மானிடர்கள் சொற்பிழை பொறுத்து*
*மனதிலருள் மேவினால் இருள்வேணு மோதான்*
*சேயாருங் கமலமலர் வாவிபுடை சூழவளர்*
*திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே.*

*10) அரசியே யுனதுவிழி யருள்சிறிது வந்தால்*
*ஆலவிட வேகமது தானடங் காதோ*
*கரைமேவு கடல்நீரு மூவர்மாறி டாதோ*
*கால்வடவை நீர்பூமி வாய்வொடுங் காதோ*
*தரைமீ திறந்தவ ருயிர்பெற் றெழாரோ*
*தருணமதி லேசோனை மழையிறங் காதோ*
*பரவைநிகர் மழுவரசர் குழமருகில் மேவிவளர்*
*பட்டிநகர் தன்னிலுறை செட்டிமா தாவே.*

*11) ஆதியர னாருதவு வேதநெறி வாழி*
*அருள்பெருகு திருநீறு சிவசமயம் வாழி*
*நீதிசெறி பண்டார வன்னியர்கள் வாழி*
*நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி*
*சோதியுருவான கண்ணகைத்தா வாழியவள்*
*சிலம்பிங்கு கொண்டுவந்த கயவாகு வாழி*
*பாதிமதி சூடுமர னாருடலி லணியும்*
*பண்புசெறி நாகம்மை வாழவா ழியதே.*

# கன்னன்குடா கண்ணகை அம்மன் மழைக்காவியம்

இயற்றியவர் :- க.நோஞ்சிப்போடி அண்ணாவியார்
கன்னன்குடா

1) அரியதொரு புவிமுழுதும் அருள்புரியும் எங்கள்
ஆயிரம் விழியுடைய அம்மைகண்ணகை மேல்
பரிவினுடனே நல்ல காவியம் பாடப்
பாரதக் கதைதன்னை மேருவில் வரைந்த
அரிமருகனே யெங்கள் அறுமுகவன் துணைவா
அடியார்கள் செய்ததொரு பயிர்வகைகள் தளைக்க
திருமன மிரங்கியே திடுதிடென மழைபொழியத்
தேவாதி தேவனே சிந்தை குளிர்வாயே.

2) ஆளமுறு கடல்நீரை வானமதி லேற்றி
அம்மாவே கண்ணகைத் தாய்மன மிரங்கி
ஏழைகள் படும்துயரை மாற்றுவா யென்றும்
இடைச்சேரி காத்திட்ட ஈஸ்வரித் தாயே
தாளமொடு உடுகோசை தனைக்கேட்கும் மெங்கள்
தயாபரிக் கண்ணகைத் தாய்மன மிரங்கி
காளமுகில் மேகங்கள் கருணைமழை பொழியஅருள்
கன்னன் குடாவிலுறை கண்ணகைத் தாயே.

3) இலங்கிய சிலம்பதனை இருபாதம் தனிலும்
என்றென்றும் அணிந்திடும் ஈஸ்பரித் தாயே
அலங்காரமாய் நாங்கள் அறுவடைகள் செய்தோம்
அதனிலுள்ள பயிர்வகைகள் அவை கருகுதம்மா
பலன்காண வேநல்ல பருவமழை பொழியப்
பத்தினித் தாயுனது சித்தம்நீ இரங்கும்
கலங்கியே வாடுகிறோம் காத்தருளு மம்மா
கன்னன் குடாவிலுறை கண்ணகைத் தாயே.

4) தாயேயிவ் வுலகுள்ளோர் செய்குறையி னாலோ
தான்தோன்றும் அப்பரிட தன்குறையி னாலோ
காயாம்பூ மேனியன் கண்ணர் குறையாலோ
கதிரைமலை உறைகின்ற கந்தர் குறையாலோ
தீயாக எரியுதே செய்தபயிர் வகைகள்
சீதேவித் தாயுனது சிந்தை குளிரம்மா
காயாத மலர்தூவி உன்னடி பணிந்தேன்
கன்னன் குடாவிலுறை கண்ணகைத் தாயே

5) கண்ணாயிரம் பெற்ற காரணச் செல்வியே
கடியவெயில் தனைமாற்றிக் கருணை மழைபொழிய
அன்னாளில் தம்பிலுவில் தன்னில் வாழ்ந்திட்ட
அந்தணப் பயலுனது அடிமலரைப் பணியப்
பொன்னான மழை பொழியத் திருமனமிலங்கியே
பூலோகம் நிறைந்திட்ட பொற்பதத் தாயே
கண்ணாலே நீர்சொரிய உன்புகழைப் பாடினேன்
கன்னன் குடாவிலுறை கண்ணகைத் தாயே.

6) ஆதிரை நட்சத்திரம் அதினி லுருவான
அகிலாண்ட நாயகி அம்மை கண்ணகையே
ஏதுகுறை செய்தாலும் நீமன மிரங்கியே
இப்போது மழைபொழிய தப்பாம லருள்செய்
வாதுபுரி மன்னவர்கள் வன் செயலினாலோ
வயல்முற்றும் செய்தபயிர் வாடுதே யம்மா
காதாரக் கேட்டறியோ மிச்செயலை நாங்கள்
கன்னன் குடாவிலுறை கண்ணகைத் தாயே.

7) கேட்டே அறிந்தேநீ தட்டானும் செய்த
கெடுமதியால் மதுரைநகர் சுட்டே யெரித்தாய்
வாட்டமுட னேவந்து வளர்மதுரை தன்னில்
வளக்காடி வழுதிதனை வதைத்த பத்தினியே

ஏட்டிலுள்ள காவியம் ஈதல்ல தாயே
என்பாடல் தனக்காக இரங்கிநீ அருள்செய்
கட்டழகி கன்னநகர் கோயிலுறை கின்ற
கண்ணகைத் தாயேயுன் கழல்பணிகு வேனே.

8) பணிவேன் உன் பொன்னடியைப் பத்தினித்தாயே
பருவமழை பொழியஉன் திருமன மிரங்கும்
அநியாய மாய்ப்பயிர்கள் வாடுதே அம்மா
ஆர்வுதவு வார்உன்னை யல்லாது வேறோர்
பனியாலே பயிர்வகைகள் விளையுமோ இந்த
பாதகம் தீர்ப்பவ ரார்பரா பரியே
கனிவான மனம்மகழ்ந் தெமையாண்டு கொள்வாய்
கன்னன்குடா விலுறை கண்ணகைத் தாயே.

9) பொன்னனைய காவேரிப் பூம்பட்டணத் திலுறை
பூவைமா தவிதனக் கேபொரு ளளிக்க
வன்மணிச் சிலம்பதனை வாரியே களற்றி
வணிகேசன் கோவலர் கரத்தே கொடுத்து
தென்னவன் மதுரையிலே விற்றுவிலை கூறிச்
சென்றே இருபேரும் அன்றேகி நின்ற
அன்னையே கன்னநகர் தழைக்க அருளம்மா
ஆயிரம் கண்ணியே அகில நாரணியே.

10) ஆயிரம் கண்ணிநீ அகிலமுழு தாளும்நீ
அருமைபெறு மானாகர் மகளாக வந்தநீ
தாயும்நீ தந்தைநீ தற்பரா பரியும்நீ
தாரணியில் மானிடர்கள் சஞ்சல மகற்றும்நீ
ஆயரிட சேரியி லடைக்கல மிருந்தநீ
அரவின்மணிச் சிலம்பதனை அணிந்தபரா சக்திநீ
தீயுதே செய்தபயிர் செழிக்கமழை பொழியச்
சித்த மிரங்கியருள் சீதேவித் தாயே

11) சீதேவி வந்தணுகத் திருவருள் தந்தருளும்
செய்தபயிர் வகைகளது செழிக்கஅருள் கூரும்
மூதேசி அணுகாமல் முன்நின்று உதவும்
முத்தமிழ் மக்கள்துயர் முழுதகலப் பாரும்
பாதார விந்தமது பணிவோர்கள் தங்கள்
பஞ்சமா பாதகம் பறந்தோடச் செய்யும்
ஆதாரம் நீஅல்லால் ஆர்உதவி யிருந்த
அட்டவரை எட்டிலுறும் ஆதி கண்ணகையே

12) அட்டவகை யானபயிர் தளைக்க அருள்புரியும்
அடியவன் நான்உன் புகழைப்பாட அருள்தாரும்
துட்டர்களை வேரோ டறுக்கவகை பாரும்
தொல்லுலகில் நல்லமழை சொரியஅருள் புரியும்
செட்டியெனும் கோவலரைச் சேர்ந்திட்ட தாயே
தென்பகுதி மக்கள்படும் தீவினையைத் தீரும்
வட்டமுலை தன்னாலே மாறனை வதைத்த
வணிகர் குல மானாகர் மகளானதாயே.

13) காரணச்செல்வியே காலமழை பெய்யக்
கண்பாரும் கண்ணகைத் தாயான திருவே
ஏர்உழுதி விதைத்திட்ட நெல்வயல் களெல்லாம்
எரியுதே எங்கெங்குமே காந்தரூபி
ஆர்வந்து இவ்வேளை தடுத்திட்ட போதும்
ஆதித்தன் எறிக்கின்ற அகோரம் பொல்லாதது
நீரம்மா வந்திந்த நிட்டூரம் தீர்ப்பாய்
நித்தமும் கன்னநகர் உறைகின்ற தேனே.

14) தேனான மாங்கனி யாயுதித் தாயே
திறைபெற்ற பாண்டியன் விழிமறைத் தாயே
பூணாரம் பூண்டதொரு பொன்னான தாயே
பொன்செய்யும் கொல்லனைப் பொன்றுவித் தாயே

வீணாக செய்த பயிர் வாடுதேயிந்த
வெயில்கொடுமை மாற்றியருள் விமலதிரி புரையே
காணொண்ணாச் சோதியே கன்னநகர் கோவிலுறை
கண்ணகைத் தாயே உனக்கடைக் கலமே.

15) அடைவான மாரிமழை தான்பொழியு தில்லை
அனியாயம் செய்வோர்கள் அவர்களால் தொல்லை
கொடியவெயில் கொஞ்சமும் குறையுதே யில்லை
கூக்குரல் இட்டுமுனைப் பணிவாரு மில்லை
இடியேறு வீழ்ந்திட்ட தன்மையைப் போலே
எரியுதே எங்கெங்கும் என்செய்வோ மம்மா
வடிவான கண்ணகைத் தாய்மனம் மகிழ்ந்தால்
வலியவேவந்து விழும் வான்மழையு மிங்கே.

16) இங்கீர்த முடன்வெள்ளிக் கயிலையி லுறைந்த
ஈஸ்பரன் தன்னுடன் இணையா யிருந்த
தங்கஉமை உருமாறித் தரணியி லுதித்துத்
தார்வணிகர் மகளாகிச் சத்துருவை வென்று
பூங்கரவ மணிச்சிலம் பதுபூண்டு இந்தப்
பூலோக மெங்கனும் பூசைக ளுகந்து
திங்கள்தனில் குளிர்ச்சிகள் பாடவே மகிழ்கின்ற
செல்வி பத்தினிபாதம் தன்னை மறவேனே.

17) மறையோர்கள் புகழ்பாட மணியோசை தவில்தாளம்
மகிழ்வோடு குழலோசை மனுவோர்கள் ஊத
குறையாத சாம்ராணி கற்பூர முடனே
குங்குமம் கஸ்தூரி எங்குமே கமள
கறைகண்டர் அடியார்போல் கட்டாடி மார்கள்
கண்களில் நீர்சொரியக் கனமலர்கள் தூவப்
பிறைபோன்ற நுதலழகைப் பெற்றிட்ட தாயெங்கள்
பிணிதீரக் கண்ணநகர் வந்தமா தாவே.

18) மாதா வெனப்புகழ் படைத்தாய் நமோநம
மலையரசன் மகளாய் உதித்தாய் நமோநம
வேதாந்த ரூபியாய் நிற்பாய் நமோநம
வெள்ளிக் கயிலையி லுதித்தாய் நமோநம
சோதி யொழியாய் எழுந்தாய் நமோநம
தொல்லுலகில் நல்லமழை சொரிவாய் நமோநம
பாதார விந்தமது பணிந்தோ மென்தாயே
பருவமழை பொழியஅருள் புரியு மென்தாயே.

19) மங்காத பத்தினி யுனக்கே அடைக்கலம்
மானாகர் மகளே யுனக்கே அடைக்கலம்
இங்க திறத்தி யுனக்கே அடைக்கலம்
சகல கலைச்சி யுனக்கே அடைக்கலம்
அங்கயற் கண்ணி யுனக்கே அடைக்கலம்
ஆயன் சகோதரி யுனக்கே அடைக்கலம்
கங்கைச் சடையோன் இடப்பாகம் தங்கும்
கண்ணகைத் தாயே உனக்கே அடைக்கலம்

20) ஏர்வாழ்க மறைவாழ்க கலியுகம் வாழ்க
ஈரேழு புவனமும் வாழ்கமிக வாழி
பார்வாழி மன்னர்செங் கோல்நிதம் வாழி
பரிவான மழைமுகில்கள் என்றென்றும் வாழி
சீர்வாழி சிவன்உமை திருமாலும் வாழி
சீதேவி லட்சுமி தாயாரும் வாழி
கார்வாழி கன்னன் குடாவிலுறை பத்தினிக்
கண்ணகைத் தாய்பாதம் வாழ்க வாழியதே.

## கண்ணகை அம்மன் மழைக் காவியம்

1) பூமாது மேவுசிறி புவனநா யகியண்டர்
போற்றுகண் ணகைஉலக மாதாவின் மீது
நாமாது மேவுகா வியமொன்று தன்னையே
நல்லதமிழ் அறியாத புல்லன் ஞான்கூற
கோமாது உமைபாகன் உடையதொரு குஞ்சரக்
கொம்பிலகு மும்மதத் தும்பிமுகன் அருளால்
மாமாது மணவாளன் வள்ளிதென் கதிரைநகர்
வாழ்வுபெறு குமரமுரு கேசரும் துணையே.

2) முருகேசரைப் பெற்ற அன்னையே மின்னே
முப்பத்தி ரெண்டறம் வளர்த்த மெய்குழலே
திருமால் தனக்கிளைய தோர்சிவா னந்தியே
தேவியே உனதுசெய லல்லது வேறுண்டோ
சருகான தற்குயிர் கொடுத்தவருள் போலவே
தாரணி தளைக்க வரு காரணமதாக
வருவாசல் விளைவிக்க மழைபொழிய வேணும்
வந்தாறு மூலையூர் வாழ் சவுந்தரியே.

3) வந்தே உனக்கினிய வெள்ளிலை யடைக்காய்
வரிசைபெறு பழமிளநீர் உருசிபெறு வேழ்வி
தந்தேயுன் னடியார்கள் மன்றாடினால் மனது
தாயே இரங்காத வாறேது தானோ
நொந்தே தவிக்குமடியார் களுக் காகவே
நோக்கமது வைத்துலகில் நாட்டமணு காமல்
சந்தோச மாகமழை வருவிக்க வேணும்
தையலே ஈச்சநகர் தன்னிலுறை மின்னே.

4) தன்னில் மழையில்லாத தென்னகுறை தானோ
சண்டவலி தீக்கிரகம் நின்றநிலை தானோ
இன்னிலமிம் மானிடர்கள் செய்தகுறை தானோ
ஏதுகுறை என்றறிவ தெப்படி யென்னம்மா

என்ன குறையானாலும் நீயதனை மாற்றி
இரக்கமுடனே மழைவரக் கிருபைசெய்வாய்
நன்னில மதிக்கவரு கன்னன்குடாவி லுறை
நளினமல ரழகுலவு நடன சுந்தரியே.

5) நடன திரிபுரி கௌரி அம்பிகை சவுந்தரி
நாரணி காரணி நவகோண வட்சரி
விடமது வளைந்த சிவநிடமது புரிந்துவளர்
வேத பரமானந்த வீரி ஓங்காரி
திடமுடைய மதுரைநகர் சென்றெரி கொழுத்தியே
சேரிகுழி ரக்கிருபை செய்தவருள் போல
மடமயிலே உனதருளால் மழைபொழிய வேணும்
வாழ்வுபுகழ் மண்முனையில் வருமுலக மாதே

6) மாதே நல்வணிகர்குல மானாகர் மகளே
வரிசைபெறு கோவலன் மனைவியானவளே
சூதே நெகிழ்த்த முலையாளே நின்னடியேன்
சொல்லுமொரு மன்றாட்டம் ஒன்று கேளம்மா
ஏதேனு மறியாத சிறியோர்கள் செய்தபிழை
எல்லாம் பொறுத் தருளியே மனமிரங்கி
போதே இருண்டமழை பொழிவிக்க வேணும்
பூவையே புதுமை நகருறையு மாதாவே.

7) புதுமையுட னின்மன மிரங்கி யருளாகி
பூதல மதிக்கவெகு போதமழை பெய்ய
பதியிலுள்ள பலபயிர்க ளானது தளைக்கவே
பாங்கான கிருபைகண் பார்த்தருளி யேதான்
கதுமையுறு சென்னல் விளையக்கருணை செய்த
காரணம தாகவே வந்தெம்மை யாள்வாய்
மதியனைய நுதலியே மடவார் தன்னரசே
மகிழடித் தீவிலுறை வண்ண மாதாவே.

8) உறைதரு பேரானந்த ஒளியாகி வெளியாகி
ஓங்கார றீங்கார ஆனந்த ரூபியாய்
மறைநாலு புவனமாய் மண்ணுமாய் விண்ணுமாய்
வாயுவொடு தேயுவாய் மன்னு புனலானாய்
இறைவியுன் செயலன்றி வேறுதவி யுண்டோ
இனிதாக உன்கிருபை தந்து ரெட்சிப்பாய்
நிறைகமல வாவிசூழ் முதலைக் குடாவிலுறை
நித்த கலியாணியுறை சக்தி கண்ணகையே.

9) சத்தியே நவகோண சத்தி நீயாகியே
தாய் தந்தையா யுலகு தாபரித்தாயே
முத்தமிழ் உரைத்த சற்பாலகற் குன்கிருபை
மோசமில்லா துலகிலே யருள் சுரந்து
நற்றமிழ் பாடலின் மீது வருகின்ற
நானடிமை சொற்பிழை களானது பொறுத்து
சுற்றரிய தான்தோன்று மப்பரிட கொக்கட்டிச்
சோலைநகர் தனனையாழ் தோகை கண்ணகையே.

10) கண்ணகையே உன்னுடைய காரணம் விளங்க
காசினியில் ஏழை எழியார்கள் துயர் தீர
பண்ணமுறு பலபயிர்க ளானது தழைக்கவே
பாங்கான கிருபைகண் பார்த்தருளியே தான்
மண்ணிலுள் ளோர்களிடர் வறுமை துயரகலவே
வாழ்வுசெறி சென்நெல் கதிர்வரிசையுடன் விழைய
திண்ணமுடன் உன்கருணை செய்தருள வேணும்
செட்டிபாளைய மருவு தேனே செந்திருவே.

11) திருவுள நினைக்கமழை வாராது போமோ
தேசத்திலுறு சென்னல் சேத மிகவாமோ
கருதரிய மானிடர்கள் கவலை தொலையாதோ
காசினியில் மாதரிட கற்பு வளராதோ
வருபெரிய தெய்வம்நீ என்றுமே உலகத்தில்
மகமாகி அன்புநீ புரிகுவாய் அம்மா
ஒருபுதுமை உலகத்தில் அதிசயம் காண
உதவுவாய் எருவில் உறை உலகமாதாவே.

12) உலகுதனிலுன் கிருபை இனியருள வேணும்
உற்றமழை பெய்யஒரு உதவிசெய்ய வேணும்
பலதிசையில் உழவர்விரை பயிர்தழைய வேணும்
பரிசிபெறு பாலமிர்தம் உருசிபெற வேணும்
மலையெனவே பலசூடு வைத்தருள வேணும்
வாரிமிகவே தேச மீடேற வேணும்
சலசலென மழைபொழிய வரமருள வேணும்
தாவு மகிழூரிலுறை தங்கு மாதாவே

13) தாவுபுகழ் மாவின்வடு வானதினி பொய்யோ
சாற்றரிய மதுரைநகர் காத்ததினிப் பொய்யோ
மேவுமுயர் மீனவனை வென்றதினிப் பொய்யோ
மிக்கதொரு முலைதிருகி விட்டதினிப் பொய்யோ
கோவலர்தன் உயிர்மீட்ட கொள்கையது பொய்யோ
கூர்விழியே உன்னுடைய வீரமது பொய்யொ
சோவெனவே மழைபொழிய வரமருள வேணும்
செல்வமுறு கல்முனையில் வல்ல பத்தினியே.

14) வல்லதொரு பத்தினி நீயல்லவோ அம்மா
வரமருள்செய் உத்தமி நீயல்லவோ அம்மா
தொல்லுலகில் உன்கிருபை சொல்ல வெழிதாமோ
தோகையே மானாகர் புதல்வி நீயம்மா
நல்லமழை பெய்துலகில் நன்மையரு ளம்மா
நாட்டம் வைத்தே உலகில் வாட்டமணுகாமல்
செல்வமுறு நாரியர்கள் சேர் காரதீவிலுறை
தேவியே பரமசிவ காமி காரிகையே.

15) காரிருள் பரந்துமழை வாராது போமோ
கதிர் வரவையானது கனத்து விழையாதோ
ஏரது சிறக்கமழை வாராது போமோ
எப்பொழுது முன்கிருபை இனி மோசமாமே
பாரிலுள் ளோர்களிடர் வறுமை துயரகலவே
பண்புசெறி தம்பிலுவில் ஊர்தனி லிருந்து
வீரமுனை மாநகரில் வீற்றினி திருக்கும்
வீரி ஓம்காரி திரிசூலி யம்பிகையே.

16) அம்பிகை சவுந்தரி சடாட்சரி மனோகரி
ஆனந்த ரூபி அகிலாண்ட நாயகியே
தும்பி முகனைப் பெற்ற நாரணி காரணி
தூயபங்கய மிலகு பூரணி மாதங்கி
நம்பு மடியார்கள் வினை தீர்த்து ரெட்சிப்பாய்
நயமாக மழைதந்து நல்விழைவு தருவாய்
தம்பிலுவில் மாநகரில் வீற்றினி திருக்கும்
தாயே இரக்கமுள்ள தரும தேவதையே.

17) தரும பரிபூரணித் தாயெ சரணம்
சங்கரி சர்வ தற்பரியே சரணம்
பெருமைசெறி கோவலன் மனைவியே சரணம்
பேரான மீனாட்சி யம்மையே சரணம்
வறுமை பிணி நோய் துயரகற்று வாய் சரணம்
மானாகர் மகளான வஞ்சியே சரணம்
மறுபிறவி தனிலுள்ள நோய்களைப் போக்கும்
மாதுகண் ணகையே உன்பாதமே சரணம்.

# கன்னன்குடா கண்ணகி அம்பாள் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம்

இயற்றியவர் :-புலவர் கலைமாமணி மா.சிதம்பரப்பிள்ளை
கன்னன்குடா.

சிவாயநம

1) அழகான மட்டக்களப்பின் தென் மேற்கில்
ஆற்றருகிலே தமிழர் போற்றிவளர் நாடு
உழவர்களும் வாழ்கின்ற கன்னன்குடா என்னும்
ஊரதனில் உண்டான ஆலயந் தன்னில்
களவாட வந்த இருகள்வர்களைக் காட்டிக்
கருணைபுரிந்தே அருளுங் கண்ணகி யாள்மீது
தளராமல் நானும் ஒருகாவியம் இயற்றத்
தந்தி முகவாரணனே வந்தருளு வாயே

2) வந்தருளும் எந்தனிட சிந்தையது தனிலே
வாலை எனும் ஈஸ்வரியே பாலன் அடியேனும்
நொந்துருகி உந்தனையே பாடுகிறேன் அம்மா
நோக்கமுடனே எனது வாக்கினிலே வாரும்
விந்தையுடன் இருநூறு ஆண்டிற்கு முன்னே
விரும்பியே நீ இங்கு தேத்தா மரந்தன்னில்
சந்தோசமாகவே குடிகொள்ள வந்த
தாயான கண்ணகி உன்தாழ் சரணம் அம்மா

3) தாழ்வாகவே இந்த ஊரவர் உனக்குத்
தக்கபுகழ் ஆலயந் தான்கட்டி வைத்து
வாழ்ந்தார்கள் வைகாசித் திங்களிலே பூசை
வளமாக நீஏற்று வந்தாய்என் அம்மா
ஆழ்கையிலே ஆயிரத்தித் தொள்ளா யிரத்து
அன்பான எண்பத்தி ஓராவ தாண்டு
நாள்தானே வியாழனது மார்கழி மாதம்
நள்ளிரவு தமிழ் இரண்டாம் திகதியன்று தானே

4) தானாகவே ரெண்டு சண்டாளர் வந்து
தாயாரே உன்கோயில் ஓட்டைப்பிரித்து
மானமது இல்லாமல் உள்ளே இறங்கி
மாதாவே உன்னுடைய சொத்துக்கள் எடுக்க
போனாயே தாயேநீ ஐவரை எழுப்பிப்
போய்நீரும் சிலபோரைக் கூட்டிவா என்று
தேனாரே வழிகாட்டி முன்னாகச் சென்ற
தேவியே கோவலன் பாரி ஆனவளே

5) தேவியே உன்னுடைய ஆலயம் முன்பாகத்
தேகமதோ இந்தியா ஏழைக் கிழவர்
தாவிலே தங்கிக் கிடந்தவர் தனக்குச்
சண்டாளர் கன்னத்தில் ஓர்அடி அடித்து
கூவினால் உந்தனையே கொலைசெய்வோம் என்று
குடித்திடச் சாராயம் தன்னைக் கொடுத்து
பாவிகள் அம்மனிட சேலைகள் இருக்கும்
பரிவான பெட்டகம் தனை உடைத்தனரே

6) பெட்டகம் உடைத்துஅவர் ஆராய்ந்து பார்த்து
பேசாமல் ஒருவன்மேல் மற்றவனும் ஏறி
எட்டியே அம்மனிட மேல்வீடு பார்க்க
ஏங்கியே மல்லாக்காய் வீழ்ந்தவன் கிடக்க
முட்டியே சிவரெங்கும் மற்றவனும் மோதி
முன்னாக அம்மனது தங்கநகை உள்ள
பெட்டியை உடைக்கஒரு வாழ்க்கத்தி தன்னைத்
துட்டனும் உள்ளாக மாட்டி நின்றானே

7) மாட்டினதோர் வாழ்க்கத்தி உள்யேதான் போக
மயங்கியே நின்றவனும் மற்றவனைச் சேர்த்து
வாட்டம் இல்லாமலே அலவாங்கு தன்னால்
வந்தார்கள் மறுபடியும் பெட்டியைத் திறக்க
காட்டினாய் உன் மகிமை இருபேரும் வீழ்ந்து
கடுகியே கள்வர்களும் மதிமாறி நிற்க
நாட்டினாய் உன்புகழை நாடெங்கும் தாயே
நாரியே கோவலன் பாரி ஆனவளே

8) பாரிலே புகழ்பெற்ற பழுகாமம் ஊராம்
பாங்கான தோர்சீனித் தம்பிஅவர் பேராம்
ஊரிலே ஓடிஅவர் ஆக்களை எழுப்பி
ஊக்கமுடனே ஐயர் பார்க்க வரும்போது
காரியத் திருடர்களும் அந்நேரந் தன்னில்
கைப்பற்றி ஆனைமுகன் மாலையது ஒன்றை
நேரிலே போகவழி தெரியாமல் நிற்க
நெறியோடு வந்தார்கள் கனபேர்கள் அங்கே

9) அங்கேதான் வந்தவரைக் கண்டாரே கள்வர்
ஆங்கார மாகவே ஓடிஅவர் வரவே
பங்கமுடன் பிடித்தார்கள் ஒருகள்வன் தன்னைப்
பாய்ந்தானே மறுகள்வன் மாலைதனைக் கொண்டு
நீங்காமல் இருள்தனில் ஓடினவன் சென்று
நின்றல்லோ ஒருகட்டைத் தூரமது தன்னில்
எங்கேதான் போவோம்நாம் என்று தெரியாமல்
ஏங்கியே மறுநாளாய்த் தேங்கி நின்றானே

10) நின்றவனைக் கண்டார்கள் சிலபேர்கள் அப்போ
நீயும்ஒரு நிட்டூரக் கள்வன்தான் என்று
நன்றாகக் கூட்டிஅவன் தன்னையுமே சேர்த்து
நாடியே மறுகள்வன் தன்னால் அறிந்து
கொன்றார்கள் கொல்லாமல் கொன்றவர்கள் தன்னை
கொடுத்தார்கள் பொலிசாரின் வசமாகவே தான்
இன்றேதான் உன்பெருமை உலகமது அறிய
இழகி மனம் உருகி அருள் செய்த மாதாவே

11) மாதாவே இந்தநகர் கன்னன் குடாவில்
மகிழ்வாய் இருந்திடநீ வம்மிமர ஓரம்
ஏதோஉன் திருமனது குளிர்ந்திட அமர்ந்தாய்
ஏழைஅடி யார்களையே காத்திட நினைத்தாய்
வாதாடிப் பாண்டியனின் முன்நின்ற தேவி
வஞ்சியரே உன்அடிகள் தஞ்சமது தாயே
பாதகர்கள் என்னவினை செய்தாலும் அம்மா
பார்ப்பதுவும் காப்பதவும் உன்கிருபை தானே

12) உன்கிருபை இந்தநகர் எங்குமே சிறந்து
ஊரதனில் உண்டான நோய்பிணி பறந்து
துன்பங்கள் இல்லாமல் உன்அருள் சுரந்து
சுரபிகளும் பால்அதிக மாகவே கறந்து
அன்புடனே எப்போதும் இங்குநீ இருந்து
ஆதரித் தாளுவாய் மனமது மகிழ்ந்து
இன்பமுடன் சென்நெல் விளை கனன்னன்
- குடாவிலுறை
ஈஸ்வரியே கண்ணகை ஆன பத்தினியே

13) பத்தினித்தாயே உன்பாதம் சரணம்
பாவையே கோவலன் பாரி சரணம்
உத்தமித் தாயே உன்பாதம் சரணம்
ஊர்மக்கள் எல்லோரும் உன்தாழ் சரணம்
நத்தினேன் உன்புகழை நானடியேன் சரணம்
நாளும்என் சிந்தையிலே வந்தருளும் சரணம்
கந்தன்அருள் உற்றபுகழ் கன்னன் குடாவிலுறை
கண்ணகைத் தாயேஉன் தாழ்சரணம் அம்மா

14) சரணமரி திருமுருகன் கரிமுகனும் வாழி
சக்திஉமை அரன்அயனும் வயிரவரும் வாழி
கரகமது எடுத்தாடும் மகமாரி வாழி
காளியுடன் அதிவீர பத்திரரும் வாழி
இரவுதனில் களவாடிப் பிடிபட்டுப் போன
இருகள்வர் கவிதைஇசை பாடினோர் வாழி
தரணிதனில் அருள்பெருகு கன்னன் குடாவிலுறை
தாயான கண்ணகியின் தாழ்சரணம்
- வாழிவாழியவே.

# கன்னன்குடா கண்ணகை அம்மன் காவியம்

இயற்றியவர் :- உ..கணபதிப்பிள்ளை (வைத்தியர்)
கன்னன்குடா

1) சீர்கொண்ட செந்தாமரை பூவிலுறை கின்ற
செல்வி சிவகாமிதன் பாதமது தொழவே
பேர்கொண்ட யீரேழு லோகமுருவாய் வந்த
பேதையே கன்னன் குடாவிலுறை தாய்மேல்
கார்கொண்ட ஐங்கரன் கந்தவேள் தெய்வானை
கன்னல்மொழி வள்ளியுங் காத்தருள வேனும்
ஏர்கொண்ட சகல கலையாய் வந்ததாயே
எளியவன் சீருற்ற பிழைபொறுத் தருள்வாய்.

2) சீருற்ற செங்கமல மாது மாங்கனியாய்
செப்பரிய பேழைதனி லொப்ப முடனேதான்
காருற்ற பொங்குதிரை கடலிலே மேவிக்
கண்டு மானாகரும் சிந்தைகளி கூர்ந்து
வாருற்ற மாசாத்தார் பேழை எனக்கென்ன
மனாகர் பேழையிட பொருளெனக் கென்று
பாருற்ற புவிமீதி லிருபேரும் வழக்காட
பண்டு மாங்கனியாக வந்த பத்தினியே.

3) பத்தினி உத்தமி பங்கையச் செல்விநீ
பாதம் புயத்திநீ பாதகம லத்திநீ
சித்திர நவரெட்ணமணி வைத்தசி ரத்திநீ
தேனுலவு செம்பவள மாதுசுந் தரியும்நீ
அற்புத மானசிவ சத்திமக மாரிநீ
ஆதாந்த மாதாந்த வேதாந்த ரூபிநீ
கற்புடைய மங்கையே கன்னன் குடாவிலுறை
காரணச் செல்வியே கனக நெறியாளே.

4) கனகநெறி யுள்ளத்தி வோராயிரத் தெண்
களஞ்சிப்பொன் கோவலர்க் கன்புடனே நல்கி
சினமிகு மாதவி இடத்தினிச் சேர்ந்து
சென்றுனது மோகதுயர் தீர்த்தருளு மெனவே
மனம்பொறுத்தே யாளவரு தெய்வ முண்டோ
வையகத் தோர்மீதி னாலையே யம்மா
புவனமதில் நடனமிடு கன்னன் குடாவிலுறை
பூவையோ பத்தினி புவன மாண்டவளே

5) புவனமிகு விளைவுசெறி கன்னன் குடாவிலுறை
பெண்ணரசியாய் வந்த நல்ல மகவினாளே
கனவதனி லுனதுபாத மலரடிகள் தொழவே
கருணைகள் புரிந்தெம்மைக் காத்தருள
- வேணும்
தினமுனது பாதமல ரல்லாது வேறுலகில்
தெரிசனை எனக்கருள் ஒருவரில்லை யம்மா
மனமகிழ வந்தெம்மை வாழ்விக்க வேணும்
வள்ளலே கன்னன் குடாவிலுறை மாதாவே

6) மதாவும்நீ யென்னை ரெட்சித்த தாயும்நீ
மங்காத குலதெய்வ மானபத் தினியும்நீ
ஆதாரமான பர அருளும்நீ யுருவும்நீ
அகலாத தாயும்நீ விறுமாண்ட கோடிநீ
மாதாந்த மானநீ வேதாந்த ரூபிநீ
மாசற்ற வல்லிநீ மதுரச்சொல் லாளும்நீ
ஏகாந்த மாகிவள ரன்னையே தந்தையே
ஏகயொளியாய் வந்த தோகை கண்ணகையே

7) தோகையே தில்லைநட மாடுமக மாரிநீ
தொல்லுலக மேழையும் யளந்த சோதிநீ
போகசுக மறியாத யோகமட மாதுநீ
பூவையே பூலோகம் ஆழவந்த வளும்நீ
காகோதரன் தன்னி லேகண் வளர்ந்தாய்
கணவனுக்காய் மதுரை தீயெரித் தவளே
மாகோவ வல்லியே கன்னன் குடாவிலுறை
மானாகர்க் கருள் கொடுத்தாளு மாதாவே

8) தாளுமுன் பாதமலர் மனதிலணி வோர்களும்
தாவுமுன் மேலன்பு தானே வைத்தோரும்
வாளும் விழிச்செல்வி யுன்பாத மல்லாது
மற்றொருவர் எந்தனற் குற்றதுணை யுண்டோ
ஆளுமுன் பாதமலர் சிரசின்மேல் வைத்தோம்
அன்புடனே வந்துநீ காத்தரு ளுமம்மா
வாடுதே நீபிழை பொறுத்தருள வேணும்
மருவுசெறி கன்னன் குடாவில் மாதாவே

9) தாவுகனி வாள்கொன்றை வீசுகமல மேவந்து
தாருலவு வண்டினொலி கீதமிசை பாட
மேவுபெறு கன்னிமா ராலாத்தி யேந்த
மிக்கதொரு ஆயிரம் பேர்சூழ்ந்து நிற்க
ஏவல்பணி விடைகாறர் ஓராயிரத் தெட்டு
இருசிகளும் வெண்சா மரைகவரி வீச
பூவுலகு மீதுநற் கன்னன் குடாவிலுறை
பொற்கொடியே பத்தினிப் பூவரசித் தாயே

10) அரவுமணி சடையதனி லணிகின்ற அரனுடைய
அன்பான வுயிருக்குள் ளாய்வந்த பாங்கிநீ
பரிவுசெறி பூவுலகி லுனதுபுக ழல்லாது
பாவையர்கள் வேறொருவர் நாங்களறி
- வோமோ
திருவளரு மணிமலை யரசன் மகளாரே
செங்கண் நங்கையே செல்வி கோமளமே
அருள் பெருகு கிருபைதந் தருளும் நீயம்மா
அன்பான பத்தினி அனந்த வாருதியே

11) வாரிசூ ழுலகுதனில் மழைபொழி வித்து
மானிடர் மனக்கவலை தீர அருள்வைத்து
தாருலவு பூவுலகில் சென்னல் விளைவித்து
தாரணியி லுன்கிருபை காணஅருள் வைத்து
சீருலகில் நல்நான்கு வேதமும் விளங்கச்
சிறியோர்கள் செய்பிழை பொறுத்தருளு மம்மா
வாருலவு மங்கையே கன்னன் குடாவிலுறை
வஞ்சியே யுன்பாத மலரடைக் கலமே

12) சீர்வாழி கன்னன்குடா நகரும் வாழி
செப்பரிய அரசனுடை செங்கோலும் வாழி
தார்வாழி ஐங்கரக் கடவுளும் வாழி
சார்ந்துவுனை யென்றுமே பாடினவர் வாழி
ஏர் வாழி புவிமீதிலிருப் போரும் வாழி
ஈசுபரி பாதனரு ளென்றுமிக வாழி
பார்மீதி லிப்பிழை பொறுப்போரும் வாழி
பத்தினிக் கண்ணகையும் வாழ வாழியதே!

ஓம் சிவமயம்

# கண்ணகை அம்மன் பத்ததி

## பஞ்சகவியம் கூட்ட

அரிசியின்மேலே ஒன்பது கோடு கீறி நடுக்கோட்டில் ஓம் சிவதத்துவக் கோட்டாயா நம. கிழக்கு- ஓம் சதாசிவக் கோட்டாயா நம. தெற்கு- ஓம் வித்யாதத்துவக்கோட்டாயா நம. வடக்கு- புருஷதத்தவக்கோட்டாயா நம மேற்கு- கலதத்துவக்கோட்டாயா நம. ஈசான திக்குக்கோட்டில் ஓம் பித்த சத்திதத்துவக்கோட்டாயா நம ஓம் முச்சாத்த பாத்திறாயா நம. ஓம் சுப்பிரதிட்டா பாத்திறாயா நம. ஓம் தேசோவற் பாத்திறாயா நம. ஓம் அமிர்தர்த்தும பாத்திறா நம. ஓம் அவ்வியதத்பாத்திறா நம. மத்தியில்பால்- ஓம் ஈசானமூர்த்தியே நம. கிழக்கு தயிர் -ஓம்தற்புருடாயா நம. தெற்கு நெய் ஓம் அகோரஇறுதையா நம. வடக்கு கோ.மூத்திரம் -ஓம் வாமதேவாயா நம.மேற்கு கோமயம் -ஓம் சத்தியோ சாதமூர்த்தியே நம.ஈசானதிக்கில் சுத்தசலம்.- ஓம் சிவாயநம. என்று துவறும்படி மாறியின் இருதயத்தில் போட்டுச்சுத்தி பண்ணவும். இரண்டு கிண்ணத்தில் கூட்டி ஒன்று உள்ளுக்கும் ஒன்று வெளிமண்டபம் சுத்தாங்கம் பண்ணவும்.இருதயத்தைச் சுத்திபண்ணிக்கொண்டு பின்பு கோயில் மண்டபம்மெல்லாம் சுத்தாங்கம் பண்ணவும்.

### கெங்கை அரட்ட

ஓம் கங்கைசருவக்கங்கை குருமுனை பராபரை சிவகங்கை வருண சளாயா நம. என்று தீர்த்தமெடுக்கவும்.

### சாபம் நீக்க

ஓம் சிறியுஞ் சிறியும் சுருங்ங சுருங்ங சுக்கிர சாபாயா அமிர்தம் அமரதேபரியே. என்று மூன்று தரம் சுத்தி பண்ணி விபூதி சாத்தி இடது கையில் வைத்து சுத்திக்கொண்டு கிணற்றில் மூணு கோடிட்டு உள்ளே விட்டுவிட்டு அந்த சுத்தியைக் கடக்க வைத்து. வேறேயொரு சித்தியெடுத்து ஆயிமந்திரஞ் சொல்லி சுங்சுங் சுப்பிரமணியா நம என்று ஒருக்கால் இருதயத்திலே போட்டு இன்னும் இன்னும் ஆயிமந்திரஞ் சொல்லி வயிரவ ஆபத்தாரணயாசிவாகநம என்று

இருதயத்திலேகோட்டு இன்னும் ஆயிமந்திரஞ்சொல்லி வாடி திரிபுரசுந்தரி அம்மேசிவாகா என்று நெய்வேத்தியம் கொடு இன்னும் ஆயிமந்திரஞ்சொல்லிக் கொள்ளவும் இப்படிச் சாபம் நீக்கவும்.

### கதவு திறக்க படிகடக்க

ஓம் திருக்கை திருக்கதவு திருப்படி திருவாசனம் நம. ஓம் அரசுரபரமகுருவே நம. ஓம் பரமதித்திக்குருவே நம. ஓம் மகாவிருட்சாய பூமாதேவி ஓம் பூதப் பிறேதம் நமஸ்தே நமஸ்து.

### படிகடக்க விதிமுறை

ஓம் சிவமுனி கவுஷகன் வந்து திறக்கின்றேன்.கெங்கை நிறைந்த கெருடா வழிவிடு .கோசலகோமயம் எடுத்து கோயில் பிரதட்டை பண்ண. ஓம் அகோர அத்திறாயா நம.

### விளக்கில் எண்ணெய் வார்க்க

ஓம் திரிபுர சுந்தரியே நம.

### திரிபோட

ஓம் அரகர தாண்டவராயி நம.

### விளக்கு ஏற்ற

ஓம் அரகரதேவியே நம.

### அக்கினி பூசை

ஓம் றீங்கார நாகத்தின் கன்னியே வா. நவகங்கை மணியே நம. ஓம் சிவநாகத்தின் கன்னியே வா. நவகங்கை மணியே நம.

### பிள்ளையார் பூசை

ஓம் உங் அங் சிவாயநம. ஓம் கெங்கணபதியே நம. நங் அங் யங் மிங் அயங்சங் அயங்வங் அயங்கிங் சிவாகா ஓம்லிங்கிச.

### அம்மனுக்கு மடை கட்டி திருமுழுக்குப் பண்ண

ஓம் அகோராயி நம - ஓம் அகோர வித்தியே நம. ஓம் தெங்கணயாநம - ஓம் தேவ பத்தினியே நம. ஓம் வீரசத்தியே நம - ஓம் கங்கையே நம. ஓம் கமலபத்தினியே நம - ஓம் கண்ணகையே நம. ஓம் சிறியுங்தேவி. ஈசுபரி தேவமாதா.

*தீர்த்தம் வெற்றிலை முதலியவற்றால் சிங்காசனம் வகுக்க*

**சிங்காசனத்திலே**

ஓம் அங்ஙங்ஙங் வாமசேஷித்த அனந்தபற்பம்வியமது பார கணபதியே நம. ஓம் கெங்காதேவியே நம. என்று வகுக்க.

**சிங்காசனத்தின் மேலே**

ஆசனமந்தி ரெட்செயா நெருப்புருஷ இருவி சுதல சத்தாயி வாலபரமேஸ்பரி உனது ஆசனயா நம - சுமநம என்று என்று சிங்காசனத்தில் ஏற்றவும்.

**துகில் சாற்ற**

ஓம் மாசியத்திறி மாதிறி பரமசுந்தரி மகாமந்திர செபித்து ஓம் ஐயும் கிலியும் ஆனந்ததாயி நம என்று திட்டிரமபடிமாறிச் சவ்வுங்கிசாய வவ்வுஞ்சட என்று கைதட்டி அநந்தாயி நம என்று தொழுது கொள்ளவும்.

**அகோரமெழுப்ப**

ஓங்காரி அகோராயா நம. - என்று விபூதி சந்தணம் தெளிக்கவும். பிறகு

**முந்நூறு வெற்றிலை அர்ச்சனை பண்ண**

ஓம் திரிபுர சுந்தரி நம.

ஓம் விறுமாயியே நம.

ஓம் அரகர மகாபரமேஸ்பரியே நம.

ஓம் மகாதாண்டவராயி நம.

ஓம் ஆனந்தாயி நம.ஓம் மகாபரமேஸ்பரியே நம.

ஓம் மகாதேவியே நம.ஓம் உருத்திராயி நம.

ஓம் சதாசிவாயி நம.

ஓம் தற்பரமகுருவே நம.

- என்று அர்ச்சனை பண்ணவும்.

**அம்மனுக்கு மூன்று மடை கட்ட**

ஓம் ஆங் பற்பமலவாயா நம.

ஓம் கமலாயா நம.

ஓம் காலிற் பற்பமிர்தாயா நம.

மடைகட்டி அர்ச்சனை பண்ணி அம்மனைத் தொழுது கொள்ளவும்.

கும்பதானம்

ஓம் பொன்னின் திருவும் பூவின் திருவும் நெல்லின் திருவும் நீரின் திருவும் திருவில திருவும் எல்லாத்திருவும் எழுந்தருளி நிற்கச் சிவாகா.

என்று பொன் வெள்ளி நெல் நீர் பாக்கு வெற்றிலை பூவும் போடவும். பின்பு பிராண மந்திரஞ்சொல்லி தற்பணம் பண்ணிதூபங் காட்டவும்.

பிராணமந்திரம்

ஓம் மிறியுஞ் சிறியும் லிங்ங லிங்ங யாலிங் அபர லிங்கப்பிராணம பிறதிட்டே சிவா - ஓம் பிராண பிராணயா பிராணங்கிசாய நம. ஏந்திப் பிரபணயா சிவா - ஓம் மந்திரப் பிராணயா ஏகு ஏகு சக்கரம் சறுவ அட்சரம் சறுவகுனிசம் சறுவமாவாயித்தஞ் சறுவசத்தாதாரம் சறுவ வயனவசியம் சறுவசத்தி நமஸ்தே நம.

**கும்பத்திற்கு மஞ்சள் சந்தனம் பத்தி புஷ்பம் சாற்ற**

ஓம் திருநீறு சந்தனம் நம.
ஓம் பத்திரம் நம.
ஓம் புஷ்பம் நம.
ஓம் சிவாயநம.
ஓம் கும்பேசுராயா நம.
ஓம் கெசாயா நம.
ஓம் தேவதேவாயா நம.
ஓம் சங்ஙரா நம.
ஓம் விக்கினேசு பராயா நம.
ஓம் மகாபூசனே நம.
ஓம் திருவிக்கிர மாயனே நம.ஓம் அம்மனே சிவாயா நம.
- என்று சாத்திக் கொண்டு.

கும்மமெடுக்க மந்திரம்

ஓம் வான சாரசேவருண துங்க வியணங்க சரோருக கந்தயோக பண்ணித பரம சிவாயா நம.
ஓம் ஓம் வாமதெட்சணயா நம.
ஓம் பூதகமல பூரணியே நம.

என்று வைக்கவும் பின்பு காயத்திரியால் அர்ச்சனை பண்ணவும்.

## காயத்திரி மந்திரம்

ஓம் காயத்திரியே நம.
ஓம் சாமத்திரியே நம.
ஓம் வாயத்திரியே நம.
ஓம் சாமத்திரியே நம.
ஓம் மந்தாரபத்தினியே நம.
ஓம் அகோர பத்தினியே நம.ஓம் ஆகாசபத்தினியே நம.ஓம் காலபத்தினியே நம.ஓம் கண்ணகையே நம.
ஓம் சிறியுங் காயத்திரிதேவி சந்தாய் சுபரி தேவ நம. - பதினொரு காயாத்திரியும் பண்ணவும். கும்பமுட்டிக்கு மேலே நாலு பீடமும் தெற்பை தெரியத்தாவணை பண்ணிக் கும்பத்துக்குள்ளே மாங்கனிவைத்து அதன் மேலே அம்மனை எழுந்தருளப் பண்ணி அம்மனுடைய இரண்டு காலுக்கும் இரண்டு மடை வைத்து திருச்சிலம்பு வைத்து பூசை பண்ணவும். அதுதான் நித்திய பூசையாக முடிகிறது. அம்மனைத்தொழுது கொள்ளவும். ஓம் ஓம் நாககன்னி றீங்நாரி மகமாகி திரிபுரசுந்தரி கயிலாய நாயகி கற்புடையீர் கண்ணகி நம.

## இது செபம்

ஓம் ஐயுங்கிலியுஞ் சவ்வும் அரியும் கிறியும் சிறியுஞ் சவ்வும் அயனம சிவாகா - பிறகு ஏழுகன்னிக்கும் ஏழு சுருள்வைத்து ஒன்பது கன்னிக்கும் ஒன்பது சுருள் செப்பிலே வைக்கவும். மாதவிக்கொரு மடை. மந்திரமதிக்கொரு மடை. ஐச்சியற்கு ஐந்து மடை. கோவலர்க்கு ஒருமடை. பஞ்சசத்திக்கு ஐந்து சுருள். அட்டசத்திக்கு எட்டுச்சுருள். வன்ன மகளுக்கு ஒருமடை. வசந்தமாலைக்கு ஒருமடை. செந்தாமரைக்கன்னிக்கொருமடை. நாககன்னிக்கொருமடை. செப்புக்கன்னிக்குகொருமடை. தோககன்னிக்கொருமடை. துயிற்கன்னிக்கொருமடை. அம்மானைக்கன்னிக்கொருமடை. ஆலாத்திக் கன்னிக்கொருமடை. சந்திரக்கன்னிக்கொருமடை. சூரியக்கன்னிக்கொருமடை. கொம்பன்கன்னிக்கொருமடை. கொம்புக்கன்னிக்கொருமடை. திருவுடையாளுக்கொருமடை. புத்தியில்வித்தைவல்லாளுக்கொருமடை. ஆகாச பத்தினி ஐம்பத்தொருபேருக்கும் ஐம்பத்தொருமடை. தோதக பத்தினி தொள்ளாயிரம் பேருக்கும் தொள்ளாயிரம் மடை. சுத்தமுள்ள

கன்னியர் தொள்ளாயிரம்பேருக்கும் தொள்ளாயிரம்மடை. மோகக்குளலி மூவாயிரம் பேருக்கும் மூவாயிரம் மடை. மங்கல விறுமவாசற் காற்பான் வயிரவர்பூதன கிங்கிலியர் மாத்தாண்டர் கின்னரிவர்களுக்கு வெளிமடையாக வைக்கவும். வயிரவர்மடை சிறப்பாயிருக்கவும்.

**வயிரவர் விதிமுறை (வயிரவருக்கு மடைவைக்க)**

ஓம் யிருங்ங றிங்ங ஆனந்த வயிரவாயா நம.

என்று மடைவைக்கவும்.

பூசை- ஓம் தாம்பூல கதலி பழம் அமிர்தப் பிரட்டையா நம.

**காயத்திரி**

ஓம் அலருங்க வயிரவரயா நம.
ஓம் உரும வயிரவாயா நம.
ஓம் சண்ட வயிரவாயா நம.
ஓம் கிறோதன வயிரவாயா நம.
ஓம் உன்மத்த வயிரவாயா நம.
ஓம் கபால வயிரவாயா நம.
ஓம் பிராணவ வயிரவாயா நம.
ஓம் சம்மார வயிரவாயா நம.
ஓம் கோத்திர பாலகாயா நம.
ஓம் ஆபதோத்தராணயா நம.
ஓம் ஆதிவயிரவாயா நம.
ஓம் கபாலி வயிரவ ஆசன மூர்த்தியே நம.

**கன்னிக்கால் வெட்ட**

ஓம் விறுமாவே நம. ஓம் விஷ்ணுவே நம. ஓம் உருத்திராயா நம. என்று சொல்லி மூன்று மடைகட்டிப் பின் நெய்வேத்தியம் பண்ணி விஷ்ணுமூர்த்தியை துதித்து வெட்டவும்.

**பந்தல்போட கிரியை**

பதினாறு காலிலே பந்தல்போடவும். ஓம் கீச பாணி சுபரிசிவாகா. என்று காயத்திரியாலே பந்தல் மண்டபமெல்லாம் சுத்தாங்கம் பண்ணி தெய்வம் கலசமாடக் கிறியாங்கமாவது காயத்திரியாலே கலசமாடத் திருமுழுக்குப் பண்ணி ஈரந்துடைக்கவும். துகில் சாற்றி சிங்காசனம் வகுத்து சிங்காசனத்தில் ஏற்றவும்.

காயத்திறி

ஓம் சிறியுஞ்தேவி காயாத்திரி சந்தயீசுபரி தேவதாம - ஓம் ஓம் அங்அங்பொங் சர்வகாயத்திதேவி நம என்று புரோட்சித்துப் பந்தல் மண்டபமெல்லாம் காயத்திரியாலே தீர்த்தமாடித் தூப தீபம் காண்பித்து பதினாறு காலிலே போட்ட பந்தல் நடுமத்தியில் அரசு அல்லது பூவரசு ஏழுமுழத்தில் வெட்டி வந்து சாந்து சந்தணம் பூசி தூப தீபம் காண்பித்து மடுக்கல்லி. பொன் முத்து பவளம் போட்டுக்கால் நாட்டவும். காலடிக்கு அரசாணி அடுக்கவும் நாகம் வகுக்கவும். காலுக்கு நல்ல பட்டுச்சேலை கொய்து கட்டவும். துய்யவிளக்கேற்றி ஐந்து கும்பம் தாவிக்கவும். ஆயிரம் இளநீர் வைக்கவும் தேங்காய் கும்பங்கள் வைக்கவும். மாந்துளிர் கொண்டு சாத்தகம் பிடித்து திகுரு சிவாயநம வென்று பாங்குறவோதிச் சிவகாயத்திரியால் அவசாயித்து கண்ணகை தனக்கும் கன்னிமார் தனக்கும் வண்ணமாகுளலி மாதவிக்கும் பதினொரு மந்திரம் பாங்குற ஓதிக் கரும்பும் பூவும் கவின்பெறப்படைத்துப் பாக்கு வெற்றிலை ஆயிரம் மடை வைக்கவும். ஓமம் வளர்க்கவும்.அம்மனுக்கு வேள்வி நடத்துவதற்கு. முன்பு நாலுதிசையும் பார்த்து விபூதி தியானம் பண்ணிக் கலியானக்காலடியில் வைத்து எல்லா மடைக்கும் விபூதிதெறிக்க


மந்திரம்.

ஓம் நமோ காளி. நீலகாளி வச்சிரகாளி நிர்வாணி சர்வேந்திரியாணி சறுர்வமோகனி சத்தே நம. அதன் பிறகு அம்மனுக்கு மண்டபத்தில் மடைவைக்கவும்.

ஓம் ஓம் அங் கிறிங் சிறிங் அங் பொங் காயத்திரிதேவி நம. ஓம் ஓங் ஓங் ஓங் கிலிங் பகவதி சர்வேந்திரியாலி கிலிங் சிறிங் காயத்திரியே நம. ஓம் ஓம் ஓம் அங் கிறிங்க அங்கிச சங்சிவாயா யிங் யிங் காயத்திரி நம. ஓங் ஓங் ஓங் கிலிணிய கிலிங்ங கங்ங சர்வகாயத்திரி நம.

**இனி ஓம் காயத்திரி ஓமம் வளர்க்கவும்**

ஓம் ஓம் கணபதியே நம.
ஓம் கந்தசாமியே நம.
ஓம் விறுமாவே நம.



ஓம் விஷ்ணுவே நம.
ஓம் உருத்திராயா நம.
ஓம் ஏசுராயா நம.
ஓம் சதாசிவாயா நம.
ஓம் சிதாரேசுராயா நம.
ஓம் சிதம்பர பரரேசுராயா நம.
ஓம் வாமதேவாயா நம.
ஓம் சனியேசுபராயா நம.
ஓம் காலா நம.
ஓம் இயமா நம.
ஓம் கோரக்க நாதா நம.
ஓம் கணநாதா நம.
ஓம் நாதா சுவாமி நம.
ஓம் வருணாயா நம.
ஓம் அட்டகாலவயிரவா நம.
ஓம் அனும் நாதா நம.
ஓம் பரபத்திரராம நம.
ஓம் காளி நம.
ஓம் பத்திரகாளி நம.
ஓம் சரசுபதி நம.
ஓம் மகாலெட்சுமி நம.
ஓம் பெருகட்பதியே நம.
ஓம் மந்திரப்பதியே நம.
ஓம் விறுமாயி நம.
ஓம் வீரவீரேசுபரியே நம.
ஓம் மகாபரமேசுபரியே நம.
ஓம் அரகரசிவாயி நம.
ஓம் மாசியத்திரி நம.
ஓம் திரிபுரசுந்தரி நம.
ஓம் வயிரவி நம.
ஓம் காயத்திரி நம.
ஓம் தேவி நம. ஓம் ஈசுபரியே நம. ஓம் ஐயும் நம.ஓம் கிலியும் நம.ஓம் ஆனந்தாயி நம. ஓம் சவ்வும் நம. ஓம் கிஷாயா நம. ஓம் கிரியும் நம.

*ஓம் பராபரி நம.*

*ஓம் இருதையாயி நம.*

*ஓம் நேத்திராயி நம.*

*ஓம் அங்குட்டப்பிரணயி நம.*

*ஓம் சிறியும் தட்சணியாப்பி நம.*

*ஓம் கிலியும் மத்தியாப்பி நம.*

*ஓம் சவ்வுமான காப்பியாயி நம.*

*ஓம் ஐயும் அனுட்டி காப்பியாயா நம.*

*ஓம் அரகரதலகாப்பிராட்டி நம.*

*ஓம் சிறியும் ஈசானாயா நம.*

*ஓம் கிறியும் தற்புருடாயா நம.*

*ஓம் காரி நம.*

*ஓம் அகோராயி நம.*

*ஓம் கிறியும்பாதமாதேவி நம.*

*ஓம் கிறியும் வாமதேவாயி நம.*

*ஓம் சிவசத்தியே நம.*

*ஓம் கிறியும் விறுமாதேவி நம.*

*ஓம் கவசாயி நம.*

*ஓம் கிறியும் வருத்திராயி நம.*

*ஓம் கிறியும் பரப்பரரூபியே நம.ஓம் கிறியும் பரமகல்யாணியே நம.ஓம் சிறியும் கெங்காதேவி நம.ஓம் கிறியும் கண்ணகையே நம.ஓம் கிறியும்கற்புடையீர் நம.ஓம் அரகர பரமகுருவே நம.ஓம் அங் அங் அங் அரகரசிவாய நம.*

*இராகு கேது இரண்டும் ஓம குண்டத்தைப் பார்க்க எழுந்தருளப்பண்ணவேண்டும்.நவக்கிரக சாந்தி பண்ணவும்.*

அம்மனுக்கு வேள்வி நடத்தும் கிரிகை- பிராணாம சாபம் காயத்திரி புரோசித்துவரவேண்டும்

***பானைக்கு நூல் சுற்ற***

*ஓம் தேவ மாதா கைப்புரி நூல் வளைத்தேன்.தேவ கவுஸாயா நமக.*

*ஓம் விறுமாவே நம.ஓம் விட்டுணுவே நம. என்று சருவம் பூசி நீறுசந்தணம்*

*பூசி மூன்று இளை தரித்து ஆறு கோணமாய் சுற்றவும்.பின்பு*

உரலுக்கு நீறு
சந்தணம் பூசி தீப தூபம் காட்டி நெல்லுப் போட்டு ஓம் சிகட மாமுனி

**நெல்லு வந்த வரலாறு**
மகா கெருடன் கொண்டு வந்து உரலில் போட்டான். அம்மே பட்டுத் தந்தா.சூரியனை நோக்கிவந்து சம்பா குத்தினேன் என்று ஆசாரிகுத்தவும்.

**நிலங்கட்ட**
ஓம் கிறியும் கவுசியா அம்மே நம.
ஓம் கிறியுங்பூமாதேவி நம.
என்று நிலங்கட்டி திரிபுரத்தை எரித்தாற்போலவும். கண்ணகைத்தாய் மதுரையை எரித்தாற்போலவும் இன்று அடியேனுக்காக தேவரீர் ஈசுபரன் திருநெற்றியிற் கண்ணாக வந்தநீர் சோதிப் பிறையுள்ள யாதொருவர் செய்ததடை நீறென எரிந்து சாடியும் பாலும் பொங்கச்சிவாகா என்று தீபதூபங்காட்டி பின்பு பானை எடுக்கவும்.
ஓம் உருத்தராயா நம .ஓம் அக்கினிப்பிறசோதையா நம.
ஓம் ஐயுங்கிலியும் கண்ணகையே நம.ஓம் சவ்வுங்கிலியும் கண்ணகையே நம.என்று உருக்கொடுத்து ஓம் கிறியும் வாலபரமேசுபரி நம. என்று கைதட்டி ஆனந்தமுத்திரை கொடுத்து சாடியெடுத்து கலியாணக்காலை வளைத்து வந்து தேசமும் நாடும் செழிக்க தளைக்க திங்கள்மும்மாரி பொழிந்து நிறை செல்வமுண்டாக வேணும் என்னம்மா ஈசுபரித்தாயே சிவாயநம என்று வளைக்கவும்.

**பொங்கல் பானை மன்றாடி அடுப்பில் வைக்க**
ஓம் நமோ ஆதிமூர்த்தி சூரியசூரிய ஆம் ஓம் சிவாயநம. ஓம் நமோ சிறியுஞ் சிறியும் ஆதித்தர்யாகபேதயா பிறதிட்சகன்ன சிவ சூரியா அக்கினிதேவா நீ அன்று திரிபுரத்தை எரித்தாற் போலவும். தாமோதரனுக்காகத் தாருகாவனத்தை எரித்தாப் போலவும். விசையனுக்காக காண்டவனத்தை எரித்தாற்போலவும். வீரபாகுதேவருக்காக மகேந்திர கிரியை எரித்தாற்போலவும். அனுமானுக்காக இலங்கையை எரித்தாற்போலவும். கண்ணகைக்காக மதுரையை எரித்தாற்போலவும். இன்று அடியேனுக்காகத் தேவரீர் ஈசுபரன்

திருநெற்றியிற் கண்ணாக வந்தநீ யாதொருவர் செய்ததடை நீரென எரிந்து சாடியும் பாலும் குறையாமல் பொங்கத் தேசமும் நாடும் தளைக்க திங்கள்மும்மாரி பொழிந்து ராசசெங்கோலும் வாழ்க. நிறை செல்லமுண்டாக வேணும்.என்னம்மா ஈசுபரித்தாயே சிவாயநம. என்று வைக்கவும்

பால் வார்க்க

ஓம் அமிர்தம் அமிதர்தம் சிவ அமிர்தம்.

அரிசி போட

ஓம் சிவாயநம என்று போடவும்.

தடுத்த பானை பொங்க

ஓம் அரிதிருமுருகனை உமையம்மையானை எழுப்பு. வெற்றிலையால் சாடிகட்ட ஓம் கவஷயா நம. என்றுசாடி கட்டி சாடி இறக்கி தூபம்படி மாறி ஒன்பது கல்லைக்கும் அமுதுபடைத்து மற்றப்பேர்க்கும் வகைவகைபடைத்து. ஓம் வாலதிரிபுரசுந்தரி அம்மே சுவாகா. ஓங் ஓங் அங் அங் சிவ சிவ சத்தி மகா நெய்வேத்தியமே என்று நெய்வேத்தியம் கொடுத்து அமுது மாத்தி ஆலாத்திமேலாப் பெடுத்துத் தூபங்காட்டி ஐந்தெழுத்துப் பஞ்சாட்சரம் செபித்து பலவாத்தியம் முழுக்கப் பண்ணி மஞ்சட் சுண்ணம் வைத்து தாக மலர் பரப்பி குழல் சேபித்து காவியம்பாடி பூசைமுடிக்கவும்.

புவனேசுபரி சிவம்

ஓம் இறியுங் கிறியுஞ் சிறியும் நம. ஓம் ஐயும் கிலியுஞ் சவ்வும் நம. வாவாகமல சிறிபுவனேசுபரி வா என்று சிவம் பண்ணவும்.

சந்திர நமஸ்காரம்

ஓம் இருஷ கிறிங் கிறிங்ங சௌவும் சத்திராயா நம.

சூரிய நமஸ்காரம்

ஓம் ஆம் ஊம் ஆதித்தாயா சவுமேத்தாயா பிறதிட கண்ணாயா சூரியா நம.

காளி சாபம்

ஓம் சிறிங் கிலிங் சிலியும் சிவசத்தி நிர்வாணி நீலகாளி சாயாய சபாய சிவசிவாயா சிவஅமிர்தேசுபரிசிவா.

விறுமா சாபம்

ஓம் ஆங் ஆதிபரப்பிரமா பங்கையபாதபற்பமயா ஓங் ஷங் துங்கேதக நாயகாசாபாய சாபரிங்ங நம.

### விஷ்ணு சாபம்

ஓம் அங் அய மய நய வய நாராயண விச்சுரூபசபாய நமோ ஓம் அங் மவறிங் வறிநம நம

### உருத்திர சாபம்

ஓங் ஓங் ஓங் கங் ஓங் உருத்திராயா உங்ங உக்கிர உக்கி சாப நிர்வாண சாநீறென மகேசுர சாபாயநமஓம் கெம்மையே சுரசர்பம் நிவநிவநமநம சிவா.

### ஈசுர சாபம்

ஓம் சிவசிவாய ஈசுரசமுக நாய உக்கிர சாபாய ஈசுர விர்த்தியே நம. ஓம் அரகரசிவாய நம.

### கணபதி சாபம்

ஓம் அங்குங்ம சிவாயநம ஓம் கீசான பூசை வாசனை செபித்த செவ்வின சம்பூசுரர் பக்கிசாப சாபாய நம. எட்டுச்சாபம் பிராணம். காயத்திரி மூன்றிடவும் புரோகிக்கவும்.

### அனல் தணிக்க

ஓம் அரிஅரி சிவசத்தி அக்கினி சொரூபி பாதாளபரமேஸ்பரி அட்டசத்தி தணியம்மாதணி கங்காபரமேசுபரியாணைத் தணியம்மாதணி.

### தியானம்

ஓம் ஐயுங் கிலியுங் சவ்வும் பராசத்தி வாவா உருவேறு திருவேறு இங்குவா வாக்கு வாகினி வாலபரமேசுபரி வருக வருகவே சுவாகா. ஓம் சிவாயா திரிபுரசுந்தரி வருக வருகவே சுவாகா.

### தேவி மந்திரம்

ஓம் சிறிங்ங சிறிங்ங அரஅர சிவாயாநம வா ஓம் அவ்வும் ஐயும் கிலியும் சவ்வுங்கிலியும் ஐயும் வாவா வாக்கு வாகினி வாலபரமேசுபரி கயிலாய நாயகி வாலதிரிபுரசுந்தரி என்னமேவாகா என்று தாமரை மணியாகுதல் பளிங்கு மணியாகுதல் நூற்றெட்டு உருத்தரித்து அம்மனை வழிபடவும்.

### அமிர்தம் ஒப்புக்கொடுக்க

ஓம் அமிர்தம் அமிர்தம் பால் அமிர்தம் பாற்கடல் அமிர்தம் பரமேசுபரியும் பரமேசுபரனும் உகந்த அமிர்தம் தெய்வேந்திரனும்

தேவர்களும் கிருஷ்ணனும் கொடுத்த அமிர்தம் அன்றல்லடி அம்மா இன்று அடியேன் தந்த அமிர்தம் உகந்து கொள்ளம்மா உகந்துகொள்.

பஞ்சாட்சரம்

ஓம் ஆம் அமிர்தம் பரம அமிர்தம் சிவாயவாசிநமோ ஓம் அங் பரம பரம பரமஅமிர்தம் அமிர்தம் பரம பரம சிவாயநம.

வருண பஞ்சாட்சரம்

ஓம் சறு சறுவ சிவாயநம.

பத்தினி பஞ்சாட்சரம்

ஓம் ஓம் நடன சிவாயநம.

லெட்சுமி பஞ்சாட்சரம்

ஓம் பரி நம சிவாயநம.

சித்தி பஞ்சாட்சரம்

ஓம் அங் சிவாயநம. இந்தப் பஞ்சாட்சரமெல்லாம் நாவசையாமல் செபஞ் செய்யவேண்டும்

நீறணிய

ஓம் நமோ பகவதி இராச மாதங்கி ஈசுபரி சர்வ சிவதயாபரி கிலியுமிறியும் சர்வார சங்நரி நம.

அக்கினி பூசை

ஓம் அக்கினியே நம.ஓம் சிவ அக்கினியே நம.
ஓம் சிவானந்த அக்கினியே நம.ஓம் இருங்கிலியுமிறியு இறிங்கிறிங்க சிவஞான அக்கினியேநம.என்று அக்கினி மூட்டவும்.

பிராணம்

ஓம் பிராணப் பிரதிட்டே எழும்பு.ஓம் ஏந்திரப் பிரதிட்டே எழும்பு. ஓம் மந்திரப் பிரதிட்டே எழும்பு.ஓம் அட்சரப் பிரதிட்டே எழும்பு. ஓம் கும்பப் பிரதிட்டே எழும்பு. ஓம் அகாரம் வா இகாரம் வா. உகாரம் வா சிகாரம் வா. ஓம் அகார சத்தி இகார சத்தி உகார சத்தி சிவசத்தி சிவனுக்குச் சிவன் சிவாயநம. என்று கும்பத்துக்கு தியானம் பண்ணவும்.

ஆசனத்திலேற்ற

ஓம் ஆதி ஆசனம் அகோர ஆசனம் சிவ ஆசனம் சிறிங்ங ஆசனம் ரெட்ண ஆசனம் சிவகுரு ஆசனம் சிங்காசனம் கமலபத்தினி கண்ணகையே நம.

### புண்ணியா ஆவேசம்

ஓம் அமிர்த வாசனியான தேவி நாரணி சிவனுடைய இரக்கிய காவலாக்கி உருத்திர சிவப்பிராணாயா சிவப்பிறதிட்டனாயா. பிராணகும்ப சிவாயா ஏந்திரகும்ப சிவாயா சிவசிவ சரணம் சிவானந்தி வல்லி சிவாயநம. அரகர அத்திராயா நம. ஓம் ஐயும் திரிபுரதேவி சாவித்து மகேகியுங்காமி ஈசுபரி சவுந்தரி நனன நனனப் பிறிசோடையாது.

### நவக்கிரக ஆராதனை

ஓம் சர்வ சர்வாங்கிஷ நவக்கிரக தோஷம் நாச நாசமாவேசுவாகா.

### அம்மன் கலசமாட

அரிஓம் கலச சுமுகே விஷ்ணு கண்ட உபத்திர சமாசிறுதாமூலேத்திரம் சுதேவிறுமா விஷ்ணு அத்திற காயத்திரி சரசுபதி சாபத்திரி சிவகோதாபுரி சிந்துகாவேரி சிலோத்துமி மாவலி கெங்கைதீர்த்தம் சன்னிதம் குருகுரு சந்தா உபயாமே.

### அர்ச்சனை மந்திரம்

அரி ஓம் உருத்திராயா நம. அரி ஓம் உருத்திரப்பிரகாரி நம. அரி ஓம் உருத்திரகமலாயி நம. அரி ஓம் உருத்திரபூரணியே நம.அரி ஓம் உத்தாண்ட சங்ஙாரி நம.

அரி ஓம் மயிடசங்ஙாரி நம.

அரி ஓம் மாயாசொரூபியே நம.

அரி ஓம் தேவி நம.அரி ஓம் மனோன்மணியே நம.

அரி ஓம் ஆனந்தவல்லியே நம.

அரி ஓம் விறுமாபத்தினியே நம.

கெந்தஞ்சமர்ப்பயாமே.

மந்திர புஸ்பம் சமர்ப்பயாமே.

ஆடை ஆபரணயி நம.

தூபம் சமர்ப்பயாமே.

கதலிபலாஞ்சனம் சமர்ப்பயாமே.

அன்ன பலகார நெய்வேத்தியம் சமர்ப்பயாமே.

### பூசை ஒப்புக்கொடுக்க

அரி ஓம் தனம்கேசாயா வினம்தேவாயவிக்கு மென்வாக்கு விஷதாயதியகி தனனே சிவபிரசோதையாது.

### கணபதி தோத்திரம்

அரி ஓம் ஏககொ்னம் காயமத்தம் காஞ்சனம் சன்னிபமலம் பேர்தா்ம விசாலாச்சம வந்தே அகலகெண நாசகம அரி ஓம் சம்போ கலியானம் ஆரோக்கியம் தனசம்பதம் சத்துறுணாதிய சகோதி நமஸ்தே. கெங்கா தடங்காசம் நீயகிடா கலாநிரந்தா விவூயவாமன நாராயணப் பிறிகாவகங்கம் விரதாவே வாரண சிவப்பிறதின விசு விசு விசு வனதம சா்வ மங்களே சா்வதறுத்தகே சரநேத்திரி அம்பிகாதேவி நாராயணம் நமஸ்தே. நித்தியானந்த கலிபாராவே காசவுந்தரி ரீகரி நிறுதாதரி கிலகோரபாவனகரி பிறித்தியட்ச தேமாயாசுபரி செலவங்கிய சவானபரிகாசி பூருத்தேவி புட்சாரதே குருவாம வலம்பன்கரிமாதா அன்னபூரனேஸ்வரி பாதுகாம பூசையாமே ஓம் பரிபுரபாலாய நம. பாதுகாமபூசையாமே. தீபம் சமா்ப்பயாமே. தூபம் சமா்ப்பயாமே. கற்பூராஞ்சனம் சாரமத்திர புத்திர புஷ்ப சோடக நெய்வேத்தியாமே.

### பூசை ஒப்புக்கொடுக்க

ஓம் பிராணப்பிறதிட்டே நம. அரி ஓம் கரிமேகரி சா்வகேசனம் சா்வாசம் சா்வாசோதையம் சா்வஜயும் அங்கிஷதரையா ஐயும் நமஸ்தே. பிறபிற நற்பிறதிட்டாயா குருதா தாம்பூலவரமே. சகலகலாவாமே கதலிக்கனி வாமே வாபுமிஆமி ஓம் ஆம் தவம் பவம் உயிர்ப்பிறகாமே புட்பகேதவாமி வஸ்த்திரம் தேவி.சித்துவாமி தூபம் தீபம் கொந்தம் பரிமளம் உகநதீபம் வாமே. ஆசனம் ஆவேசனம் ஆபதாபம் ஓம் சிவனே நற்காசனத்தி நற்காசணம் போதனஞ்சிவா. ஓம் சிதம்பரசத்தி மதுராபுரி என்ற சத்தியே நம. அரி ஓம் சாா்ந்தம் பற்பம் பற்மமாசனந்தம் சறித்திரம் மயிடபஞ்ச வாஷ்திரம் திறிதோத்திரம் சூலம் வஸ்சிரம் ஞானம் கற்கம் வரதம் அபையம் தெட்சணபாதநான அலங்காரமிப்படி அவனியம்பாா்பதி ஈசன மாதநத்பரி சறுபாசகெந்தம் மனம் புத்தி ஆங்காரம் சுகமே கம்தனம் கேசாய வினம் தேவாய. விஸ்தாய நியகி தனனேசிவப் பிரசோதையாது.

### அகோரம் தணிக்க

ஓம் அகோரபத்தினி அமிர்தசிவாயநம. என்று பத்திரம் கிள்ளிவைத்து அம்மனைத் தொழுது கொள்ளவும்.

காளிக்கு கும்பம் வைக்க மந்திரம்

ஓம் சிறுபாத கெங்கா பரமேசுபரியே சத்தசந்தாசதாயநம. ஓம் மயிடசங்ஙாரியே நம.

காத்தவராயனுக்கு

ஓம் ஆயிடையே நம.

(முற்றும்.)

**அம்மன் பத்ததி கூனற் பலகை விதிமுறை அகவல்**
திருவளர் செல்வமும் சீரும் பெருக. உருவளர் கண்ணகை உரைதனைப்பாட. சீர்வளர்ந்தோங்கிய தென்னவன் முன்னால் ஏர் தரும் இந்திரர்க்கு இடுக்கண் எய்தபின் தருநிணல் மீதுசயேந்திரன் கொலுவில் அருமறை தேவரை யாயிரவர். பொங்கியவேள்வி புரிந்திடுமளவில் தங்கிய ஊர்வசி தனித்தனி நடிப்ப. நாடகம்பயின்றிடுமாடக வேளையில். நீடியவன்ன நிறைகலையொதுக்கிட. இண்டியநிதம்பந்தோன்றியதாலே. ஆண்டகை நாரதன் அதிகோபமாய். மால்மதன் தன்னில் மாதேவி என்னவும் நீபிறவென்ன நிழ்வுற் சபித்தலும். சயேந்திரன்றன்னைச் சரோருக்சசேனன். வயன்குடைக்காம்பாய் வருகெனவுரைத்து. இந்திரன் முதலாய் இமையவர் கலையில். வந்தினிதிருந்து வரதினை நோக்கிப். பண்புறு பூசனைபண்ணியபொழுதில். அன்புடன் ஈசன் அவர்களுக்கருள்புரிந்து. மாதவன் வந்து வணிகனாகப்பிறக்க மதமுறுமலர்கள் மாம்பழமாகிப். புகழ்பெறுகனியினைப் புண்ணியமுனிவர் சகமழபாண்டியன் தனதிடங்கொடுக்க. வாங்கியகனிதனை மந்திராபதியிடந். தாங்கிக்கொடுத்தான் தமிழுடை ஆங்கவன் வாங்கி அடுக்கில் வைத்திட. வீங்கிய மகவாய் வியந்தினி திருக்க. மகவினைத்தாதியர் மன்னன்முன் விடுப்ப. மன்னன் வாங்கி மகவினை நோக்க. அன்னவன் நெற்றியிலிருள் கண்மறைய கண்ணகையென்று காரிகை தனக்குப். பண்ணிய நாமம் பாங்குறவோதி. அதிசயங்கண்டு அரசர்கோமாறன். விதியுடை கௌசிகரை வியப்புடன் கேட்கச். மன்னவரேறே மதுரையளித்திடும். என்ன உரைத்த இயல்மொழிப்படியே. பேழையில் அடைத்துப் பெருகிய

*கெங்கையில். மாளைமகவினை மன்னவன் விடுத்தலும். அருளுடைய வணிகர் தெருவுடைகண்டு கருவடையமகவினைக் கண்ணகையென்ன. நாமம் தரித்து யாமம் வளர்த்தபின் நாமம்புகளுதருந்தி நல்வணிகன். கோவலன்தனைக் குறிப்புடன் வதுவை ஆணவம்கொண்டு காவலரியற்ற. விந்தை சேர்ந்தனன் மீகாமனென்ன. வந்துபிறந்து வாரியிலோடி. அரவுடையமணிக்காய் மாபலவென்று. நிலைபெறு முக்குகர் குலமதைவென்று. பாங்குறு மணிதனை ஆங்கவன் கொணர்ந்து. தாங்கிய பரிபுரந்தான் சமைத்தருளி. மாசற்றர் மைந்தர்க்கு மணமதுமுடித்து. காசாத்தங் கொடுகன்னியர்தன்னுள். வழமுறு வசிய மாதவியாகிய. அழகுடைவனிதை ஆடினளாகி. நாடகமுகித்து ஆடகமளித்துக். கூடியகலிங்கங் கொள்ளைகொடுத்து. மாத்தினையளித்துத் தோற்றபின் வணிகன். காற்றனைக் கொண்டு கலகஞ்செய்திட. நீடியமதுரை கூடலிற்புகுந்து. நாடிய சிலம்பினை கூடலிற்கூற. மறலிதட்டான் வடிவாய்வாழுந். திறனுடைய வணிகனைத் திருடனென்று. மன்னவன் முன்னே அன்னலன் கொடுப்ப. அரசன் மயங்கி ஆமெனவெண்ணி. விரை செறி மளுவால் விறவிசையிற் கொடுக்க. மீண்டும்மளுவாலீண்டுபிளந்திட. ஆண்டகைமாது அம்மனுமெழும்பி. மாறனுடனே வாதுகள்சொல்லி. வீறுடைமதுரை நீறதுவாக்கி. அருளைப்பொழி மதுரை நெருப்பெனயெரிக்க. ஆண்டகைமாது அம்மனுமப்போ. பூண்ட சிலம்பைப்பூமியிலடிக்க. தெறிக்க ஏழுசிவ கன்னிபிறந்து. நெருப்பென மதுரை நீறதுவாக்கி. மந்திரபதியும் மற்றுள்ளபேரும். பாதைநடத்தும் பத்திரகாளி. நீதிநடத்தும் நெறியது கண்டு. வெள்ளியம்பலத்தில் வீற்றிருந்தம்மன். துள்ளிக் கொம்பு விளையாடுஞ் சூதானங்கண்டு. கோவலர் பட்ட கொலைக களங்குறுகி. பாவையர் தானும் பங்கதுவுடனே. கூறுபட்டுக் குறைந்தவுடலை. மீறியபூங்குழல் மின்னார் சுட்டு. அங்கமெடுத்து அலைகடல் போட்டு. திர்த்தமாடி சிவனைநோக்கி. ஏற்றியபூசை அயற்றிடவென்ன. பொருக்கதுவாயபின் பொன்னுலகத்து. இந்திரவிமானத்திந்திரன் வந்து. மந்திரமோதி*

மாது கண்ணகைக்கு. சுந்தரமகளீர் வந்தனை தொடுத்து. ஆசைபுரிந்து அன்புடன் வணங்கி. ஓசைசேர்பந்தல் உகப்புடன் போட்டு. பாங்கரசாணி ஆங்கதுவகுத்து. நடுவொருகாலிடை நாகமிருத்தி. சூடாமணி விளக்குத்தூக்கியபின். அடைவுறு கும்பஞ்சுதாவித்து. பரவியஓமம் பாங்குடன் பண்ணி. பணிவகைச் சேலை அனைவுறவுடுத்து. ஆயிரமிளநீர் அடைவுறப்பரப்பி. தேங்காய்கும்பம் தேங்கிடைவைத்து. மாந்தளிர் கொண்டு சாந்தகம்பிடித்து. திக்குருசிவாகநம வென்று சேபித்து. பதினொருமந்திரம் பாங்குறஓதி. சிவகாயத்திரியால் வாசாயத்து. கண்ணகை தனக்கும் கன்னியர் தனக்கும். பண்ணிய ஆகமம் புண்ணியஞ் செய்து. தந்திர மந்திரம் சந்ததமோதி. கரும்பும்பூவும் கவின்பெறப் படைத்து. அழகியவெற்றிலைபாக்குடன் அள்ளி. வளமையாயிரம் வகைபெறப்பரப்பி. பாங்குடன் பந்தல் பல சோடித்து. அங்கவற்கர்ச்சனை ஆற்றிய பின்னர். மண்டபந்தன்னை வகைபெறமெழுகி. பூண்டரீகத்தாற் புரோசித்தபின். தற்பனை மும்முறை தானதுபோட்டு. கற்பனை மந்திரம் கவின்பெறவோதி. பதினொருகும்பம் பாங்குறவைத்து. நன்னிலந்தன்னில் சென்னலைப்பரப்பி. பிரணவமந்திரம் பேர்பெறவெழுதித். தருப்பை நாலுசதுரம் படைத்து அருக்கிய உபாத்திய மடைவினிற்கொடுத்து. வெள்ளை விரித்து வியநீர் தெளித்து. தெள்ளியநறுமலர் சீர்பெறப்பரப்பி. மாங்கனிவைத்து மனம் பூசித்து. அக்கினிச்சிலம்புக்கு அபிஷேகம் செய்து. படிக்குமிளநீர் கதலியின் பழமும். விரும்பியதேனும் விறல் பசும்பாலும். தேசிக்கனியும் சிறந்தநல் லெண்ணையும். பூசியமந்திரத்தாற் புரோசித்தபின்பு. அம்மானைபந்து அழகியசீப்பும். கைமாக்கவரியும் கைவளைப்புரியும். மோதிரவகையும் மூரியவளையலும். ஆபரணாதி அடைவுடன் வைத்து. மாதனம் பட்டுவடிவுறச் சாற்றி. கண்ணகை தனக்கும் கன்னியர்தனக்கும். வண்ணமாகுளலி மாதவிக்கும். மாறன்தேவி மந்திராபதிக்கும். ஆச்சியர் தனக்கும் அனைத்துள்ளபேர்க்கும். ஆகாசபத்தினி ஐம்பத்தொருபேர்க்கும். தோதகப்பத்தினி தொள்ளாயிரம் பேர்க்கும். சுத்துள்ள கன்னிமார்

தொள்ளாயிரம்பேர்க்கும். மோகக்குளலி மூவாயிரம்பேர்க்கும். பாகம்பெறவே பழமும் வெற்றிலையும். ஏர் பெற மடைகள் சீர்பெறப்பரப்பி. மங்கலர் விறுமன் வயிரவன்பூதன். கிங்கிலியர் மாத்தண்டர் கின்னரியக்கர். இங்கிவை முதலா யெண்ணாயிரவர்க்கும். தங்கியமடைகள் பாங்குறவைத்து. மூவேளுமூக்குத்தாவினைக்கரகம். பாவினைபண்ணித் தானங்கு வைத்து. அடைக்கரி வைத்து ஆசாலஞ்செய்யும். படிபாஞ் சிறஞ் சிப் பொலி கொள்ளும். பத்திரகாளிக்குப் பரப்புமடையும். பன்னீராயிரம் பரிவுடன் வைத்து. திசைகள்தோறும் திருவிளக்கேற்றி. மிசைபடுமங்கலமியற்றி ஆர்த்திட. மூலமந்திரமுந்நூற்றெட்டும். சீலம்பெறவே செபித்தருள்பின்னர். சருவம்பூசிச்சாற்றி வெண்ணீரு. திருவளர் காப்புச்சிறப்புடன் கட்டி. தீபதூபஞ் சிறப்புடனெடுத்து. மூவகை மந்திரம் முயற்சியிலோதி. சுத்தெங்கும் வெள்ளைசூழ் வரப்பிடித்து. அக்கினிபூசை அடைவுடன் செய்து. தக்க சருவம் தானதில் வைத்து. அமிர்தம்வார்த்து அமிர்தமந்திரமோதி. தங்கிய அமிர்தம் பொங்கியபின்னர். ஆதிமந்திரத்தாலரிசி போட்டு. கவிஷமுத்திரை கவின்பெறக் கொடுத்து. அன்புறு கல்லை ஒன்பது படைத்து. மற்றுள்ளபேர்க்கும் வகை வகைபடைத்து. நிவேத்திய மந்திரம் நிறைவுலுறவோதி. ஆலாத்தி சுத்தி மேலாப்பெடுத்து. தீபதூபஞ் சிறப்புடன் காட்டி. ஐந்தெழுத்தாலே அருமறையோதி. பஞ்சாட்சரமும் பாங்குடன் செபித்து. மிஞ்சிய வாத்தியம் வியப்புடனொலிக்க. மஞ்சட் சுண்ணம் வகைவகை வைத்து. கஞ்ச மலரும் கவின்பெறக்குவித்து. ஆடகங்கொட்டி நாடகமாடி ஆவியஞ்சிறக்கக் காவியம் பாடி. அளுததுதிய மாறக்குளுத்தியும் பாடி. மங்கலம்பாடி மறைபலவோதி. பங்கயமலர்கொண்டங்க வரித்தறைத்து. இந்திரன் முதலாய் இறஞ்சிய பின்னனர். வந்தவர் தமக்கு வரமது அளித்து. சிந்தை குளிர்ந்து தேவுலகத்தடைந்தனன். இந்தவிதியாலி யற்றினர் பூசை. இந்திரன் போலே இருந்து வாழ்வாரே.

முற்றும்.

## குளிர்த்திப் பானை வைக்கும் மந்திரம்

ஓம் நமோ ஆதிமூர்த்தி சூரிய அம் உம் சிவ நம ஓம் நமோ பிறியுஞ் சிறியுமாதித்தா யாகவுபேதாயா பிரதிட்ச கண்ணா சிவசூரியா அக்கினிதேவா கண்ணகைக்காக மதுரையெரித்தாற்போலவும் ஈசுபரன் திருநெற்றியில் கண்ணாலே பிறந்தநீர் சோதிப்பிறவையுள்ள யாதாமொருவர் செய்த தடைகளெல்லாம் நீறெனவெரித்து சாடியும் பாலும் குறையாமற் பொங்கத் தேசமும் நாடுந்தளைக்க ராசசெங்கோலும்வாழ திங்கள்மும்மாரி பொழிந்து நிறைசென்னலுண்டாகச் செல்வமுண்டாகவேணும் என்னம்மா ஈசுபரித்தாயே சிவாயநம என்று பானை எடுத்து வைக்கவும்.

## குளுர்த்தியின் வரலாறு

குளுர்த்தி வைக்கின்று சாடியில் வண்ணமெழுதி கண்ணகை கோவலன் மாதவி மந்திரபதி ஆச்சிஅம்மை இந்த ஐந்து பேரையும் சாடியை வளைத்து உருவமாக எழுதி சாடிக்குள்ளே போடுவது. ஆவினுடைய மலஞ் சலம் அறுகு மஞ்சல் தண்ணீர் அதற்கு மேலே தாமரைப்பூ இதழிதழாக எடுத்து தண்ணீரிற் பரப்பி குளிர்த்திலாடுவது. தீர்த்மெறிவது தாமரைப்பூவாலே நெட்டி கூடப்பூவில் இருக்க இப்படிச்செய்து வரவும். கண்ணகையுடைய தாயார் போதிருவுடையார் தகப்பன் மானாகர் கோவலருடைய தாயார் போபுத்தியில் வித்தைவல்லலி தகப்பனுடைய பெயர் மாசாத்தார் கண்ணகைக்கும் கோவலர்க்கும் திருமணம் வதுவை முடிக்கிறபோது கூனற்பண்ணினார்கள் அந்த கூனற்பலகை அறியாதவர்கள் கோயிற்படிகடக்கொண்ணாது அந்தக்கூனற் பலகை ஆகிறது கன்றீணாத மாட்டின் சாணி நிலத்தில் விழாமல் வெள்ளைப்பிடவையிலேந்தி நாலுபுறமுஞ் சரிவர ஒருமுழச்சதுரம் வகுத்து உயரம் ஐந்து விரற்கடைபீடஞ்செய்து அதின்மேல் சந்தனத்தினாலே ஐந்து விரற்கனம் பீடம்செய்து அதின்மேலே மஞ்சல் ஐந்து விரற் கனம் பீடம் செய்து அதின்மேலே மஞ்சள் ஐந்து விரற்கடை பீடம் வகுத்து

அதின்மேலே தாமரைப்பூ இதழிதளாகப் பரவி அதின்மேலே இந்தமுக்கோண சக்கரம்தாவித்து பிரணவம் பண்ணி கும்பத்துக்குள்ள கிறியாங்கமெல்லாம் செய்து அதுக்குமேலே கும்பம் நிறுத்துகிறது தேவவிபூதியின் படிகும்பம் பூசைமுடித்து கும்பம்நிறுத்துகிறபோது பொன் முத்து வெள்ளி பூத்தண்ணீர் சென்னல்கும்பத்துக்குள்ளே போடவும். நெல்லின் திருவும் நீரின் திருவும் பொன்னின் திருவும் பூவின் திருவும். முத்தின் திருவும். திரவிற்திருவும். எல்லாத்திருவும் என்றுமே எழுந்தருளி நிற்கச்சிவாகா.

**கும்ப மந்திரம்**

ஓம் வான்சாரசே வருண துங்கவியனங்க சரோருக கந்தயோக பண்டிதபரம கிவாயாநம.

**தூபம் கொடுக்க**

ஓம் சிவாயநம.

**விபூதி சாற்ற**

ஓம் கும்பேசு பராய நம.

**பத்திரம் சாற்ற**

ஓம் பத்திரம் நம.

**புஷ்பம் சாற்ற**

ஓம் புஷ்பம் நம.

**சந்தனம் சாற்ற**

ஓம் கெந்தம் நம.

**மஞ்சள் சாற்ற**

ஓம் கேசவாயா நம.

**ஆலாத்தி ஏற்ற**

ஓம் சங்ஙாயா நம. ஓம் விக்கினேசுபராய நம. ஓம் திருவிக்கிரமாயனே நம. ஓம் அம்மனே சிவாயநம. என்று வணங்கவும்.

**காயத்திரி**

ஓம் கிறியும் காயத்திரிதேவி சந்தயீசுபரி சிவாகா

*சாபம் நீக்க தீர்த்தமெடுக்க*

*ஓம் சிவநிசிவாகா. தீர்த்மெடுத்துச் கத்தி கையிற் கொடுத்து மடியில் வைத்து சாபம் நீக்குக.*

*ஓம் சிறியும் சிறியும் சுருங்க சுருங்க சாபாயா சாபாயா அமிர்தம் அமிர்தேசுபரி என்று மூன்று தரஞ்சுத்தி பண்ணி விபூதியுஞ் சாத்தி முன்னேவைத்துக் கொண்டு கிண்ணத்திலே .*

*மூன்றுகோடிட்டு உள்ளே விட்டுவிட்டு அந்த சுத்தியை கடக்க வைத்துவேறேயொரு கத்தியெடுத்து ஆயிமந்திரஞ் சொல்லி கணபதி சிவாகா நம என்று ஒரு கால் இருதயத்திலே போட்டு பின்னும் ஆயிமந்திரஞ்சொல்லி கணபதி சிவாகா நம. என்று ஒருக்கால் இருதயத்திலேபோட்டு பின்னும் ஆயிமந்திரஞ்செல்லி அங்அங் சுப்பிரமணிய நம. என்று இருதயத்திலேபோட்டு இன்னும் ஆயிமந்திரஞ்சொல்லி வயிரவ ஆபத்தாரணய சிவாகா. என்று இருதயத்திலேபோட்டு இன்னும் ஆயிமந்திரஞ்செல்லி ஓம் வாலதிரிபுரசுந்தரி என்னம்மா என்று இருதயத்திலேபோட்டு நெய்வேத்தியங் கொடுத்து இன்னும் ஆயிமந்திரஞ்சொல்லிச் சாபம் நீக்கி உள்ளும் புறமும் சுத்தாங்கம் பண்ணவும்*

*ஓம் அர அர சிவ சிவாயநம.*

*ஓம் சுர சுர நம சிவாயநம.*

*ஓம் அர அர மசிவாயநம.*

*ஓம் அர அர சிவாயநம.*

*அர அர மசிவாய நம.*

*அர அர யனம சிவா.*

*ஓம் ஆனந்தமூர்த்தியே நம. ஓம் மகாபரமேஸ்பரி நம. ஓம் ஈசுபரி நம. ஓம் ஐயும் நம. ஓம் கிலியும் நம. ஓம் தீயின் சிரசேசிவாகா. ஓம் ஆனந்தாயி நம. ஓம் சிறுதையாயி நம. ஓம் கிறியும்பராபரி நம. ஓம் சவ்வும் நம. ஓம் கிசாயா நம. ஓம் திரிபுரசுந்தரியே நம. ஓம் வயிரவி நம. ஓம் காயத்திரி நம. ஓம் தீயின் சிரசே சிவாகா. ஓம் காளி நம. ஓம் பத்திரகாளி நம. ஓம் வீரேசுபரி நம. ஓம் விறுமாயி நம. ஓம் ஈசனாயா நம. ஓம் தற்புருஷாயா நம. ஓம் கத்தியோசதாயா நம. ஓம் மத்மாதேவி நம. ஓம் வாமதேவாயி நம. ஓம் கவுஷாயி நம. ஓம் உருத்திராயி நம. ஓம் பரபிறரூபி நம. ஓம் பரமகலியாணி நம. ஓம் கெங்காதேவி நம. ஓம் முக்கண்ணி நம. ஓம் சாம்பவி*

நம. ஓம் சிவசத்தி நம. ஓம் தீயின் சிரசே சிவாகா. ஓம் சரசுபதியே நம. ஓம் மகாலெட்சுமி நம. ஓம் திரிபுரசுந்தரி நம. ஓம் தீயின் சிரசே சிவாகா. ஓம் அங்குட்டப்புராயி நம. ஓம் கிலியும்பத்தியாப்பி நம. ஓம் ஐயும் அனுட்டிகாப்பியாயி நம. ஓம் ஆயி அர அரச்சல் கரட்டி நம. ஓம் தீயின் சிரசேசிவாகா. ஓம் கண்ணகி நம. ஓம் கற்புடையீர் நம. ஓம் பெருகற்பதி யே நம. ஓம் மந்திரபதியே நம. ஓம் தீயின் சிரரேசிவாகா. ஓம் அர அர சிவ சிவாயி நம. ஓம் சிவ சிவாயி ஐயும்கிலியும் இறியுங் கிறியும் கிறியும் கிலியும் சிவா்கக நாகத்தின் கன்னி நம.

றிங்கு றிங்காரி நாகத்தின் கன்னிவாசிவா சிவானத்தேவி திருச்சிலம்புக்குடையவளே அங்கயற் கண்ணி அய்யவாசிவா அர அர சிவாயிவா. இந்தப்படி அம்மனுக்குப் பூசை முடித்து அம்மனைக் கூனப்பலகையிருத்தினார்கள் .கோவலரும் திருத்தாலி அப்போ அணிந்தார்கள் இந்தக்கும்பந்தான் கூனற்பலகையாகின்றது. ஒருகும்பந்தாவிக்கின்றது. கும்பத்தைப்பார்த்தற்போல் சற்பமொன்று உண்டு பண்ணவும். கும்பத்துக்கு நூதன மல்லிகைப்பூ பொளுவாரிப்பூ ஓமச்சப்பூ ஓமச்சவாசக வாரிப்பூ ஓம் வெலிச்சி பூ ஓம் வெவுக்சிப்பூ ஓம் புராண நமஸ்தேவாசி. ஓம் றங்கு றிங்கு வாடி வாடி லெச்சப்பதவி வாடி வாடி சூலகபாலந்தாங்கிய பத்தினி வாடி வாடி சௌவுங்கிலியும். வாடி வாடி நெற்றியிலிட்ட செந்தூரப் பொட்டும் நேரிடை சாற்றிய வயிரவாரிப் பட்டும் பாதச்சிலம்பும் பசும்பொன் மோதிரமும் வலதுகையிற் செந்தாமரைப்பூவும். பிடித்து வடகயிலாயம் விட்டு தென்கயிலாயம் தெட்சண பூமிக்கெழுந்தருள் என்னம்மேசிவாகா. ஓம் ஐயும் கிலியும் வாடி வாடி வாலதிரிபுரசவுந்தரி ஒருகையில் ஒற்றைச்சிலம்பும் ஒருகையிலே மாங்குளையும் பத்தினி கொண்டு பாண்டியனடியில் சிவா சிவாவென தேவி திருச்சிலம்புக்குடையவளே சிவணாகத்தின் கன்னி தவளமாசற்ப மணித்தாள் பவள நிறத்தாள் பரிபுர மாமணி ஐந்தலைக்கன்னியருள் நாக தேவி வந்து எளுவாமணிச் சிலம்படிக்கத்தெறித் தேழு பொரியும் தீயின் சிரசே சிவா சிவானக் தேவி திருச்சிலம்புக்குடைய வளே தெறிதெறி

*முறிமுறி சிவனாகத்தின் கன்னி சிவாதீயின் சிரசே சிறிங்ங கிறிங்க ஐயும் கிலியும் தீயின் சிரசே சிவாகா.*
*இந்தப் படிக்கு பெரியோர்களிடம் கேட்டுப் பூசை விதிகை பாகம் நன்றாகப்படித்து அம்மனுடைய பூசைசெய்யவும். சுபம் நமஸ்து.*

*ஓமம் வளர்த்தால் ராகும் கேதும் இரண்டு சற்பம் ஓம குண்டத்தைப் பார்க்க எழுந்தருளப்பண்ணவும். கூனப் பலகை பூசை விதியுள்ளபடிக்குச் செய்து வர எந்தக்கொம்பையும் முறிக்கலாம். தீயின் சிரசேயென்று வருமிடமெல்லாம் வெற்றிலை பத்திரம் கிள்ளிப்போட்டு கொம்பைமூடப்பண்ணி ஆயிமந்திரஞ் சொல்லித் தெறிக்கவும். இது உண்மை. இவையெல்லாம் பெரியோர்களிடம் கேட்டுப்படிக்கவும்.*

*மன்றாட்டு*

*ஓம் மாதாவே ஈசுபரி அம்மா பழுதற்ற பத்தினியே. கண்ணிற்பிறந்த கனகபத்தினியே. திருமனமுடைய சிவ பத்தினியே. மருமனமுடைய மகாபத்தினியே. கொத்துவின் பூங்குழல் குமரபத்தினியே. பரராசமாமுனி பயின்ற பத்தினியே. மாவின் கனியாய் வளர்ந்த பத்தினியே. தேவர்கள் வந்து திருப்பூசை செய்து திருக்கோவலர்க்கு திருமணம்முடித்த. செல்வபத்தினியே. ஈசுபரியம்மா அன்று கோவலர் பட்டபோது பொன்னின் சரடும் சாகாப்பிரம்பும் தண்ணீரும் கொண்டுதட்டி அரட்டி எழுப்பிய தாயே திங்களொளி மேவிவளர் கண்ணகைக்கும் வெற்றி பெறும் கோவலர்க்கும் புவியில் வளர்ந்த விறுமா மங்களங்கள்தான்பாடி. பொங்கு புகட்கண்ணகையார் பொற்பதியில் வீற்றிருக்கும் மங்கலர்தன் வதனருக்கும் மற்றுந்தேவாதிகட்கும் அங்குள்ள கன்னிமார்களனைவருக்கும் அடைக்கலம் அடைக்கலம் நமஸ்தே நமஸ்து.*

*ஓம் மாதாவே தாயே ஈசுபரியம்மா. உனக்கு வைக்கும் மடையறியேன் மடைப்பிரிவும் நானறியேன். நிற்கும் நிலையறியேன். நின்றுன்னைப் போற்றியேன் சொற்பெரிய மானாகர் துய்யகுலத்தே உதித்தாய். சற்பமணித்தானினைக்கும். தாயே பிழைபொறம்மா சரணம் சரணம் சரணம் நமஸ்தே நமஸ்து.*

ஓம் ஆயி ஆயிர் கலை வல்லி ஆதித்தி பரமயிமாயி மாயாகுண்டலி ஈசுபரி மகிமாமாதங்கி சடங்கி சடங்கி தாரணி ஞானதந்த ரூபி நளினபரிமனி நாத ஓங்கார மந்திரி அய நமஸ்தே. ஓம் நமோவாலாமந்திரி கிடாச்சி மய்யுமுத் யோகினி மதப்பரப்பிர்ம சண்டி வியாழ அக்கினியே பகவதி விகடதடி வீரசத்தி ஓம் வாலா வாலேந்து மகபுயங்க அபிஷேக சுந்தரி காளி கங்காளரூபி நமஸ்தே. ஓம் ஐய்யுகிலியும் ஆனந்தாயி சரணம் நமஸ்தே. என்குருமுன்னிற்க குருவினுடைய சீர்பாதம் தலைமேற்கொண்டேன் சிவமயம் நமஸ்து தாயே. அக்கினிக் கண்ணி ஆகாசக் கன்னி சிமிள்கன்னி நாகமங் கலைக்கும் கண்ணகைஅம்மனுக்கும் துரோபதை அம்மனுக்கும். பேச்சி அம்மனுக்கும். முத்துமாரி அம்மனுக்கும். தார்கோதை அம்மனுக்கும். பாண்டிமாதேவிக்கும். வண்ணமகள் வயத்த மாலைக்கும் காமாட்சி அம்மன் மீனாட்சி அம்மனுக்கும். காத்தவராய சுவாமிக்கும் ஆரியப்பூமாலைக்கும். கறுப்பாகி அம்மனுக்கும் வீபத்திரசுவாமிக்கும். வீரபத்திரகாளிக்கும். ஐயனாருக்கும் பன்னீராயிரங்கோடி பரிகலங்களுக்கும். குருநாதசுவாமிக்கும் கயவாகு வீரபாகு நயினார்க்கும். என்றைக்கும் இடைக்கலம் அடைக்கலம். துந்துருவே துயில்புனைந்தவளே வந்தெம்மைக்காத்து வரமதுகொடுத்துச் சந்தோசமாகத் தாமணி விளக்கே அம்மா சரணம் அயிலொளி விழியே. சரணம் தேவி சரணம்.திருமுறை மாதே சரணம். போர்சிலை எடுத்தாப் போலும் சட்டையிட்டு சட்டைகளத்தினாப்போலும் இடச்சியைப்பார்த்த கண்ணாலும் பார்த்து நெருப்புக்கண்ணை விட்டு நீர்க்கண்ணாலே பார்த்து குன்றாத வாழ்வும் குறையாத செல்வமும் வச்சிரச் சீரமும் மார்க்கண்டனின் ஆயுளும் புத்திர சம்பத்தும் கொடுத்து ரெட்சித்துக் கொள்ளம்மா சரணம் சரணம் அயிலொளிவிழியே சரணம் தேவிசரணம் திருவுறை மாதே சரணம் நமஸ்து.

### கும்பச்சடங்கு செய்யும் முறை

ஓம் றிங்ங றிங்ங றீங்கார நாகத்தின் கன்னி வாசி வாசி வானகதேவி திருச்சிலம்புக்குடையவளே அங்கயற் கன்னி ஐயவாசி வாசியி அகோரசத்தி அர அர சிவாயவா ஓம்

சிறியு மிறியும் ஐயும்கிலியும் சவ்வும் பராசத்தி வாவா உருவேறு திருவேறு வாக்குவாகினி வாலபரமேசுபாரி வருக வருகவேசுவாகா.

ஓம் மகாபரமேசுபரியே நம. ஓம் மகாதேவியே நம. ஓம் வாலபரமேசுபரியே நம. ஓம் மகாசத்தியே நம. ஓம் வாலபரமேசுபரியே நம.

முற்றும்.

ஓம் திருமாலின் தங்கையே. திருஞானக் கலையே. அருள் ஞானவல்லியே. ஆதிசுந்தரியே. துந்துமி குருவே துயில் பரந்தவளே. வந்திருவரைகாத்து வரமது கொடுத்து சந்தோஷமாகத்தாமணி விளக்கே அக்கினிக்கன்னிகைக்கும் இலங்கை மாணிக்கத் தாழைக்கும் முன்னோடி பின்னோடிக்கும் கெங்கை வயிரவருக்கும் அபயமடைக்கலம் அப்புத்தணி லெப்புத்தணி சுரந்தணி என்றும் கெங்காபரமேசுபரித்தாயே தணியம்மாதணி.

**பூரணகும்பம் வைக்க இந்த அட்சரம் போட்டு வைக்கவும்**

ஓம் ஐயும்கிலியும் சவ்வும்கிலியும் ஐயும்வாக்குவாகினி வாலபரமேசுபாரி வாலலெட்சுமி அகோரமாரி அகோரம் கொண்டேறம்மா ஏறு ஆதிபராசத்தி ஆ இ இங்கே வா அம்மா வா.

**குளிர்த்தி மங்களம்**

ஓம் சிறி மங்களம். சிவ சிவா திருமங்களம் செந்தாமரைமாதே மங்களம். அட்டலெட்சுமி ஆதிகண்ணகை அம்மையே திருமங்களம். கங்கைபயிரதி திங்கள்வேணி கண் கார்மதி திருமங்களம் .கன்னியுமை திருவன்ன மின்னிடை கண்ணகை திருமங்களம் வால மதுரையை நீறு என எரித்தகுழல் மங்கையே திருமங்களம் வடிவிலேழுகலை முனிவர் சூழவரும்மங்கையே திருமங்கலம் விண்ணவர்ரசையில் நன்னிய அரசர் விதித்த விதிப்படி ஒண்ணுதலுரை திரு அண்ணலர் தன்னருள் கண்ணகை குளிர்வாயே. மாறனையெரிசெய்து வீறது தவிரவும் மகளருள் பெறவே சிறிமது ரையை நீரென வருமொருதேவி குளிர்வாயே.

கொங்கலரணி குழல் மங்கையர் பலர்கொண்டு தொழுதிடவே திங்கள் நிறைந்த குழலாளே குளிர்வாயே. ஆணிலுமழகுள்ள நீலவணிகேசனை அருள்வதை செய்திடவே மாநிலம் மகிழவும் வாதுமுடித்தருள் மானே குளிர்வாயே.

**மங்களம்**

அட்டலெட்சுமி சர்வமங்களம். ஆதிசங்கரி மங்களம். ஆதிபூரணி அன்னலெட்சுமி அத்திரி சிவ மங்களம். காரணி சிவபூரணி புகழ்கங்கையே. திருமங்களம். கண்ணகை திரு அன்னமின்னிடை கமலையே திருமங்ளம். மாறன்மதுரையை நீறெனத்தாக்கிய மங்கையே சிவமங்களம். வணிகாரன் மகளாகி வந்தருள் மங்கையே சிவமங்களம். கங்கைவேனிதன் லெட்சுமி சரசோதியே சிவமங்களம் சத்திதிரிபுரை ஆதி கண்ணகைத்தாயாரே திருமங்களம் இந்திராதி பரிபூசை கொண்டருள் பூரணி வாழ்க வாழியதே.

**அபிஷேக மந்திரம்**

வேதாகம வீராகமப்படி விதித்த முக்கனி சர்க்கரைத்தேன் கோதார நாதன் அருள் எண்ணெய் இளநீர் கெந்தமுறு சாந்தம் சாந்து புனுகு சவ்வாது பாதரவிந்த மிகுபகருபஞ்ச காவியத்தோடு பரிந்தடிமை செய்திடுவமே ஆதாரமான பொருளென சிவரூபமே அபிஷேகமாடவாராய். அங்கமது தங்கிவளர் எங்கள் சிவலிங்கமே அபிஷேகமாடியருளே. ஆனதொரு சிவசமய யீசுபரிலிங்கையனே அபிசேகமாடியருளே அபிசேகம்மாடியருளே

**அபிசேகம் முடிந்தபின் ஒவ்வெருவருக்கும் தண்ணீர் ஊற்றுதல்**

ஓம் காயாத்திரியே நம.
ஓம் சிவ காயாத்திரியே நம.
ஓம் சிவபஞ்சாட்சர காயாத்திரியே நம.
ஓம் உத்தண்ட காயாத்திரியே நம.
ஓம் சருவ காயாத்திரியே நம.

பத்ததிஉபயம்:

உ. வீரக்குட்டி கன்னன்குடா.



...............தமிழகத்திலும், கேரளாவிலும் இலங்கைவாழ் சிங்கள,தமிழ் மக்கள் மத்தியிலும் ஆழ வேரூன்றியுள்ள ஒரு தொன்மமாக நாம் கண்ணகி கதையைக் கருதலாம். இத்தொன்மத்து க்கு ஒரு நீண்ட வரலாறுண்டு. வாய்மொழியாகப் மிகப்பழங்காலத்தில் வழக்கிலிருந்த ஒருமுலை இழந்த பெயர் தெரியாத ஒரு பெண்ணின் கதை. "ஒரு முலையறுத்த திருமாவுண்ணி" என்று சங்க இலக்கியங்களில் எழுத்திற் பதிவு செய்யப்பட்டு பின் சிலப்பதிகாரமாக அலர்ந்து கண்ணகி வழக் குரையாக மலர்ந்த ஒரு பெரும் வரலாறு இக் கண்ணகி தொன்மத்திற்குண்டு.

மகாபாரத இராமாயண இலக்கியம் போல கண்ணகை அம்மன் இலக்கியம் என ஒன்றை நாம் கிழக்கிலங்கையில் காணமுடியும். கண்ணகி வழக்குரை, குளுர்த்திப்பாடல், மழைக்கா வியம், வசந்தன் பாடல்கள் என்பவற்றுடன் கண்ண கையம்மன் பற்றிய காவியம், சிந்து, அகவல், பிரா ர்த்தனை, கண்ணகை அம்மன் பத்ததிகள் என்பன வற்றை இணைத்து கண்ணகை அம்மன் இலக்கியம் என ஒன்றைப்பற்றி நாம் சிந்திக்கலாம்.

கண்ணகை அம்மன் பற்றி கிழக்கிலங்கையில் வழங்கும் வாய்மொழிக் கதை களையும் கண்ணகை அம்மன் கோயில் சம்மந்தமான கதைகளையும் திரட்டுவதுடன் தமிழக, கேரள சிங்கள கதைமரபுகளுடன் இவற்றை இணைத்து ஆராயலாம். தென்கிழக்காசிய நாடுகளிலும் இவ்வழிபாடு பரவியுள்ள முறைபற்றியும் நோக்கலாம். அத்தகைய ஓர் ஆய்வு முயற்சியைத் தூண்டுவதாகவும் இத் தொகுப்பு அமைந்துள்ளது.

முன்னுரையிலிருந்து.............

பேராசிரியர் சி. மௌனகுரு
கிழக்குப் பல்கலைக்கழகம்,